Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 26 வெள்ளிக்கிழமை (08.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 251


தயாரித்து 500 வருடமாகிவிட்டது (08)

ஆயுள் இன்னும் 5 வருடங்கள் (17)




பாதுகாப்பு பாதுகாப்பு பாதுகாப்பு (10)


தமிழ் மக்களுக்கு மாற்றுத் தலைமை (11)

திங்கள் முதல் மீண்டும்... (03)



## யாழ்.போதனா மருத்துவமனையில்
# கர்ப்பிணித் தாய்மார் மரணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் பிரசவத்தின் போது தாய்மார் மரணமடையும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பிரசவத்தின் போது ஐந்து தாய்மார் மரணமடைந்துள்ளனர். பிரசவத்தின் போது தொடர்ச்சியாக தாய்மார்களின் இறப்புக் குறித்து பல்வேறு தரப்பினர் வைத்தியசாலை மருத்துவர்கள் மீது குற்றம் சாட்டியுள்ளார்கள். வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் தரமற்ற மருத்துவ சேவை காரணமாகவே இவ்வாறான உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட தாயார் குழந்தை பிறந்தவுடன் இறந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

கொட்டடி மீனாட்சியம்மன் வீதிப் பகுதியைச் சேர்ந்த ரஞ்சித் கலாஜோதி (வயது-34) என்ற தாயார் பிரசவ வலி ஏற்பட்டவேளை யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் பிரசவ விடுதிக்கு கொண்டு செல்லப்பட்டு மயக்க மருந்து ஏற்றப்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சையின் பின்னர் தாயார் மயக்கநிலையில் இருந்தபோதும் சுயநினைவுக்கு வரவில்லை. அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டவேளை குழந்தை பிரசவித்த தாய் இறந்துவிட்டார். பிரசவம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகா வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரின் செயலாளரான ஓய்வுபெற்ற கெப்டன் சேனக ஹரப்பிரிய டி சில்வா ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணையை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கின் இரண்டாம் பிரதிவாதியான சேனக ஹரப்பிரிய டி சில்வா நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. சுகயீனம் காரணமாகத் தமது

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரேத அறையின் குளிரூட்டிகள் உறக்கம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் தொழிற்பட்டு வந்த நான்கு குளிரூட்டிகளில் மூன்று பழுதடைந்திருப்பதன் காரணமாக அங்கு இறந்தவர்களது உடலைப் பாதுகாத்து வைப்பதில் சிக்கல் நிலை தோன்றியிருக்கின்றது.

நான்காவது குளிரூட்டியும் சாதாரணமாகவே செயற்பட்டு வருவதன் காரணமாக இந்நிலை மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே பழுந்தடைந்த குளிரூட்டிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அதுவும் முற்றுபெறாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக உடற்பரிசோதனைக்கென சடலங்களைப் பாதுகாத்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட வைத்தியசாலை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இவ்வாறு பாதுகாத்து வைக்கப்பட்ட உடல் ஒன்று பழுதடைந்து போயிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். யுத்தகால சூழ்நிலையின் பின்னர் இந்த வைத்தியசாலை நல்ல நிலையை அடைந்துவரும் வேளை, இவ்வாறான விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் பல மட்டங்களில் இருந்தும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

## முதியவர்களுக்கு 1000 ரூபா ஆரம்ப நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

சமூகசேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் சமுர்த்தி மற்றும் பொதுசன மாதாந்த உதவு தொகை பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 1000 ரூபா உதவு தொகை வழங்கல் மற்றும் விசேட தேவையுடையோருக்கு வீடு

(19) ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை பேணல் இதுவே முன்னுரிமை
### அமெரிக்க தூதுவர் வலியுறுத்தல்

(கொழும்பு)



தனது நிகழ்ச்சிநிரலில் மனித உரிமைகளுக்கு முன்னுமை வழங்கப்படும் என இலங்கைக்கான அடுத்த அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள மிசேல் சிஸன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறியதாக கூறப்படும் கடுமையான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இன்னமும் விசாரணை நடைபெறவில்லை எனவும், நல்லிணக்க நடவடிக்கைகள் தாமதமடைவதாகவும் அவர் கூறினார். பொறுப்புக் கூறுதல் இன்றி ஒருபோதும் உண்மையான

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் முஸ்லிம்களை மீள் குடியமர்த்துங்கள்
### கிழக்கு மாகாண சபையில் தீர்மானம்

(கொழும்பு)

விடுதலை புலிகளினால் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீள்குடியேற்ற வேண்டுமென்ற பிரேரணையொன்று கிழக்கு மாகாணசபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்ற போது, மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைரினால் இப்பிரரேணை முன்வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீள்குடியேற்ற

(19) ஆம் பக்கம் பார்க்க

# சனல்-4 நடவடிக்கைகள் எம்.ஐ-6 க்கு நன்கு தெரியும்
### திவயின் தகவல்

(கொழும்பு)

சனல்-4 ஊடகவியலாளர் சிராணி சபாரட்ணத்தின் இரகசிய இலங்கைப் பயணங்கள் தொடர்பான தகவல்களை "எம்.ஐ-6" என்று அழைக்கப்படும் பிரித்தானியப் புலனாய்வு நிறுவனம் அறிந்திருக்கிறது என்றும், யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் இந்த ஊடகவியலாளர் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்து பல தகவல்களைத் திரட்டிச் சென்றிருப்பதாகவும் 'திவயின' என்ற சிங்க நாளிதழ் தகவல் வெளியிட்டுள் ளது.

இலங்கைக்கு வந்த சமயம் விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட சனல்-4 நிறுவனத்தின் .ஊடகவியலாளர் சிராணி சபாரடணத்திடம் 5 கடவூச்சீட்டுகள் இருப்பதாக இலங்கை பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக திவயின மேலும் தெரிவித்துள்ளது. இவரும், அவரது கணவரும் தனித்தனியாக இலங்கை சென்றிருந்தாக குற்ற விசாரணைப்பிரிவின் அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். சிராணி சபாரட்ணம், வன்னி மோதல்கள் நடந்தபோது, இலங்கை சென்றிருந்த போதிலும் எவரும் அவரை கவனம் செலுத்தியிருக்கவில்லை என உயர்மட்ட தரப்புத் தகவல்கள நேற்று தெரிவித்தன.

(19) ஆம் பக்கம் பார்க்க

# தெரிவுக்குழுவில் ஐ.தே.கட்சி பங்குபற்றாது



இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசால் முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பங்குபற்றாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற குழுவின் கூட்டத்திலேயே இந்த விடயம் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டதாக அக்கட்சியின்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வல்வை மகளிரில் இன்று வாசிப்பு முகாம்

## மொழித் திறனை மேம்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் இடை நிலைப் பிரிவு மாணவர்களின் தமிழ் மொழித் திறன் மற்றும் நூலகப் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் முதல் கட்டமாக வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் இன்று வாசிப்புத் திறன் முகாம் நடைபெறுகின்றது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொது நூலகமும் வல்வை மகளிர் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வாசிப்பு முகாமில் ஆறாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களும், அவர்களுடைய பெற்றார்களும் பங்குபற்றுகின்றனர்.

இம் முகாம் செயற்பாட்டை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆரம்பித்து வைக்கின்றார்.

இன்று வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள வாசிப்பு முகாமில் கலந்து கொண்டு மாணவர்களின் மொழி விருத்திச் செயற்பாட்டை ஊக்குவிக்குமாறும் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றார்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் திருமதி.ம.சேதுலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இச்செயற்பாடு கட்டம் கட்டமாக வலயக் கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலுடன் ஏனைய பாடசாலைகளிலும் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக நகர பிதா நடராஜா அனந்தராஜ் தெரிவித்ததுடன், இம் முகாம் செயற்பாட்டிற்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும், வாசிப்புத் திறனை மேம்படுத்த உதவும் நூல்களையும் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் நூலகப் பிரிவு வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## குறுக்கே பாய்ந்த நாயால் விபத்து

மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் ஓடியதால் மோட்டார் சைக்கிள் சறுக்குண்டு குருநகர் டேவிட் வீதியைச் சேர்ந்த ரஜிகரன் (வயது - 18) என்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி தேவஸ்தான புதிய அறங்காவலர் சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.தயாகரன், செயலாளராக மு.கணேசானந்தன், பொருளாளராக சி.ரதீஸ்குமார், உபதலைவராக அ.சுப்பிரமணியம், உபசெயலாளராக கு.சிறீகானந்தன் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளராக ச.குணபாலசிங்கம் ஆகியோரும் உறுப்பினர்களாக 9 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஆணி விழுங்கிய மாணவன் தீவிர சிகிச்சைப் பிரிவில்

(யாழ்ப்பாணம்)

சிறிய ரக தொப்பி ஆணியை விழுங்கிய மாணவன் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் அனுராசா அருண் (வயது - 6) என்ற அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த மாணவனே இவ்வாறு ஆணியினை உட்கொண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம்மாணவன் கடந்த புதன் கிழமை மாணவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கையில் இந்த ஆணியை விழுங்கியதாகவும் இருந்தும் கடந்த வெள்ளிக் கிழமையே வீட்டாருக்கு இவ்விடயம் குறித்து தெரியப்படுத்தியதாகவும் தெரியவருகின்றது.


பெற்றோரும் காலம் தாமதித்தே யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாணவனை அழைத்து வந்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (பா)

## மஹோற்சவத்தையொட்டி மணல் பரவ ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா நாளை ஆரம்பிக்கப் படவுள்ளமையை முன்னிட்டு ஆலயச் சூழலில் பல்வேறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் ஆலய வெளி வீதி சுற்றுப் பிரகாரம் சேதமடைந்து காணப்படுகிறது.

இதன் காரணமாக ஆலய உற்சவ நிகழ்வுகளின் போது பக்தர்கள் அங்கப் பிரதட்சணம் செய்வதற்கு ஏற்ற வகையில் ஆலய வெளி வீதி சுற்றுப் பிரகாரத்தினை மணல் பரவி சீர் செய்து தருமாறு ஆலய நிர்வாகத்தினர் யாழ். மாநகர சபையிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க மேற்படி ஆலயத்திற்கு நேரடியாகச் சென்ற யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈழ



மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) மற்றும் மாநகர சபை உறுப்பினர் ராஜதேவன் ஆகியோர் ஆலய வெளிவீதி சுற்றுப் பிரகாரத்தினை பார்வையிட்டிருந்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு இணங்க யாழ். வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வெளிவீதி சுற்றுப் பிரகாரத்துக்கு மணல் பரவுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

## யாழ். நகரில் 'வாள்' தயாரிப்பவர் யார்? வலை வீசி தேடுதல் நடக்கின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடம் வீதி வாள்வெட்டுச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகள் இருவரையும் சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட வாள்களை தயாரித்த நபரையும் தேடி யாழ். பொலிஸார் வலை விரித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் மோதல் சம்பவங்களில் அதிகமாக வாள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பலர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்து வருகின்றனர்.

இவ்விடயம் பொதுமக்களிடத்தில் மிகுந்த அச்சத்தை தோற்றுவித்திருத்திருக்கின்றது.

யாழ். மடம் வீதி சம்பவத்தின் போது பெருமளவு வாள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பொதுமக்களிடத்தில் உள்ள அச்சத்தை மேலும் அதிகரித்திருக்கின்றது.

இது தொடர்பாக பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இதனையடுத்து யாழ். நகரில் நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகளையும் வாள் தயாரித்து விற்பனை செய்பவரையும் வலை விரித்து தேடிவருவதாக யாழ். பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## மஹோற்சவம்

சரவணை பள்ளமபுலம் அருளமிகு முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்களுக்கு உற்சவங்கள் இடம் பெறவிருக்கின்றது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், 4 ஆம் திகதி திருக்கல்யாண திருவிழாவுடன் உற்சவங்கள் நிறைவடையவிருக்கின்றன. (05)

## முருகன் சிலையை காணவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவேகானந்த நகரில் உள்ள முருகன் ஆலயத்தில் ஐம்பொன்னால் ஆன முருகன், வள்ளி, தெய்வானை எழுந்தருளி சிலை கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு காணாமற்போயுள்ளது.

நேற்று முன்தினம் காலை கோயிலுக்கு வழிபாட்டிக்காக சென்ற அடியவர்கள் அவதானித்து கோயில் அர்ச்சகரிடம் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (77)

## ஒரே தினத்தில் 3 வீடுகளில் திருட்டு

திருமண வீடொன்றில் 4 ஆம் சடங்கு கொண்டாட்டம் முடிவடைந்து திருமணப் பந்தலில் படுத்துறங்கிய பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை மர்ம நபர் ஒருவர் திருடிக்கொண்டு ஓடி மறைந்துள்ளார்.

அல்வாய் மேற்கு திக்கம் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 3.00 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பந்தலில் படுத்திருந்த பெண்ணின் கூக்குரல் கேட்டு விழித்தெழுந்த உறவினர் விடயமறிந்து குறித்த திருடனை பிடிக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே தினத்தில் குறித்த வீட்டிற்கு 200 மீற்றர் தூரத்திலுள்ள இன்னொரு வீட்டில் சைக்கிள் மற்றும் டிவிடி பிளேயர் என்பனவும் திருட்டுப் போயுள்ளது. இன்னொரு வீட்டில் 13 கோழிகளும் களவு போயுள்ளது. (116)


## காணவில்லை

**வேலணை மேற்கு, 8 ஆம் வட்டாரம், அம்பிகை நகர், வேலணையைச் சேர்ந்த சிவராசா மனோகரன் என்பவரின் பேர்ஸ் வேலணை வங்களாவடி சந்திக்கும், பண்ணை வீதி கொட்டடிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறி வீழ்ந்து விட்டது. அதில் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் உட்பட HNB, Commercial Bank ATM அட்டை, ஒருதொகைப் பணம் உட்பட இருக்கின்றது.**

**கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கு அல்லது 0779081337 அல்லது 0772959833 அல்லது 0771248111 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறியத்தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். ஒப்படைப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

(C/1574)



## பாராட்டி வாழ்த்து



**மணி விழா கண்ட எமது மக்களில் ஒருவரான உயர்ந்த கீ.பி எனும் உயர்திரு**

**பசுபதி சீவரத்தினம்**

**(பனை அபிவிருத்தி சபைத் தலைவர்)**

எமது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய **மாண்புமிகு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா** ஐயா அவர்களின் மிக நம்பிக்கைக்குரியவர் ஆவார்.

ஆணவம், அதிகாரம், பெருமை கொள்ளாதவர். சிரித்து சிரித்து எவருடனும் பேசக்கூடியவர். அவரை மனமுவந்து அன்போடு பாராட்டும்.

**லாலா சோப் உரிமையாளர்**

(C/1616)

தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.

- முதுமொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல: 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## இரத்தத்தால் எழுதப்பட்ட கறை!

"வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவமானது இரத்தத்தால் எழுதப்பட்ட கறையாகும், அவற்றை அகற்றி எமது உறவை புதுமைப்படுத்த தற்போது நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது" என்று தழிரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று கொழும்பில் இடம்பெற்ற "வேர் அறுதலின் வலி" கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதைக் கூறியுள்ளார்.

இராமாயணக் கதாபாத்திரம் கும்பகர்ணனுக்குக் கூட ஆறு மாதங்களுக்கொரு தடவை விழிப்பு வருவதாகச் சொல்கிறது அந்தக் காப்பியம். இது பன்னிரண்டு வருடங்களின் பின்னான திடீர் விழிப்பு! சுளகு தனக்குத் தனக்கென்றால் படக்குப் படக் கென்னுமாம்! அடுத்துக் கைப்பற்றிக்கொள்ள வேண்டிய கதிரைகளுக்கு முஸ்லிம்களின் தயவு மாவையாருக்குத் தேவைப்படுகிறது போலும்!

'இரத்தத்தால் எழுதப்பட்ட கறை' என்று என்னமாய் ஒரு உணர்ச்சிகரத்தைப் பிழிந்திருக்கிறார்!! மாவையும் தமிழரசுக் கட்சியினரும் இரத்தக் கறை படியாதவர்கள் அது பிடிக்காதவர்கள் என்பதால், அந்தக் கறை வேறு யாராலோ வந்ததாகத்தான் உணர்ந்து, முஸ்லிம்கள் மத்தியில் நின்றபோது அவருக்கு உணர்ச்சி பொங்கி வந்திருக்க வேண்டும்.

உணர்ச்சிவசப்பட்ட போதும் கவனமாக வெளியேற்றியவர்கள் பெயரை உச்சரிக்கவில்லை. அதை உச்சரித்தால் தமிழ்மக்கள் உணர்ச்சிவசப்பட்டு வாக்களிக்காமல் விட்டுவிடுவார்களோ என்ற பயமும் ஒருபக்கம் இன்னும் இருந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

"மட்டக்களப்பில் இருந்த போது என்னை வந்து பார்த்து எனக்கு உணவு கொடுத்தவர்களில் முஸ்லிம்கள் அதிகமானவர்கள். அவர்களது உணவின் இரத்தம் இன்றும் எனக்கு ஞாபகமிருக்கின்றது" என்றும் அந்தக் கூட்டத்தில் கண்ணீர் மல்கி இருக்கிறார். கிட்டத்தட்ட எண்பதாயிரம் 'முஸ்லிம்கள் ஒரே இரவில் உடுதுணிகளுடன் அநாகரிகமாய் விரட்டப்பட்ட போது, கிழக்கில் வகைதொகையில்லாமல் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட போது வர்ரத கண்ணீர் கிழக்குக்குத் தேர்தல் வரப்போகிறது என்றவுடன் தானாய்ச் சொரியும் அதிசயத்தை கூட்டத்தில் முஸ்லிம்கள் பார்த்து வியந்திருப்பர்.

தமிழர்கள் இனியும் வியப்பதற்கு ஒன்றுமில்லை. தமிழரசுக் கட்சியின் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றவர்கள் கொல்லப்பட்ட போதும், ஏனைய இயக்கத் தலைவர்கள், தமிழ்ப் பெடியள்மார் என்றெல்லாம் தமிழர்கள் பலர் கொல்லப்பட்ட போதும் இவர்கள் கண்ணீரைக் காட்டாமல் வைத்திருந்தார்களா அல்லது கொடுப்புக்குள் சிரிப்பைக் காட்டாமல் வைத்திருந்தார்களா என்பதெல்லாம் தமிழ் மக்கள் ஊகிக்க முடிந்ததுதான்.

அந்தக் கூட்டத்தில் அத்தனை உணர்ச்சிகரமான பேச்சுக்கு இடையில், வழமைபோல் மற்றவர்களை ஒன்றுந் தெரியாதவர்கள் என்று நினைத்துக்கொண்டு சில ஜோக்குகளைச் சொல்லவும் மாவை தவறவில்லை. "இந்த நிகழ்வில் அமைச்சர் றிசாத் பதியுதீன் கலந்து கொண்டுள்ளது மகிழ்ச்சியான விடயம். ஏனெனில் அவரும் தமது மண்ணிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டு அரசியலுக்குள் வந்தவர். அதே போன்று நானும் எனது யாழ் மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் கழிந்துள்ளது. இன்று எனது பிரதேசம் விடுவிக்கப்பட்டிருந்தாலும், எமது தமிழ், முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் முற்றாக இடம்பெறாத நிலையில் அங்கு எனது மீள்குடியேற்றம் இடம்பெறாது..." என்றும் விட்டார் அதிரடி ஜோக்.

இப்படியாக ஜோக்குகளும் நீலிக் கண்ணீர் வடிப்புகளுமாக நாற்காலிகளைப் பிடிப்பதொன்றையே வாழ்நாள் வேலைத்திட்டமாக வைத்திருப்பவர்கள்தான் தங்களைத் தமிழ்த் தலைவர்களாகவும் பெயர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் இந்தத் துரதிர்ஷ்டம் என்று மாறும்?

– ஆசிரியர்

# கூட்டமைப்பு - அரசு இணக்கம் ஏற்பட்டால்
# ஐ.தே.க. தெரிவுக்குழுவில் இடம்பெறும்

### ஜயவிக்கிரம பெரேரா எம்.பி தெரிவிப்பு

அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்படும் வரை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு பிரதிநிதியை, பெயரிடப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஒரு இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி பல தடவைகள் அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ள போதும், அரசு கண்டுகொள்ளாதிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் இது குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

இந்த விடயம் அரசாங்கம் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வரை நாடாளுமன்ற தெரவுக் குழுவுக்கு பிரதிநிதியை பெயரிடுவதைத் தவிர்க்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதென அவர் குறிப்பிட்டார்.

## கும்பாபிஷேகம்

போரினால் முற்றாக அழிவுகளைச் சந்தித்த நிலையில் இருந்த பூநகரி - சோபாலபிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மீளமைப்பு வேலைகள் இடம் பெற்று வருகின்றது.

எதிர்வரும் ஆனி உத்தர தினத்தன்று கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்து கலாசார திணைக்கள நிதியுதவியின் மூலம், புலம் பெயர்ந்தோர் நிதியுதவியுடனும் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கும்பாபிஷேக விழா பற்றி ஆராய்வதற்கான பொதுக் கூட்டம் ஆலய மண்டபத்தில் இன்று பி.ப 4.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தனால் அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

# பொன்சேகாவின் வழக்கை தொடர்வதற்குத் தீர்மானம்

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மீண்டும் சேவையில் இணைத்து அரசைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்ததாக குற்றம் சுமத்தி சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோர் மீது தாக்கல் செய்யபபட்டுள்ள வழக்கை தொடர்ந்தும் விசாரணை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள சரத் பொன்சேகா நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இந்த வழக்கை விசாரணை செய்ய சாட்சியாளர்களுக்கு அழைப்பாணை விடுக்குமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றைக் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ வழக்கு விசாரணையை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அன்றைய தினம் சாட்சியாளர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்துள்ளார்.

# மரக்கறி, பழவகை கூடையில்; சட்டம் திங்கள் முதல் நடைமுறை

மரக்கறி மற்றும் பழ வகைகளைக் கொண்டு செல்லும் போது கூடைகளை உபயோகிக்கும் சட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சட்டம் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப் படாமையினால், பிளாஸ்டிக், கூடைகளை கொள்வனவு செய்த விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தெரிவு செய்யப்பட்ட 11 வகையான மரக்கறிகள் மற்றும் பழவகைகளுக்கு இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பணி-நிறுத்தத்தில் உள்ளவர்களுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது

### உயர் கல்வி அமைச்சு தெரிவிப்பு

பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு பணி நிறுத்தத்தில் ஈடுபட்ட நாளுக்கான சம்பளப் பணத்தை வழங்காதிருக்க உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தகவலை உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்ற போதும், அவர்கள் பணி நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டிய பிரச்சினையை பணி நிறுத்தம் செய்து தீர்க்க முடியாது என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சம்பளப் பிரச்சினைக்கு உடன் தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்தி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று முன்தினம் தொடக்கம் பணி நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றமையும் இதனால், அனைத்துப் பல்கலைக்கழகங்களும் ஸ்தம்பிதம் அடைந்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

# மின்சார சபை தொழிற்சங்கம் 24 மணிநேர பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

சம்பளக் கொடுப்பனவு உள்ளிட்ட கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து 24 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பை நடத்த இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி குறித்த பணிப்பகிஷ்கரிப்பை மேற கொள்ளவுள்ளதாக சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் மேற்கொண்ட தொழிங்சங்க நடவடிக்கைகளை அரசு கண்டுகொள்ளாதிருப்பதால் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்ததாக ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

24 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் அரசுக்கு ஒரு மாத கால அவகாசம் இருப்பதாகவும், அதனால் உரிய தீர்வு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

# தீவக அபிவிருத்திப் பணிகள் ஈ.பி.டி.பியால் முன்னெடுப்பு

(வேலணை)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தீவகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் கல்வி வளர்ச்சிக்கான பணிகளையும் சமூக முன்னேற்றத் திட்டங்களையும் முன்னெடுத்து மக்களின் வளர்ச்சிககாக முன்னின்று உழைத்து வருவதாக அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

வேலணை - செட்டிபுல ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் காலத்திலேயே தீவகத்தினை நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக கட்டியெழுப்புவதோடு மின்சாரம், குடிநீர், வீதிப்புனரமைப்பு போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அபிவிருத்திப் பணிகள் முன்னடுக்கப்பட்டு வருவதுடன், நயினாதீவு அம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு இன்னும் ஓரிரு தினங்களில் 24 மணிநேர மின்சாரம் வழங் கப்படவுள்ளதோடு, மெலிஞ்சி முனை மற்றும் மண்டை தீவுப் பிரதேசங்களுக்கான மின்இணைப்புப பணிகள் மூன்று மாதங்களுக்குள் நிறைவுபெறும் எனக் குறிப்பிட்டார்.



அத்துடன் தீவக விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உதவித் திட்டங்களை வழங்கி, தீவகத்தில் உள்ள விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுததி, தேசிய அணியில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய வேலணைப் பிரதேச சபை தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச இணைப்பாளருமான சின்னையா சிவராசா (போல்) வேலணைப் பிரதேசததில் பாரிய கட்டுமானப் பணிகள் மற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் 2012 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தீவக விளையாட்டுக் கழகங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

# வர்த்தகக் கண்காட்சி

(வவுனியா)

சீரான வர்த்தகக்கல்வி மூலம் சீரிய வாழ்க்கைத்தரம் எனும் தொனிப்பொருளில், வவுனியா தெற்கு கல்வி வலயம் வர்த்தக கண்காட்சியொன்றினை எதிர்வரும் யூலை மாதம் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் நடாத்தவுள்ளது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள இக்கண்காட்சிக்கான இணை ஒத்துழைப்புக்களை வவுனியா வளாகமும், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி, தெரிழில்நுட்பக் கல்லூரி, வவுனியா தெற்கு வலய பாடசாலைகள் உட்பட முறைசாராக்கல்விப்பிரிவு என்பன வழங்குவதுடன், இக்கண்காட்சியில் வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், மத்திய வங்கியின் யாழ்ப்பாண கிளை என்பனவும் பங்கேற்கவுள்ளதுடன், தமது செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கவுள்ளன.

இக்கண்காட்சியின்போது இரண்டாம் திகதி திங்கட்கிழமை பாடசாலை மாணவர்களும் ஏனைய இரு தினங்கள் பொது மக்களும் கண்காட்சிகளைப் பார்வையிட அனுமதிக்கபடுவர் என ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.(160)

# கிளிநொச்சி மாணவர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு

(கிளிநொச்சி)

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களிடத்தில் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் சுகாதார விழிப்புணர்வுச்செயற்பாடு நேற்று முன்தினம் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி நீல் தளுவத்த, கிளிநொச்சி கரைச்சி பிரதேசப் பொலிஸ் அதிகாரி சேனாதீர, கிளிநொசசி மாவட்ட பொலிஸ் அதிகாரி மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சுகாதாரம்தொடர்பாக விளக்கமளித்தனர்.

இதில் இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசமாக காணப்பட்ட கிளிநொச்சிப் பிரதேசம் கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் வளங்கள் அழிவடைந்துள்ளன.

இதனால் இப்பிரதேசத்தின் இயற்கைவளத்தைப் பாதுகாக்க மாணவர்கள் தம்மாலான பங்களிப்புக்களை செய்யவேண்டும். அந்தவகையில் மரங்களை நடுதல், சூழலுக்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் இருத்தல் போன்ற விடயங்களில் அக்கறை செலுத்தவேண்டும் என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(77)

# கொடியேற்றம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா இன்று மாலை 5 மணிக்கு செபமாலையுடன் கொடியேற்றம் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் திருப்பலி நிகழ்வும் இடம்பெறும்.

திருவிழாவைத் தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி நற்கருணைத் திருவிழாவும், 17 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு முதல் திருப்பலி இடம்பெறும்.

திருநாள் திருப்பலி 7.00 மணிக்கும் இடம்பெறும். (104)

# மதுரா நகருக்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியாவின் எல்லைக் கிராமமாக காணப்படும் குடியேற்றக் கிராமமான கல்நாட்டிய குளம் மதுராநகருக்கு மின் சார்த்தை பெற்றுத்தருமாறு பொது மக்கள் அதிகாரிகளிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

இடப்பெயர்வினால் பல்வேறு நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருந்த நிலையில் நாம் 2005 ஆம் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தற்காலிகள் வீடுகள அமைக்கப்பட்டு இக்கிராமத்தில் குடியேற்றம் செய்யப்பட்டோம்.

அதன்பின்னர் 2010 ஆம் ஆண்டு அரசசார்பற்ற நிறுவனத்தினால் நிரந்தர வீடுகள் அமைத்து தரப்பட்டுள்ளன. அதே காலப்பகுதியில் மின்சாரமும் தருவதாக கூறி மின்சாரசபையால் மின் கம்பங்களும் நடப்பட்டு இரண்டு மின் மாற்றிகளும் பொருத்தப்பட்டன.

அத்துடன் இதற்கான மின் கம்பிகளும் கொண்டுவரப்பட்டு எமது கிராமத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் தற்போது அக்கம்பிகள் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இக்கம்பிகள் மற்றும ஏனைய பொருட்கள் திணைக்களங்களாலும் கவனிப்பாரற்று இருக்கின்றது இவ்விடயம் தொடர்பில் நாமும் பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தும் பலன் கிடைக்கவில்லை. எமது கிராமதற்கான மின்சாரத்தினை வெகு விரைவில் வழஙகி மக்களுக்கான பாதுகாப்பை வழங்குமாறு கோருகின்றோம் எனத் தெரிவித்துள்ளனர். (160)



வேலணை செட்டிப்புலம் பகுதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்ட ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், வேலணைப் பிரதேச சபை தவிசாளரும் வேலணைப் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளருமான சி.சிவராசா ஆகியோர் செட்டிப்புலம் ஹரிக புத்திர ஐயனார் ஆலயத்தில் நடைபெறுகின்ற புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டனர். மேலும் ஆலய நிர்வாகத்தினரிடம் ஆலயப் புனரமைப்பு பணிகள் தொடர்பாகவும் இவ்வாலயத்திற்கு முன்னால் இருக்கும் கடற்கரைப் பகுதியினையும் பார்வையிட்டு கடல் நீரினால் மணல் அரிப்பு ஏற்படுவதை எவ்வாறு தடுபபது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடினர். (85)

# வீதிகளுக்கு தாரிடல்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள் செப்பனிடப்பட்டு இரண்டாவது தடவையாக தார் இடப்பட்டுள்ளது. சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சபையின் தொழிலாளர்களினாலேயே இவ்வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல வீதிகளின் வேலைகள் முடிவடைந்துள்ளன. சில வீதிகள் மட்டுமே பாக்கியாகவுள்ளன. இரண்டு மில்லியன் ரூபா செலவில் இவவீதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பனிக்கர் வீதி, ஞானஒளி வீதி, தில்லையம்பதி வீதி, சிவகாமி அம்மன் வீதி, கருவேலடி ஒழுங்கை, செல்வநாயகம் வீதி, குமரக்கோட்டம் ஞானவைரவர் தெற்கு வீதி, ஞானவைரவர் வீதி, பரமேஸ்வரா வீதி, நெட்டிலிப்பாய் குமரக் கோட்டம், நெட்டிலிப்பாய் முன் ஒழுங்கை, மஞ்சவனப்பதி, இராமுப்பிள்ளை வீதி, சோமா வடலி ஒழுங்கை, திருநெல்வேலி பலாலி குறுக்கு வீதி ஆகியவையே செப்பனிடப்பட்டு தார் போடப்படுபவையாகும். (137)

# சிரேஷ்ட சட்டத்தரணிக்கு கௌரவிப்பு நிகழ்வு

(வவுனியா)

வவணியாவில் நீண்ட காலமாக நீதித்துறையில் பணியாற்றி வரும் சிரேஸ்ட சட்டத்தரணி மு.சிற்றம்பலத்திற்கு வவுனியா வாழ் மக்கள் கௌரவிப்பு நிகழ்வொன்றினை எதிர்வரும் 24 ஆம் திகதி நடாத்த திட்டமிட்டுள்ளனர்.

சட்டத்துறையின் ஊடாக மக்களுக்கு செய்த பணியினை பாராட்டியும் கௌரவிக்கும் முகமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வு, அன்றைய தினம் மாலை 3 மணிக்கு வவுனியா - கொரவப் பொத்தானை வீதியில் உள்ள றோயல் காடின் மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் உட்பட பொதுமக்களும் இவ்விழாவிற்கு அழைக்கப்படவுள்ளதாக விழாக்குழுவினர் தெரிவித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை வவுனியர் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா. சேனாதிராஜா தலைமையிலான விழாக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். (160)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வு கொடிவாரம் 11 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோர் புனர்வாழ்வுக்கான கொடி வாரம் ஒன்றை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஒரு வாரகாலத்திற்கு நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இக்கொடி வாரம் தொடர்பாக மேற்படி நிறுவனம் வலுவிழந்தோர் புனர்வாழ்வுக்கான கொடி வாரத்தில் வாரி வழங்குங்கள் என்னும் தலைப்பில் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில்,

யுத்தத்தின் கொடூரத்தினாலும் நோயின் காரணமாகவும் அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்தி அவர்களை மாற்றுவலுவுள்ளோராக மாற்றும் மனிதநேயப் பணியை நோக்காகக்கொண்டு கடந்த 01.07.1987 இல் ஸ்தாபிக்கப்பட்ட யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் எதிர்வரும் 01.07.2012 ஆம் திகதியுடன் 25 வருட காலச் சேவையை பூர்த்தி செய்கிறது.

இதனை முன்னிட்டு இடம்பெறும் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின்போது எதிர்வரும் 11.6.2012 முதல் ஒருவார காலத்திற்கு நடைபெறவுள்ள கொடிவாரத்தில் தங்களை நாடிவருவோரிடம் மனமுவந்து போதியளவு நிதியை வழங்குவதன் மூலம் வலுவிழந்தோர் இயல்புவாழ்வு வாழ வழிவகுக்கும் எமது பணியில் பங்காளர்களாக இணைந்து கொள்ளுமாறு அனை வரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் அதிபர் மீது தாக்குதல்; எதிர்த்து ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா - முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் அதிபரும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைப் பொருளாளருமான நேசராஜா மீது பாடசாலை மாணவர்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியமை மற்றும் பாடசாலை மாணவர்களை சுற்று நிருபத்திற்கு எதிராக இடைவிலத்தியமை தொடர்பாக மற்றொரு பாடசாலை அதிபர் மீது வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிமனை நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கம் வவுனியா தெற்கு வலயக்கல்விப்ணிமனைக்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில்



ஈடுபட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்,

சம்பந்தப்பட்ட அதிபர் மீது வலயக்கல்வி அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்வில்லை. பாடசாலை அதிபர் அதே பாடசாலையில் கடமையில் ஈடுபட்டிருக்கும் நிலையில், மாணவர்கள் மீது விசாரணைகளை மேற்கொள்வதில் அர்த்தமில்லை.

உண்மையான விசாரணையை கல்வித்திணைக்களம் நடத்துவதாக இருந்தால் குற்றம்சாட்டப்பட்ட அதிபரை பதவியில் இருந்து அகற்றியிருக்க வேண்டும். இல்லையேல் வேறு பாடசாலைக்கு மாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு எதனையும் செய்யாது விசாரணை மேற்கொள்வது எவ்விதமான நடவடிக்கையும் இடம்பெறாது என்பதே அர்த்தமாகும். இதே நேரம் வட மாகாண கல்வி அமைச்சு வேறு ஒரு அதிபராக இருந்தால் என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும்.

ஆனால் இந்த அதிபர் மீது ஏன் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இந்த அதிபர் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்கள் இருந்தும், நடவடிக்கை எடுக்காதது இந்த அதிபரை பாதுகாப்பதற்கேயாகும். எனவே நீதியான விசாரணைகளை மேற்கொள்ளாவிட்டால் இலங்கை ஆசிரியர் சங்கம் போராட்டத்தை விரிவுபடுத்தவேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிபரைத் தாக்கும் அதிகாரத்தை வழங்கியது யார்?, கல்வி நிாவாகமே வன்முறையை ஊக்குவிக்காதே, சிறுவர் துஷபிரயோத்தை உடன நிறுத்து, அதிகார துஷ்பிரயோகத்தை உடன் நிறுத்து, அடாவடித்தன அதிபர்கள் எங்களுக்கு வேண்டாம் என்ற கோஷஙகளை பலரும் எழுப்பியிருந்தனர்.

# தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு; கட்டடப் பணிகள் ஸ்தம்பிதம்

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் பல்வேறு கட்டுமானப்பணிகள் இடம் பெற்று வரும் சூழலில் கட்டடத் தொழிலாளிகளுக்கும், மேசன் தொழிலாளிகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கட்டடப் பணிகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேசன் தொடக்கம் சாதாரண தொழிலாளி வரை 1000 ரூபாவில் இருந்து 1500 ரூபா வரை கூலி வழங்கப்பட்டும், தொழிலாளிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக கட்டட ஒப்பந்தக்காரர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்சினையால் தாம் குறித்த காலப்பகுதியில் தமது வேலைகளை நிறைவேற்றுவதில் பின்னடவைச் சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார், இப்பகுதியில் கட்டடத் தொழிலாளருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்கும் பொருட்டு இம்மாத நடுப்பகுதியில் மேசன் வேலைப்பயிற்சியை ஆரம்பிப்பதற்காக விண்ணப்பம் கோரியுள்ளோம். வேலையற்ற இளைஞர்கள் கூடிய வேதனம் பெறக் கூடிய இத்தொழிலில் ஆர்வம் காட்டாமல் இருப்பது கவலைக்குரியதென்றார். (112)

# கோயிலுக்குச் சென்றவரின் மோட்டார் சைக்கிள் திருட்டு

(திருநெல்வேலி)

கோயில் வீதியொன்றில் தனது மோட்டார் சைக்கிளினை நிறுத்தி விட்டு கோவிலுக்குள் வழிபாடு செய்து விட்டு வந்தவர் திரும்பி வந்து பார்த்த போது தனது சைக்கிளைக் காணாது அதிர்ச்சிக்குள்ளானார்.

ஆனால் சில மணி நேரம் கழித்து சற்றுத் தொலைவில் அதே சைக்கிள் நிறுத்திக் காணப்பட்டது. இச் சம்பவம் சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கோயில் வீதியொன்றில் பட்டப் பகலில் இடம் பெற்றது.

எங்கு தேடியும் தனது மோட்டார் சைக்கிளை காணாது தவித்த அவர், பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். காணாமல் போய் மீண்டும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் 'லொக்' போட்டுப் பூட்டப்பட்டிருந்தது. ஆனால், முன்னர் தாம் கொண்டு வந்து நிறுத்திய போது 'லொக்' போடப்படவில்லை என அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள் மீண்டும் கிடைத்து விட்டது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. காணாமல் போன மோட்டார் சைக்கிள் மீண்டும் கிடைக்கப் பெற்றது குறித்து அதன் உரிமையாளர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். (137)

# கணித, விஞ்ஞான ஆசிரியர்களை நியமிக்கக் கோரி மகஜர் கையளிப்பு

(முல்லைத்தீவு)

தமது பிள்ளைகளுக்கு பாடசாலையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்களை நியமிக்கும்படி பெற்றோர் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய பிரதேச பாடசாலை மாணவர்கள் கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விகற்று வருகின்றனர். குறித்த பாடசாலையில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பப் பாடங்களை போதிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையில், குறித்த பாடசாலையின் மாணவர்களின் பெற்றோர்கள் அமைதியான முறையில் முல்லைத்தீவு கல்வி வலய அலுவலகத்தில் ஒன்றுகூடி கல்வி அதிகாரிகளிடம் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இடப் பெயர்வின் பின்னர் இப்பாடசாலை கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் மீண்டும இயங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)



மந்துவில் 'கலங்கரை' சமூக அபிவிருத்திக் கழகத்தினரால் சூழல்தினத்தை முன்னிட்டு கடந்த 5 ஆம் திகதி மரம் நடும் நிகழ்வும் சூழல்தின விழிப்புணர்வு கருத்தமர்வும் மந்துவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இடம் பெற்றதைக் காணலாம்.

# கிளிநொச்சி விபத்தில் மூவர் காயமடைந்தனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கடந்த 4 ஆம திகதி மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் சின்னையா சிவலோகநாதன் (வய்து - 48), சிவலோகநாதன் கிறிஸ்ரீனா (வயது - 38), சி.மயுசுகன் (வயது - 05) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவார்.

ஹயஸ் வாகனமும், மோட்டார் சைக்கிளிலும் நேருக்கு நேர் மோதியதாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. ஹயஸ் வாகனச் சாரதி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி வந்தமை கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர்.

அவரை பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளகக மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (77)

## முரசின் இன்றைய பலன்

(08.06.2012 –வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 26 ஆம் திகதி. சதுர்த்தி முற்பகல் 10.02 வரை.
நட்சத்திரம் உத்தராடம். சித்தயோகம் முற்பகல் 07.08 வரை.
இராகுகாலம் 10.22 - 11.52 வரை. சுபநேரம் 5.52 - 7.22 வரை.
எமகண்டம் 2.52 - 4.22 வரை. குளிகைகாலம் 7.22 - 8.52 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கவனம் தேவை, விட்டுக் கொடுத்தல் அவசியம், அவசரம் கூடாது, முன்னெச்சரிக்கை. |
| ரிஷபம் | சந்திராட்டமம் கவனம் தேவை, தொழிலில் முன்னேற்றம், அரச உதவி கிட்டும், பணப்புழக்கம். |
| மிதுனம் | பயணம் கூடாது, மனதில் குழப்பநிலை, பேச்சுக்களைக் குறைக்கவும், செலவு அதிகரிக்கும். |
| கடகம் | உற்சாகம், கூட்டுத் தொழிலில் இலாபம், முதலீடுகள் பெருகும், தரகர்களிடம் அவதானம். |
| சிம்மம் | சண்டை தீரும், பொருளாதார நிலை உயரும், புத்திரால் சஞ்சலம், பணியில் நிம்மதி. |
| கன்னி | எதிர்ப்புகள், இல்லிட சௌகர்யம், எதிர்பாராதது கிடைக்கும், உடல் உபாதைக்கு இடமுணடு. |
| துலாம் | இலாபதினம், குடும்பத்தில் சுமுகநிலை, ஆடை ஆபரண சேர்க்கை, திறமைகள் வெளிப்படும். |
| விருச்சிகம் | கூட்டு முயற்சி, போட்டி பொறாமைக்கு இடமுண்டு, நிம்மதிக் குறைவு, காரியானுகூலம். |
| தனுசு | வருவாய் உயரும், புதிய திட்டங்களில் நாட்டம், குடும்பத்தில் அன்னியோன்யம், பணவரவு. |
| மகரம் | அலைச்சல், உடல் நல பாதிப்பு, தொழில் துறையில் முன்னேற்றம், திருப்திகரமான வருவாய். |
| கும்பம் | பெருமை, இடைஞ்சல்கள் தொடரும், இலட்சுமி கடாச்சம், குடும்ப சௌபாக்கியம். |
| மீனம் | காரிய சித்தி, அயலவரிடம் நற்பெயர் கிடைக்கும், ஆடம்பரப் பொருள் சேரும், காரிய சாதனை. |

# பாதுகாப்பு இல்லையெனில் ருவென்ரி – 20 சாத்தியமா?

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் உறுதிப்படுத்தப்பட்டிருக்காவிட்டால் இங்கு ருவென்ரி 20 கிரிக்கெட் சம்பியன்சிப் தொடர் நடைபெற வாய்ப்பு கிட்டியிருக்காது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ருவென்ரி 20 சம்பியன் தொடருக்கான பாதுகாப்பு அதிகாரியாக ஒருவர் நியமிக்கப்பட்டு அவரது பெயர் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அவரது பெயரை நிரா–கரித் ததுடன் தகுதியான வேறு ஒருவரை நியமிக்குமாறும் எமக்கு அறிவித்தது. இந்நிலையில் ஆறு மாத கால ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட குறித்த அதிகாரிக்கு முன்கூட்டிய ஒரு மாத வேதனம் 'வழங்கப்பட்டதுடன் அவரது பதவியும் விலக்கப்பட்டது. இதன் பின்னரே புதிய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். எமது நாட்டில் ருவென்ரி 20 சம்பியன்சிப் தொடர் நடைபெறவிருக்கின்றது. நாம் எமது நாட்டின் பாதுகாப்பு தொடர்பான உறுதியான அறிக்கையை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் சமர்ப்பித்திருக்காவிட்டால் மேற்படி சம்பியன்சிப் தொடர் இலங்கைக்கு கிட்டியிருக்க வாய்ப்பிருந்திருக்காது என்றார்.

# இலங்கை மக்களுக்கு நன்றி கூறிய மார்ஷ்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் நீக்கப்பட்ட அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஜெஃப் மார்ஷ், இலங்கையின் கிரிக்கெட் ரசிகர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். தனக்கான ஆதரவை வழங்கியமைக்காகவே அவர் இந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கான பயிற்றுவிப்பாளராக கடந்த செப்டெம்பர் மாதம் 2 வருடகால ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்ட ஜெஃப் மார்ஷ், வெறும் மூன்றே மாதங்களின் பின்னர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் நீக்கப்பட்ட போது அவர் நீக்கப்படுவதற்கான காரணங்களை வெளிப்படுத்தாத இலங்கைக் கிரிக்கெட் சபை, புதிய பயிற்றுவிப்பாளராக கிரஹாம் போர்டை உடனடியாக நியமித்திருந்தது.

அதன் பின்னர் சில மாதங்களின் பின்னர் தன்னை ஒப்பந்தத்திற்கு மா–றாக பதவியிலிருந்து நீக்கியமைக்கு எதிராக ஜெஃப் மார்ஷ் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருந்தார். அது தொடர்பாகக் கேட்கப்பட்ட போதே அவர் இலங்கை ரசிகர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். தற்போது இவ்விடயம் தனது வழக்கறிஞர்கள் கையில் காணப்படுவதால் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்த ஜெஃப் மார்ஷ், தனக்கு வழங்கிய ஆதரவிற்காக இலங்கையிலுள்ள அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

# ஒலிம்பிக்கிற்குத் தகுதி



நீச்சல் வீராங்கனை ரெஷிகா உடுகம்பொல, வைல்கார்ட் முறையின் கீழ் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார்.

இதனை மின்னஞ்சல் ஊடாக சர்வதேச நீர்நிலை விளையாட்டு சங்கத்திற்கு அறிவித்துள்ளதாக, இலங்கை நீர்நிலை விளையாட்டு சங்கத்தின் செயலாளர் நேத்ரா நாணயக்கார ஸ்போஸ்ட் பெஸ்டுக்குத் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக நீச்சல் வீரர் ஹேஷான் உனம்புவ இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்.

இதுவரை ஐந்து நீச்சல் வீர வீராங்கனைகள் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக கலந்துகொள்ளும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

இதேவேளை அவுஸ்ரேலியாவில் உயர் கல்வி கற்றுவரும் ரெஷிகா உடுகம்பொல, ஸ்கைப் தொழில்நுட்பத்தின் ஊடாக ஸ்போட்ஸ் ஃபெஸ்டுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

# தேசிய கீதத்தில் தவறு மன்னிப்புக் கோரியது பிரிட்டன்

(லண்டன்)

தவறான தேசிய கீதத்தை ஒலிபரப்பியமைக்காக தென்னாபிரிக்காவிடம் மன்னிப்பு கேட்டுள்ளது பிரிட்டன் ஹொக்கி சங்கம்.

ஒலிம்பிக் போட்டிக்கு முந்தைய லண்டன் கோப்பைக்கான மகளிர் ஹொக்கிப் போட்டிகள் லண்டனில் நடைபெற்று வருகின்றன. கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பிரிட்டன் – தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

அந்த ஆட்டத்திற்கு முன்னதாக தென்னாபிரிக்காவின் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. அப்போது, நவீன தேசிய கீதத்துக்குப் பதிலாக, தென்னாபிரிக்காவில் இனவெறி கொள்கை இருந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட பழைய தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இதுதொடர்பாக தென்னாபிரிக்க ஹொக்கி சங்கத் தலைவர் மரிஸ் லங்கேனி, போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு எழுதிய கடிதத்தில், பழைய தேசிய கீதத்தை ஒலித்தன் மூலம் எங்களுடைய அணிக்கு மோசமான அனுபவத்தைக் கொடுத்துவிட்டதோடு, அவநம்பிக்கையை ஏற்படுத்திவிட்டீர்கள் என்று கூறியிருந்தார்.

இதையடுத்து பிரிட்டன் ஹொக்கி சங்கத் தலைவர் சாலி முன்டாய், தென்னாபிரிக்க ஹாக்கி சங்க தலைவரிடம் மன்னிப்பு கோரியுள்ளார். தேசிய கீதம் சம்பவம் தொடர்பாக தென்னாபிரிக்க அணியினரிடம், அவர்களுடைய ஆதரவாளர்களிடமும் பகிரங்க மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம்.

# முன்னேற்றம்


சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய நிரல்படுத்தலில் உருகுவே, பிரேசில், இங்கிலாந்து ஆர்ஜென்ரீனா, டென்மார்க் ஆகியன முன்னேற்றம் கண்டுள்ளன.

உலக மற்றும் ஐரோப்பிய சம்பியனான ஸ்பெய்ன் தொடர்ந்து முதலிடத்திலுள்ளது.

புதிய நிரல்படுத்தலுக்கு அமைய ஜேர்மனி இரண்டாம் இடத்திலிருந்து மூன்றாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளதுடன், உருகுவே இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

நெதர்லாந்து நான்காம் இடத்திலுள்ளதுடன், ஆறாம் இடத்திலிருந்த பிரேசில் ஐந்தாம் இடத்திற்கும், ஏழாம் இடத்திலிருந்த இங்கிலாந்து ஆறாம் இடத்திற்கும் முன்னேறியுள்ளன.

ஆர்ஜென்ரீனா, குரேஷியா, டென்மார்க் மற்றும் போர்த்துக்கல் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.



# ரஷ்ய வீரர் சாதனை

மலை உச்சியிலிருந்து பள்ளத்தாக்கில் குதித்து சாகஸம் காட்டும் விளையாட்டில் ரஷ்யாவில் வெலேரி ரொசோவ் உலக சாதனை படைத்துள்ளார். இந்தியாவின் இமாச்சல பிரதேசத்தில் 6,543 அடிகள் உயரத்தில் இருந்து குதித்து அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டினார்.

47 வயதுடைய ரஷ்யாவின் வெலரி ரொசோச் இதுவரை ஸ்கைடைவின் போட்டிப் பிரிவில் இரண்டு தடவைகள் உலக சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துள்ளார். அவர் இந்தியாவின் இமாச்சல பிரதேசத்தில் சுற்றுலா செய்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். வெ–லேரி ரொசோவ் இமாச்சல பிரதேசத்தில் சுமார் 30 நாட்கள் பயணம் செய்ததாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து இமாச்சல மலைத் தொடரின் மிகவும் உயரமான பகுதியை அவர் உலக சாதனை படைப்பதற்காக தெரிவுசெய்தார். வெலேரி ரொசோவ் உயர்ந்த மலை மற்றும் எரிமலைகளின் உச்சியில் இருந்தும் குதித்து சாதித்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கெயிலின் வருகையால் அணி புத்துயிர் பெறும்

இங்கிலாந்திற்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான அணியில் கிறிஸ் கெயில் சேர்க்கப்பட்டிருப்பது அணியைப் பொறுத்தவரை சிறப்பானது. அவரது உள்ளடக்கம் சிறந்த தரத்தினைக் கொண்டு வரும் என மேற்கிந்தியத் தீவுகளின் பிரதம தேர்வாளர் கிளைட் பட்ஸ் தெரிவித்துள்ளார்.

கிறிஸ் கெயில் அணியில் சேர்க்கப்பட்டிருப்பதானது மேற்கிந்தியத்தீவுகள் அணிக்குப் புதிய தரப் பரிமாணமொன்றைக் கொண்டு வரும். கிறிஸ் கெயில் நிரூபிக்கப்பட்ட ஓர் சிறந்த வீரர். அவரது சிறந்த திறமை வெளிப்பாடுகளுக்காகக் காத்திருக்கிறோம். அத்தோடு, அவரது திறமை வெளிப்பாடுகள் தவிர, அணியின் மூத்த வீரராக அவரது பங்களிப்புக்கள் தொடர்பாகவும் எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

# நீக்கப்பட்ட இந்திய நடுவர்

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் சர்வதேச நடுவர்களுக்கான பட்டியலிலிருந்து இந்திய நடுவர் ஷவீர் தரபாரை நீக்குவதற்கு இந்தியக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. தரபாருக்குப் பதிலாக அவரது இடத்திற்கு எஸ். எஸ். ஸம்ஸவூடின் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஷவீர் தரபாரை நீக்கி அவருக்குப் பதிலாக ஹைதராபாத்தைச் சேர்ந்த ஷம்ஸவூடினைச் சேர்ப்பதற்கான முடிவு நடுவர்களுக்கான இந்தியக் கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.



# இணையத்தள மூலமும் ஒலிம்பிக் போட்டி

(லண்டன்)

லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை இணையத்தளத்தின் மூலம் உலகத்திலுள்ள ரசிகர்கள் அனைவரும் காணலாம் என்று சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஓ.சி.) அறிவித்துள்ளது.

ஒலிம்பிக் போட்டியை மட்டுமின்றி அதன் சிறப்புக் கூறுகளையும் (ஹைலைட்ஸ்) இணையத்தளத்தின் மூலம் கட்டணமின்றி பார்க்கமுடியும். இதற்காக சர்வதேச ஒலிம்பிக் சபை யூடியூப் சனல் ஒன்றையும் தொடங்கியுள்ளது.

இதில் ஒலிம்பிக் குறித்த தகவல்கள், போட்டி முடிவுகள், கடந்த ஒலிம்பிக் போட்டிகள் குறித்த செய்திகள் 24 மணி நேரமும் வெ–ளியாகிக் கொண்டிருக்கும் என்று சர்வதேச ஒலிம்பிக் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் யூலை 27 முதல் ஆகஸ்ட் 12 வரை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

நேரடி ஒளிபரப்பிற்கான இணையதள முகவரி: http://www.youtube.com/user/olympic

# கயிறு இழுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை–கள் மன்றம் நடத்தும் பிரதேச மட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட கயிறு இழுத்தல் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றிபெறும் அணி எதிர்வரும் 16,17ஆம் திகதி குருநகாலில் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டியில் பங்குபெறும் தகுதிபெற்றுக்கொள்ளும் எனபோட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# அரையிறுதியில் முன்னணி வீரர்கள் கலப்பு இரட்டையர் இறுதியில் சானியா, பூபதி

(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட, நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா), ஸ்பெயின் வீரர் நடால், ஜோகோவிச், பெடரர் தகுதி பெற்றுள்ளனர். அத்துடன் கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு சானியா, பூபதி ஜோடி தகுதி பெற்றுள்ளது.

பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் எஸ்டோனியாவின் கயா கானெபியுடன் மோதிய ஷரபோவா 6,2 6–3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் காலிறுதிப் போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் மயிரிழையில் தோல்வியில் இருந்து தப்பிப் பிழைத்தார். சோங்காவுடன் மோதிய ஜோகோவிச் 6–1, 5–7, 5–7, 7–6 (6), 6–1 என்ற செட் கணக்கில் போராடி வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

மற்றுமொரு காலிறுதியில் ஸ்பெயினின் ரபெல் நடால், சகநாட்டைச் சேர்ந்த நிகோலஸ் அல்மாக்ரோவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய நடால் 7–6, 6–2, 6–3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட இந்தியாவின் மகேஷ் பூபதி , சானியா மிர்சா ஜோடி தகுதி பெற்றது. அரையிறுதியில் கஜகஸ்தானின் கலினா வாஸ்கபோவா , டேனியல் பிராக்கியாலி (இத்தாலி) ஜோடியுடன் மோதிய பூபதி , சானியா ஜோடி 6,4, 6,2 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இறுதி வரை போராடி கிண்ணம் வெல்ல முயற்சிப்போம். பூபதி மிகவும் நுட்பமான வீரர். அவருடன் இணைந்து விளையாடுவது மகிழ்ச்சிக்குரியது என வெற்றியின் பின் சானியா தெரிவித்தார்.



### ஜே.பி.எல். ருவென்ரி - 20

# சென்றலைட்ஸ் அபார வெற்றி



(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் ஆறாவது போட்டியில் சென்ற லைட்ஸ் அணி ஒன்பது ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் நடத்தப்படும் ஜே.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆறாவது போட்டியில் சென்றலைட்ஸ் அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜேம்ஸ் ஜோன்ஷன் 23 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களையும், எரிக் துசாந் 17 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிஸ்கர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 27 ஓட்டங்களையும், மதுஷன் ஒன்பது பந்துகளை எதிர்கொண்டு 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிருபவன் 18 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சிலோஜன், பிரதீபன், உமகாந் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 128 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சாம்பவன் 24 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களையும், ஜெயரூபன் நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 20 ஓட்டங்களையும், ஆதித்தன் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விதுஷன் 22 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், பிரசாத் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஜேம்ஸ் ஜோன்ஷன் தெரிவானார்.

(எஸ்.பி., எஸ்)

# ௮௯ ஓட்டங்களால் பற்றீசியன் வெற்றி

விளையாட்டு செய்திகள்

(யாழ்ப்பாணம்)


சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் டொனால்ட் வெற்றிக் கிண்ண 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் போட்டி ஒன்றில் பற்றீசியன்ஸ் அணி 89 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் இப்போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த திங்கட்கிழமை விடுமுறை தினம் என்பதால் பற்றீசியன்ஸ் அணிக்கும் அரியாலை சென்றல் அணிக்கும் இடையில் போட்டி ஒன்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பறிறீசியன்ஸ் அணி 29.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெகான் ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 42 ஓட்டங்களையும், பத்ம முரளி ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களையும், சுஜிபன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஷ் ஏழு ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், சபேசன் 5.5 ஓவர்கள் பந்து வீசி ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 158 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை சென்றல் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கே. சுதர்சன் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 20 ஓட்டங்களையும், விசாங்கன் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் எரிக் பிரதாப் 7 ஓவர்கள் பந்து வீசி நான்கு ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 11 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், சுஜிபன் ஐந்து ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதன் மூலம் 89 ஓட்டங்களால் பற்றீசியன்ஸ் அணி வெற்றிபெற்றது. (எஸ்.பி.)





இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் பீபா அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் நடாத்திய கிறாஸ்றூட் கால்பந்தாட்டப் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட வடமாகாணத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட பயிற்சியாளர்கள், அலுவலர்களையும், பயிற்சி முகாமில் கலந்து கொண்ட ஆசிரியர் ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அங்லிகன் குருமுதல்வர் வணபிதா ஜெயந் ஜெயவீரசிங்கன் பயிற்சிச் சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (எஸ்.பி.)

## நாளைய தினம் 2ஆவது போட்டி

(பல்லேகல)

பாகிஸ்தான் இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நாளைய தினம் பல்லேகல விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இலங்கைக்கான சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி ஏற்கனவே இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி - 20 போட்டித் தொடரை சமநிலைப்படுத்தியது.

இந்நிலையில் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி நாளைய தினம் பல்லேகல விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை அணிக்கெதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முழு முயற்சியை மேற்கொள்வோம் என்றும், அவ்வாறு கைப்பற்றும் பட்சத்தில் டெஸ்ட் தொடரில் சாதிக்க முடியும் எனவும் பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்தார்.




# வெற்றிக் கிண்ணம் வெண்மதி வசம்

அருணோதயா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை நாகர்கோவில் வெண்மதி அணி சுவீகரித்து கொண்டது.

ஆழியவளை அருணோதயா விளையாட்டு கழகத்தினால் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான மென்பந்துச்சுற்றுப்போட்டி மற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் கடந்த 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை நடைபெற்றன. இறுதிப் போட்டி உடுத்துறை பாரதி அணியினருக்கும் நாகர்கோவில் வெண்மதி அணியினருக்கும் இடையில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உடுத்துறை பாரதி அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தனர். முதலில் உடுத்துறை பாரதி அணி 9.5 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 53 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். இதில் உடுத்துறை பாரதி அணிசார்பாக ஜெயதீப் 12 பந்துகளை எதிர்கொண்டு 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கோகுலதாசன் 3 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டை கைப்பற்றினார்.

54 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நாகர்கோவில் வெண்மதி அணியினர் 6.3 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் 3 விக்கெட்டை மாத்திரம் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றனர்.

அருணோதயா விளையாட்டுக் கழகத்தால் முதல் முறையாக நடாத்தப்பட்ட மாபெரும் விளையாடடுப்போட்டியின் மென்பந்து துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த முதலாவது அணி என்னும் பெருமையை நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக்கழக அணி பெற்று சாதனை படைத்துள்ளது

# கிளி. மாவட்டப் பெரு விளையாட்டு பெண்களுக்கான போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பெருவிளையாட்டுப்போட்டிகளில் பெண்களுக்கான போட்டி முடிவுகள் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் நிமிர்த்தம் முடிவுகள் வருமாறு,

**மேசைப்பந்து**

முதலாமிடம் கனகபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**சதுரங்கம்**

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் முருகானந்தாக் கல்லூரி, மூன்றாமிடம் உருத்திரபுரம் மகாவித்தியாலயம்.

**பூப்பந்தாட்டம்**

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கனகபுரம் மகாவித்தியாலயம்.

**கரம்**

முதலாமிடம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் கனகபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் முருகானந்தா கல்லூரி.

**கராத்தே காட்டா (தனி)**

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

**கராத்தே குமுத்தே (தனி)**

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

**கராத்தே காட்டா (குழு)**

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

17 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள்

**வலைப்பந்து**

முதலாமிடம் புனித திரேசா மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் அக்கராயன் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் வட்டக்கச்சி மகாவித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம்**

முதலாமிடம் பரந்தன் இந்து மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி, மூன்றாமிடம் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை.

**கராத்தே காட்டா (தனி)**

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், கராத்தே குமுத்தே (தனி), முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாயலம். (க) (முற்றும்)



1481 ஆம் ஆண்டில், கொலம்பஸ், பெரும்பொருள் தேவைப்பட்ட ஒரு பயணத்திற்கு ஆதரவைத் தேடினார். ஏதேனும் ஓர் உத்தரவாதமின்றி அறியாத இடங்களுக்குப் பயணம் மேற்கொள்ள யாரும் பொருளுதவி செய்யமாட்டார்கள் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதனால் வாதங்கள் வலிமையாக இருக்கவேண்டும் கணக்கிடுதல்கள் அறிவார்ந்தனவாக இருக்கவேண்டும் அளவைகள் நம்பிக்கைக்குரியனவாக இருக்கவேண்டும், இறுதியில் வந்தடையும் முடிவு போய்ச்சேரக் கூடியதாகத் தெரிய வேண்டும் என அறிந்திருந்தார். எனவே அவர் ஒரு நிலப்படத்தை வரைந்தார்.

- மிஷல் லெக்ரோ

# உலகப் படத்தின் வயது 500

மெர்க்கேட்டர், உலகின் பயன்படுத்தக் கூடிய நிலப்படத்தை (map) முதல்முதலாக உருவாக்கியவர்.

டொலமிக்குப் பிறகு நிலப்படம் வரைதலில் நேர்ந்த முதல் பெரிய முன்னேற்றத்தைச் சாதித்ததுஜெரார்ட் மெர்க்கேட்டரின் 1569 ஆம் வருடத்து நிலப்படம். ஜெரார்ட் மெர்கேட்டருக்கு இந்த ஆண்டில் 500 வயது ஆகி இருக்கும். இதைக்கொண்டாடும் முகமாக, நியூயோர்க் பொது நூலகம், மெர்க்கேட்டர் 500 என்ற பெயரில் ஒரு கண்காட்சி நடத்திக் கொண்டிருக்கிறது (செப்டம்பர் 29 வரை நடக்கிறது).

ஜெரார்ட் மெர்க்கேட்டர் தயாரித்த நிலப்படத்துக்கான தொலைநோக்குப் பார்வை புரட்சிகரமானது. தற்கால நிலப்படங்களின் அடிப்படையாக கருதப்படுவது பூமியின் வளைவுக் கேற்ப சரியான விகிதங்களில் கண்டங்கள் நீட்டி வரையப்படுவது தான். இதில் ஜெரார்ட் முன்னோடியாக இருந்திருக்கிறார்.

இனித்தான் நிலங்களைக் கண்டடையவேண்டும் என்று அதுவரை இருந்த மனப்பான்மையிலிருந்து மாறி, ஏற்கனவே தெரிந்த நிலங்களை நோக்கி பயணம் செய்யலாம் என்ற புதிய சிந்தனை எழுவதற்கும், அதன் விளைவாக, உலகத்தின் அடிப்படைப் பார்வை மாறுவதற்கும் மெர்க்கேட்டர் நிலப்படம் காரணமாக இருந்தது. ஒரு நிலப்படத்தைப் பயன்படுத்திச் சேரவேண்டிய இடத்திற்குச் சென்றுவிடலாம் என்பதும் முதன்முறையாக சாத்தியமாயிற்று.

மெர்க்கேட்டர் காலத்திற்கு முன்பு இருந்த நிலப்படம் எழுதுபவர்கள், பெரும்பாலும் தத்தம் சொந்த ஆசைகளாலும் அரசியல் உள்நோக்கங்களாலும் உந்தப்பட்டவர்கள்.

உலகில் நட்டநடுவில் இருப்பது தான் எத்தனை அற்புதமானது! நகரங்கள், ஓடைகள், துறைமுகங்கள், மலைகள், வளைகுடாக்கள், தீபகற்பங்கள், கண்டங்கள் இவையனைத்தும் நாம் இருக்கும் இடத்திலிருந்தே வெளி நோக்கி விரிகின்றன என்றால் எப்படி இருக்கும்?

அலெக்ஸாண்டிரியாவின் மாபெரும் எகிப்திய நூலத்தில் தன்னிருக்கையில் அமர்ந்திருந்த டொலமியை மையமாகக் கொண்டு அன்று அறியப்பட்டிருந்த உலகமே சுற்றிலும் எழத் தொடங்கியது. இங்குதான் இரண்டாம் நூற்றாண்டின் அந்த கிரேக்க ரோமானிய அறிவாளர், முதன்முதலாக அறிவியல் பூர்வமாகப் பூமியின் சுற்றளவை அளந்து, கண்டங்களையெல்லாம் தக்கவிடத்தில் தகுந்த அளவைகளில் பொருத்தினார். (இத்துறைக்கே) முதல் கருவாக அமைந்த அவருடைய நிலவியல் தகவல் நூலில் ஒரு கோட்டுச் சட்டத்தை (கிரிட்) உருவாக்கினார். அதுதான் அட்ச ரேகை எனப்படும் நிலநேர்க்கோட்டுக்கும் தீர்க்கரேகை எனப்படும் நெடுங்கோட்டுக்கும் அடிப்படையாகஇருந்தது, கடகரேகை,மகர ரேகை என்று பின்னர் வரையறுத்துக் கொள்ளப்படுவதற்கு தொடக்கமாக இருந்தது. இதன்மூலம் புவியில் எந்த ஓரிடத்தையும் பாகைகள் மூலம் குறித்துவிட எளிதாக முடிந்தது.

"கண்டுபிடிப்பு யுகம்" எனப்படும் காலம், தகவல் திரட்டலில் பெரும் எழுச்சியைக் கொணர்ந்தது. இன்றைய இணையத்தின் அதிவேகத்தை ஒத்த துரிதப்படுத்தலைக் கொணர்ந்தது. புதிதாக எழுதப்பட்ட ஒவ்வொரு நிலப்படமும் உலகைத் திருப்பி போட விழைந்த புது முயற்சி. ஆனால் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு எல்லா வரைபடங்களுமே, தற்சார்புடையவையாக, அதாவது, எழுதுபவர்களின் சொந்த நோக்கைப் பொறுத்தே அமைந்தன.



எழுதுபவரின் அறிவை ஒரு நிலப்படம் பிரதிபலிக்கும் என்றாலும், இன்னும் அறியப்படாத உலகங்களையும் அது தனக்குத்தானே கற்பனை செய்து கொண்டது. ரோமானியர்கள் தாங்கள் அறிந்த இடங்களை வைத்து நிலப்படத்தை நிரப்பினார்கள், கண்டங்களின் நிஜ உரு பற்றி அவர்கள் எந்தக் கவலையும் படவில்லை (அவர்களின் மத்தியதரைக் கடல் வேறெந்த மாக் கடலையும் விடப் பெரிதாக இருந்தது).

கிறிஸ்துவத்தைச் சார்ந்த நிலப்படம் எழுதுபவர்கள் தாங்கள் அறிந்த உலகங்களின் விளிம்புகளில் நன்மை, தீமைகளால் நிரப்பி, ஆபிரிக்காவிலிருந்து பெருத்த வினோத உயிரினங்கள் ஊர்ந்துவருவன போல வரைந்தனர். சில நிலப்படங்களில் துறக்கஉலகும்கூட (சொர்க்கம்) காண்பிக்கப்பட்டது.

1380 ஆம் ஆண்டளவில், மார்க்கோ போலோவின் பயணக் கட்டுரைகள், மக்கள் ஆர்வத்தை கிழக்கு நோக்கி - ஆசியாவின் பக்கம் திருப்ப, நிலப்படங்களும் அதைப் பின்தொடர்ந்தன. பெரும்பாலும் வரைபடங்களில், வரைந்தவர்களின் வேட்கைகளே அவர்கள் வரைய முனைந்த நிலப்பரப்பைவிட அதிகமாக இருந்தன. இவற்றைக் கொண்டு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போவதென்னவோ சாத்தியமில்லாத ஒன்றாக இருந்தது.

1481 ஆம் ஆண்டில், கொலம்பஸ், பெரும்பொருள் தேவைப்பட்ட ஒரு பயணத்திற்கு ஆதரவைத் தேடும் வகையில் உணர்ச்சிப் பெருக்குள்ள வாதங்களை வைத்தார். ஏதேனும் ஓர் உத்தரவாதமின்றி அறியாதஇடங்களுக்குப் பயணம் மேற்கொள்ள யாரும் பொருளுதவி செய்யமாட்டார்கள் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.அதனால் வாதங்கள் வலிமையாக இருக்க வேண்டும் கணக்கிடுதல்கள் அறிவார்ந்தனவாக இருக்கவேண்டும் அளவைகள் நம்பிக்கைக் குரியனவாக இருக்க வேண்டும், இறுதியில் வந்தடையும் முடிவு போய்ச்சேரக் கூடியதாகத் தெரிய வேண்டும் என அறிந்திருந்தார். எனவே அவர் ஒரு நிலப்படத்தை வரைந்தார்.

கொலம்பஸிற்கு நிலப்படம் என்பது, ஆபத்தான ஆனால் பயனளிக்கும் ஒரு பயணத்திற்குப் புரவலரைப் பெறுவதற்கான ஒரு வாதம். தம் நிலங்களின் எல்லைகளை விரிவுபடுத்துவதில் அவர்களுக்கிருக்கும் ஆசையைத் தூண்டி விட்டு அதன் மூலம் அவர்களின் பணப்பைகளைத் தனக்குத் திறக்க வைக்க உதவும் ஒரு வாதம்.

முதலில் கொலம்பஸ், டொலமி அளித்த கணக்கிடுதல்களைப் பார்த்தார். அவற்றில் 180 பாகை கோணத்தில் மொத்த பூமியும் ஒரு நீண்ட துண்டாக இருந்தது, அதில் ஏற்கனவே அகன்றிருந்த ஐரோப்பா-ஆசியா ஆகியவற்றின் இணைந்தநிலப்பரப்பை மேலும் அகட்டி 225 பாகை கோணத்தில் பொருத்தினார். இதனுடன், மார்க்கோ போலோவின் பயணவிவரங்களிலிருந்து 28 பாகைகளைச் சேர்த்தார். சீனாவிலிருந்து ஜப்பானுக்கான தொலைவென முன்வைக்கப்பட்டதை 30 பாகைகள் என்று கணக்கு வைத்துக்கொண்டு அதனையும் சேர்த்தார். இறுதியில் கானரி தீவுகளில் தொடங்கி ஜப்பான் வரையான பயணத் தூரம் 68 பாகையளவே இருக்கும் என்றும் முடிவு கட்டினார், ஆனால் அவருடைய அந்த முடிவு உண்மையான தொலைவில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இருந்தது.

ஆனால், புது உலகொன்றைக்கண்டு பிடிக்கப் போகிற தன் பயணத்தில், கடந்த ஆயிரம் ஆண்டுகளாக வரைபடக் கணக்குகளில் அடுக்கடுக்காய்ச் சேர்ந்து விட்ட ஒரு பெரிய தவறு இருப்பதை அவர் அறிந்தாரில்லை. அவருடைய கணக்கு உலகை அமானுஷ்ய அளவுக்குள் சுருக்கிவிட்டது. அவரால் தன்னிச்சையாகத் தீர்மானிக்கப்பட்ட அந்த 68 பாகைகள் கிட்டத்தட்ட அட்லாண்டிக் பெருங்கடலைக் கடக்கும் தூரத்தையே காட்டின.

எனவேதான், மேற்கிந்தியத்தீவுகளில் அவர் வந்திறங்கியது தற்செயலாக நிகழ்ந்ததென்றாலும், அங்கிருந்தன எல்லாம், இருக்கவேண்டிய இடத்தில் சரியாகவே இருந்தன. (இதனாலோ என்னவோ) கொலம்பஸ் 1506 ஆம் ஆண்டில் அவர் மரணமடையும் வரையிலும் கூட, தான் கண்ட நிலப்பரப்பு புதியது அன்று, கிழக்காசிய கடற்கரையை ஒட்டியதுதான் அது என்று வாதிட்டார்.

முதல்முறையாக வானவியலும் கணிதவியலும் உலகை ஓர் உருவத்துக்குக் கொணர முண்டியடித்தன. ஆனால் எவ்வித உருவம்? 1400 ஆண்டுகளாக ஐரோப்பிய நிலப்படவியலை ஆண்டுகொண்டிருந்த டொலமி எழுதிய நிலப்படம், 180 பாகைக்குள் உலகமே அடங்குவதாகக் காட்டியதால், குறுகிய பயன்பாடு கொண்டதாக இருந்தது. அந்நிலப்படத்தில் வேறுசில தவறுகளும் இருந்தன.- காட்டாக, சூரியன் பூமியைச்சுற்றி வருகிறது என்பது போல.

கொலம்பஸின் மேற்கிந்தியத்தீவுகள் நோக்கிய பயணம் முடிந்து 50 ஆண்டுகள் கழித்து, கண்டங்களின் உருவம்,வடிவம் குறித்த புதிய புதிய தெளிவுறுத்தல்களுடன் ஒன்று மாற்றி ஒன்றாக பற்பல நிலப்படங்கள் எழுதப்பட்டன.

1522 ஆம் ஆண்டில்,நெடும் பயணம் மேற்கொண்ட மகெல்லனின் (Magellan) பயணக்குழு மிக நலிவுற்ற நிலையில் ஊர் திரும்பியது, அதன் தலைவர்(மகெல்லன்) ∴பிலிப்பீன்ஸில் மாண்ட போதும், முதல் முறையாக உலகை ஒரு முறை சுற்றி வரும் பயணம் பூர்த்தியடைந்தது.

1512 ஆம் ஆண்டில், ஜெரார்ட் மெர்க்கேட்டர் தற்போது பெல்ஜியம் என்றழைக்கப்படும் பிரதேசத்தில் பிறந்தார். புவியியல், வானவியல் இரண்டிலும் ஒரு கணித நிபுணர் மூலம் பயிற்சி பெற்ற அவர், நிலப்படங்கள்மீது தீராக்காதல் கொண்டவராக இருந்ததால், 24 வயதிலேயே வெற்றிகரமானநிலப்படவணிகரானார்.

டொலமி கைக்கொண்ட சில அடிப்படைகளைப் பின்பற்றி அதே சமயம் வட- தென் அமெரிக்காவைத் த்னித்தனியாக பிரித்துக் காட்டியதில் சமகாலத்தகவல்களை முழுதும் ஏற்றதான வடிவில், தன் முதல் உலக நிலப்படத்தை 1538 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

1569 ஆம் ஆண்டில், மெர்க்கேட்டர் நிலப்படம் பழைய நிலப்படவியல் கோட்பாடுகளை உடைத்தெறிந்தது. வெறும் பார்வைக்கான ஒரு நிலப்படமாக இல்லாமல், பயன்படக் கூடிய ஒன்றாகவே அது இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. டொலமி, கொலம்பஸ் இருவருடைய நிலப்படங்களில், பலகையில் கோட்டுச்சட்டங்கள் சீரான இடைவெளிகளில் இருந்தன. ஆனால் மெர்க்கேட்டர்எழுதிய நிலப்படத்தில், அட்ச ரேகையும் தீர்க்கரேகையும் பூமத்திய ரேகைக்கு ஏற்றவாறும், தமக்கிடையேயும் குறிப்பிட்ட விகிதத்தில் அளவில் கூடிக் கொண்டு சென்றன. இந்தக் கோட்டுச் சட்டப்படத்தினால் மீகாமர்கள் தத்தம் பாதைகளை சரிபார்த்துக் கொள்ள மெர்கேட்டர் நிலப்படம் உதவியது.

(கொலம்பஸைப் போல் தொலைவில் ஒரு புள்ளியைக் குறிவைத்து அதை அடைந்துவிட முடியும் என்று குத்துமதிப்பாக நம்பி இருக்கத் தேவை இல்லாமல்) உலகை இப்படி ஒரு புதிய பார்வையுடன் பார்ப்பதும், புதிய தேடல் பயணங்கள்மேற்கொள்வதும் பெரும்வெற்றி அடைந்தன. 1576 ஆம் ஆண்டில், மார்ட்டின் ப்ரோபிஷர் வடமேற்குப் பாதைக்கான வாயிலைக் கண்டு பிடித்தபோது, மெர்க்கேட்டர் எழுதிய நிலப்படத்தின் மாதிரி ஒன்று அவர் சட்டைப்பையில் மடக்கி வைக்கப்பட்டிருந்தது.

ஜெரார்ட் மெர்க்கேட்டர் என்னவோ, மிகக் குறைவாகவே பயணம் செய்தவர். அவர் இவ்வளவு கவனமாகத் திட்டமிட்ட பாதைகளில், கடல் வழிப் பயணங்களை அவர் மேற்கொள்ளவே இல்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை அதிகாரிகளை அனுமதிப்பது குறித்து ஆய்வு

## – வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதி கோரி ஐ.நா. அனுப்பியுள்ள கடிதத்திற்கு பதில் வழங்குவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் உயர்மட்டம் தற்போது ஆராய்ந்து வருவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது தொடர்பில் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் குறித்து விபரிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம மேலும் கூறுகையில்,



ஐ.நா.சபையின் மனித உரிமைப் பேரவையின் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக மனித உரிமைப் பேரவையினால் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனினும், மனித உரிமைப் பேரவையின் கடிதத்துக்கு வெளிவிவகார அமைச்சு இன்னும் பதில் கடிதம் அனுப்பவில்லை. இந்தக் கடிதம், அதற்கான பதில் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு தற்போதைய நிலைமையில் ஆராய்ந்து வருகிறது.

எனவே ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு இடம் அளிப்பதா? இல்லையா? என்பது குறித்து தற்போது என்னால் எதுவும் கூற முடியாது.

எனினும் மனித உரிமைப் பேரவையின் அதிகாரிகள் எமது அனுமதியுடனேயே இலங்கைக்கு வரலாம். இது தெளிவான விடயமாகும். அந்த வகையில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டவுடன் அறிவிப்போம் எனத்தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்திற்கு முதலாவதாக வாகனங்களை ஏற்றி வந்த இரண்டு கப்பல்கள் நேற்று முன்தினம் நங்கூரமிட்டுள்ளன. இதில் கப்பல்களிலிருந்து இயக்குமதி செய்யப்பட்ட கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

# அம்பாந்தோட்டையில் இறக்குமதி; ஐம்பது ஆயிரம் மேலதிக செலவு

## ஜே. வி. பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதனால் மேலதிகமாக 50ஆயிரம் ரூபா செலவாகின்றது என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு இரண்டாண்டுகள் பூர்த்தியாகவுள்ளன. என்ன நேர்ந்துள்ளது. கப்பல்கள் வருவதில்லை. சரக்கு ஏற்றும் கப்பல்கள் நங்கூரமிடாத துறைமுகத்தினால் என்ன பயன்? துறைமுகத்தில் பேருந்து நிறுத்த முடியுமா? தற்போது ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்கு வரும் வாகனக் கப்பல்கள் அனைத்தும் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. இந்தத் துறைமுகத்தின் நடவடிக்கைகளினால் வாகனங்களின் விலை 50ஆயிரம் ரூபாவினால் உயர்வடையும் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்புத் துறைமுகத்திலிருந்து அம்பாந்தோட்டைக்கு கப்பல்கள் அனுப்பி வைக்கப்படுவதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன குறிப்பிட்டுள்ளார். குறித்த கப்பல் ஜப்பானிலிருந்து சிங்கப்பூர் வழியாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் கோரிக்கைகளை முன்வைக்கிறது கூட்டமைப்பு

## அமைச்சர் திஸ்ஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)



புலிகளின் கோரிக்கைகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைத்து வருவதாக சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண குற்றம் சுமத்தியுள்ளார

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது குறித்தும் முன் நிபந்தனைகளை கூட்டமைப்பு விதித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2003 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு இடைக்கால சுயாட்சி அதிகாரங்கள் தொடர்பில் புலிகளினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு நிகரான கோரிக்கைகளையே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் முன்வைத்து வருகின்றார்.

வடக்கு கிழக்கின் மீன்பிடி, விவசாயம், கடல் துறைமுகங்கள், கனிய வளங்கள், ஊடகம், மோட்டார் போக்குவரத்து வரி, நீதிமன்றம் மற்றும் பொலிஸ் அதிகாரம் போன்றன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட வேண்டும் என்பதே சம்பந்தனின் கோரிக்கையாக அமைந்துள்ளது. நல்லெண்ண அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் பங்கேற்க வேண்டு மென அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கமோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ முன் நிபந்தனைகளை விதித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் பங்கேற்கக் கூடாது என்பதே தமது நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நிலப்பரப்புக்கள் தொடர்பில் விவசாய அமைச்சு ஆய்வு

இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்புக்கள் தொடர்பில் விவசாய அமைச்சு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. வழமையாக நான்கரை இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், இம்முறை மூன்று இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் மாத்திரமே நெற்செய்கை மேற கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

போதியளவு மழை வீழ்ச்சி இன்மையினால், நெற்செய்கைக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின பிரகாரம், மழைநீர் குறைவாக கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எதிர்பார்த்தளவு நெற்செய்கையை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் அறிந்து கொள்ள முடியும் என விவசாய அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்.

# சன் சீ கப்பலில் நாடு கடத்தல்; மேலும் மூவர் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு எம் வி சன் சீ கப்பல் மூலம் இலங்கை அகதிகளை கனடாவுக்கு ஏற்றிச்சென்றமைக்காக மேலும் மூன்று பேர் மீது ஆட்கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இதில் இரண்டு கனேடியப் பிரஜைகளும் உள்ளடங்குகின்றனர்.

கப்பலை தயார் செய்து நூற்றுக்கணக்கானவர்களை கனடாவுக்கு அழைத்துவர உதவினார்கள் என்ற குற்றச்சாட்டே இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்ராறியோவில் வசிக்கும் நடராஜா மகேந்திரன் மற்றும் தம்பீர்நாயகம் ராஜரட்ணம் ஆகியோரே இந்தக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் மீது எதிர்வரும் வாரத்தில் பிரிடடிஷ் கொலம்பியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய் யப்படும் என்று எதிர்ப்பார்க் கப்படுகிறது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள மூன்றாவது ஆள், சத்தியபவன் ஆசீர்வாதம் என்று தெரிவிக்கபட்டுள்ளது.



இந்தநிலையில் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிருபிக்கப்பட்டால், 1 மில்லியன் டொலர் அபராதம் அல்லது ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்படலாம் என்று கனேடியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களால் கனடாவுக்கு அழைத்து வரப்பட்டதாக கூறப்படும் 492 இலங்கையர்கள் அகதி அந்தஸ்தை பெற்றுள்ளனர். 19 பேருக்கு நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன ஐந்து பேரைக்கொண்ட குடும்பம் ஒன்று அகதி அந்தஸ்து கோரலைக் கைவிட்டுள்ளது.

# அமைச்சர் பந்துலவின் கருத்து; ஆசிரியர்கள் கடும் விசனம்

(கொழும்பு)

பொலன்னறுவையில் வாழ்வோருக்கு கல்வி தேவையில்லையென கல்வியமைச்சர் கூறியிருப்பது இந்நாட்டின் பின்தங்கிய பகுதி இளைஞர்களுக்கு கல்வி வழங்குவதில் அரசாங்கத்திற்கு அக்கறையில்லையென்பதைக் காட்டுவதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய வடமத்திய மாகாணத்தில் நடந்த நிகழ்வொன்றின்போது கல்வியமைச்சர் பந்துல குணவர்தன, பொலன்னறுவை இளைஞர்களுக்கு கல்வி அவசியமில்லையென பகிரங்கமாக கூறியிருந்தார்.

பொலன்னறுவை மக்களுக்கு கல்வி தேவையில்லை. கமம் செய்யும் அவர்களுக்கு கல்வி எதற்கு? அவர்களுக்கு கொஞ்சம் தண்ணீரும் பசளையும் போதுமென அமைச்சர் கூறினார்.

சில பகுதி மக்களுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படத் தேவையில்லையென்பதே அமைச்சரின் கூற்றின் கருத்தாகும். நாட்டின் அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கைகள் அரசாங்கத்திடம் இல்லையென்பதை இது காட்டுவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க கூறினார்.

பின்தங்கிய பிரதேச இளைஞர்கள் உட்பட யாவருக்கும் கல்வி வழங்கும் கல்வி முறைமையை உருவாக்கும் நோக்கம் கல்வியமைச்சுக்கு இல்லையென்பது தெளிவாகத் தெரிகிறதென அவர் மேலும் கூறியுள்ளார்.

# அமைச்சர் பஸிலின் பெயரில் மோசடி; பொலிஸ் அதிகாரி உட்பட மூவர் கைது

(கொழும்பு)

2000 தொன் எடையுள்ள வெற்று, ஆட்லறி ஷெல்களை விநியோகிப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினதும் அவரின் மனைவியினதும் பெயரைப் பயன்படுத்தி வாக்குறுதியளித்து, 7.5 மில்லியன் ரூபாவை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையை துரிதமாக வழங்குமாறு சட்டமா அதிபருக்கு கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றம குறிப்பொன்றை அனுப்பியுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டின் பேரில் ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் அத்தியட்கர் ஒருவர் உட்பட மூன்று சந்தேக நபர்கள், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இவ்விடயம் தொடர்பாக, சட்டமா அதிபரின் ஆலோசனையை தாம் கோரியிருப்பதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் வசமிருந்த 2000 தொன் வெற்று ஆட்லறி ஷெல்களை விடுவிப்பதற்காக மேற்படி சந்தேக நபர்கள் போலி ஆவணங்களை தயாரித்தாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இதற்காக பாதுகாப்பு அமைச்சின் கடிதத் தலைப்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினதும் அவரின் மனைவியினதும் பெயரை மோசடியாகப் பயன்படுத்தி போலி ஆவணங்களைத் தயாரித்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.



# நான் சிந்திப்பது முற்றிலும் நாட்டின் பாதுகாப்பு பற்றியே!

**- சண்டே லீடருக்கு பாதுகாப்பு செயலாளர் அளித்த பேட்டியிலிருந்து.**



மக்கள் மிகவும் ஆர்வமாக இருப்பது யுத்தத்துக்கு பின்னர் நாங்கள் எப்படி முன்னோக்கி நகரவேண்டும் என்பதில்தான்..... கண்ணிவெடி அகற்றல், மீள்குடியேற்றம்.... என்று ஏராளமான விடயங்களை நாங்கள் மாற்றவேண்டி உள்ளது. போருக்குப் பின்பு, இயல்பு நிலையை மீண்டும் கொண்டு வர நாங்கள் பாடுபடுகிறோம்.

நாங்கள் செய்யும் விடயங்களின் வழிகளை மாற்றவேண்டும். 30 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதிகளிடமிருந்து நாங்கள் நேரடியான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருந்தோம், அதற்காக இராணுவம் பல்வேறு வழிகளில் ஈடுபட்டிருந்தது, காவல்துறை பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தது - எனவே நாங்கள் இவை-களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

பொதுமக்களின் வாழ்க்கையிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறார்கள், தமிழ் அரசியல் வாதிகளினதும் மற்றும் தொண்டு நிறுவனங்களினதும் பிரதான முறைப்பாடு இதுதான். ஆனால் எங்களது பிரதான பணி பாதுகாப்புத்தான் என்பதை இன்னும் நாங்கள் நினைவுகூர வேண்டும். பிரபா-கரன், அவரது தலைமை என்பன போய்விட்டன என்பது உண்மை, மற்றும் அவர்களது இராணுவத் திறன்களை நாங்கள் தகர்த்துவிட்டோம், ஆனால் அவர்களது சர்வதேச வலையமைப்பு இன்னும் இருக்கிறது.

தமிழ்ப் போராட்டம் மீண்டும் தலைதூக்கும் என்ற விடயத்தை அலட்சியப்படுத்த முடியாது. நாம் சற்று தளர்வு காட்டினால், அதை தடுப்பதற்கான நடவடிக்ஂகைகளை எடுக்கவில்லை என்றால் அது திரும்பவும் எழக்கூடிய சாத்தியம் உள்ளது.

ஆனால் பாதுகாப்பு படைகள், உளவுத்துறை என்பனவற்றினூடாக நாம் செயல்படும் வழிகளை மாற்ற நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களின் சர்வதேச வலையமைப்பு சிறப்பாக உள்ளது. சமீபத்தில் அரசாங்கத்தின் மீது அவர்கள் எவ்வளவு அழுத்தங்களை அவர்கள் கொண்டுவந்தார்கள் என்பதை நீங்கள் பார்த்தீர்கள். சர்வதேச வலையமைப்பு இயங்குகிறது. பிரபாகரன் இருந்தபோது அவர்கள் அவருக்கு ஆதரவு வழங்கினார்கள். அவர்கள் ஒரு ஜனநாயக அமைப்பு என்று யாரும் சொல்ல முடியாது.

துரதிர்ஷ்டவசமாக சில சர்வதேச நாடுகள் இந்தக் குழுக்கள் எல்.ரீ.ரீ.ஈயின் ஒரு பகுதி என்பதை மறந்து விட்டார்கள். அவர்கள் ஜனநாயக முகத்தைக் காட்டினாலும் எல்.ரீ.ரீ.ஈ ஒரு தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம். அவர்களின் சில பேச்சுக்களை நீங்கள் செவிமடுத்தால் அவர்கள் எல்.ரீ.ரீ.ஈயின் அதே இலட்சியங்களையும் மற்றும் இலக்குகளையும் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்... இலங்கையை பிளவுபடுத்துவதும் தனிநாட்டை உருவாக்குவதும்.

சில எல்.ரீ.ரீ.ஈ ஆட்கள் - மிகவும் உயர் மட்டத்தை சேர்ந்தவர்கள் அல்ல ஆனால் கீழ்மட்டத்தை சேர்ந்தவர்கள் - சட்டவிரோதமாக மற்றும் சட்டபூர்வமாக இந்தியாவுக்கு தப்பியோடி உள்ளார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அங்கிருந்து அவர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்றுள்ளார்கள். ஏராளமான படகுகள் அவர்களை வெளியே கொண்டு போகிறது. மிகவும் ஆரம்பத்தில் இரண்டு கப்பல்கள் கனடாவுக்கு சென்றிருக்கின்றன. இந்தக் கப்பல்களில் சென்றவர்கள் அனைவரும் கிட்டத்தட்ட முன்னாள் எல்.ரீ.ரீ.ஈயினரே.

அங்கிருந்து அவர்கள் இங்குள்ளவர்களுடன் இணையம் மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சிக்கிறார்கள். அதேநேரம் மிகச் சிறிய அளவிலாவது

இந்த இயக்கத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அவர்கள் கடும் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதனால் தான் நாங்கள் கண்காணிப்பு மற்றும் அவதானிப்பு மூலம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். அதனால்தான் இந்தப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை திருப்பியழைக்க முடியாது என்று ஜனாதிபதி சொன்னார்.

இப்போது தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்கோ அல்லது அதிகமான வீதித்தடை சோதனை நிலையங்களுக்கோ அல்லது விசாரணைகளுக்காக மக்களை சுற்றிவளைப்பு செய்யவேண்டியதோ, அவசியமில்லை. அது இனிமேலும் தேவையற்றது. ஆனால் விழிப்புணர்வுடன் இருக்க வேறுபல முறைகள் உள்ளன.

விசேடமாக உளவுத்துறை பகுதியில் - நாங்கள் இராணுவ புலனாய்வு பிரிவு-களை அதிகரித்துள்ளோம். மிகவும் மேம்பட்ட வழிகளில் அவர்களுக்கு மேலும் மேலும் பயிற்சி வழங்கி வருகிறோம், எனவே இந்த விவகாரங்களில் அவர்களால் தகவல்களைச் சேகரித்து முன்னெச்சரிக்கை வழங்க முடியும். அப்போது நாங்கள் குற்றவியல் நடவடிக்கைகளில் தொடர்பு கொள்ளக் கூடியவர்கள் என்று நாங்கள் அறிந்து வைத்திருக்கும் சில குறிப்பிட்ட நபர்கள்மீது ஒரு கண் வைத்திருப்போம்.

மறுவாழ்வு பெற்று விடுதலையான குறிப்பிட்டளவு ஆட்களில், சிலர் தங்களை மிகவும் சிறப்பாக மாற்றிக்கொண்டு, சமூகத்துடன் நன்கு ஒருங்கிணைந்துள்ளார்கள்...... சிலர் பல்வேறுபட்ட தொழில்களை மகிழ்வுடன் செய்து வருகிறார்கள். சிலர் தங்கள் சொந்த தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆனால் ஒரு சில பேர், பயங்கரவாதிகள் அல்ல. ஆனால் சாதாரண குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நபர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபடுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அவர்களில் சிலர் திருமணம் முடித்து குடும்பத்துடன் வாழ்கிறார்கள், எனவே அவர்களை நாங்கள் தொடர்ச்சியாக சமூகமளிக்கும்படி கேட்டு தொந்தரவு செய்வதில்லை, ஆனால் நாங்கள் தொடர்ச்சியான அவதானிப்புகளை மேற்கொண்டு அவர்களை கண்காணித்து வருகிறோம். எனவே இந்தக் கோணத்தில் நிறைய முக்கியத்துவம் உள்ளது.

நாங்கள் செய்யும் மற்றொரு முறை, சில குறிப்பிட்ட பகுதிகளில் நாம் இராணுவ முகாம்களை நிலைநிறுத்தியுள்ளோம். இப்போது உயர் பாதுகாப்பு வலயங்கள் கிடையாது, ஆனால் நாங்கள் நிலைநிறுத்தியுள்ள இராணுவத்தினர் அங்குள்ளார்கள் - மிகவும் மூலோபாயமா-னவையாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் முகாம்கள் இருப்பதனால் சில குறிப்பிட்ட இடங்களை எங்களால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

முல்லைத்தீவைப் போன்ற அடர்ந்த காடுகள் உள்ள இடங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க கூடியதாக நாங்கள் சில முகாம்களை அமைத்துள்ளோம். கடற்படை முகாம்களையும், மூலோபாயம் மிக்க இடங்களில் நிலைநிறுத்தியுள்ளோம். உதாரணத்துக்கு சிலாவத்துறை, இது பிரசித்தமான ஒரு இடம். எல்.ரீ.ரீ.ஈ இந்தியாவிலிருந்து ஆயுதங்களை கடத்தி வருவதற்காக இந்த இடத்தைப் பயன்படுத்தியது. மேலும் முல்லைத்தீவின் கிழக்குப் புறமாக உள்ள நாச்சிக்குடா. கடல் ஆதிக்கம் மிகவும் முக்கியமான அம்சம்.

எல்.ரீ.ரீ.ஈ யிடம் எங்கள் இராணுவத்திடம் உள்ளது போலவே ஆயுதங்கள் இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.... அதேபோன்ற எறிகணை துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், சிறியரக பீரங்கிகள் போன்றவை அவர்களிடம் இருந்தன, ஆனால் இவற்றில் எதுவும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவை அல்ல.

---

ஜப்பானில் மட்டும் ஏன் காமிக்ஸ் அதிகம் படிக்கிறார்கள் என்ற கேள்விக்கு ஜப்பானியர்கள் சொல்லும் பதில், ஜப்பானில் மட்டும் தான் ஒசாமு டெசூகா (Osamu Tezuka) இருக்கிறார், இவரது சித்திரக்கதைகளை ஒரு முறை வாசித்தால் போதும் பிறகு வாழ்க்கை முழுதுவம் நீங்கள் மாங்கா வாசிப்பவராகி விடுவீர்கள் என்கிறார்கள், அது உண்மைதான்

ஒசாமு டெசூகாவை மாங்காவின் கடவுள் என்று சொல்கிறார்கள்.

# புத்தனின் சித்திரக்கதை

மாங்கா என்பது ஜப்பானிய காமிக்ஸ், ஐந்து முதல் ஐம்பது வரை ஒவ்வொரு வயதினருக்கும் ஏற்றவகையில் காமிக்ஸ் புத்தகங்கள் ஜப்பானில் கிடைக்கின்றன. இதில் ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ், டால்ஸ்டாய் போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளும் கூட படக்கதைகளாக வெளியிடப்பட்டிருக்கினறன.

மாங்கா வாசிப்பது சினிமா பார்ப்பதற்கு நிகரான ஒன்று, மாங்கா காமிக்ஸின் இரண்டு முக்கிய அம்சங்கள் ஒன்று dramatic மற்றது action-filled, ஆகவே விறுவிறுப்பான கதை சொல்லல் காரண-மாக கையில் எடுத்த புத்தகத்தை கீழே வைக்கவே முடியாது. குறிப்பாக க்ளோஸ்அப் காட்சிகளாக வரையப்படும் படங்கள் கதையின் உணர்ச்சிநிலையைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன.

மாங்காவில் பலவிதங்கள் உள்ளன. இதில் சாமுராய் கதைகள் துவங்கி அறிவியல் அறிஞர்கள், தத்துவ ஆளுமைகள், உலகப்புகழ் பெற்ற கலைஞர்கள் என பலரது வாழ்க்கையும் மாங்காவாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இது போலவே மிதமிஞ்சிய பாலியல் அம்சங்களைக் கொண்ட XXX மாங்கா காமிக்ஸ்களும் வயது வந்தோருக்காக வெளியிடப்படுகின்றன.

ஜப்பானிய சித்திரக்கதை மரபில் முன்னோடி ஓவியர் டெசூகா. இவர் ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ஓவியங்களை வரைந்து 700 மாங்கா காமிக்ஸ் புத்தகங்களாக உருவாக்கியிருக்கிறார். இது மட்டுமின்றி தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக இரண்டு இலட்சம் ஓவியங்கள் வரைந்து 500 எபி சோட் அனிமேஷன் படங்களை உருவாக்கியிருக்கிறார்.




புத்தரின் வாழ்க்கையை ஒசாமு டெசூகா எட்டு தொகுதிகளாக மாங்கா காமிக்ஸ் வடிவில் வெளியிட்டிருக்கிறார். அதில் முதல்பகுதி தற்போது திரைப்படமாக்கப் பட்டிருக்கிறது.

புத்தரின் வாழ்க்கையை சுவாரஸ்யமான புனைவோடு இணைத்து டெசூகா உருவாக்கியிருக்கிறார். 1972இல் Phoenix இதழில் தொடராக வெளியாகிய இந்தப் படக்கதை 11 வருஷங்கள் நீண்டு சென்று 1983இல் நிறைவு பெற்றது. அதன்பிறகு இவை எட்டு தனித்தொகுதியாக வெளிவந்து மிகுந்த முக்கியத்துவம் பெற்றது.

முதல்பகுதி கபிலவஸ்து, இதில் புத்த வாழ்வோடு இணைந்த ஜதீகங்கள், நிகழ்வுகள் விவரிக்கப்படுகின்றன. புத்தரின் பிறப்பிற்கு முந்திய நிகழ்வுகள் விரிவாக இடம்பெற்றுள்ளன.

பனியில் விழுந்துகிடக்கும் ஒரு துறவிக்கு உதவி செய்ய ஒரு முயல் ஒரு நரி ஒரு கரடி ஆகியவை முயலுகின்றன. மரக்கட்டைகளை சேகரித்துவந்து நெருப்பு மூட்டி குளிரைப் போக்க உதவுகின்றன. ஆனால் அந்த துறவி யின் பசிக்கு உணவில்லை. அதற்காக முயல் நெருப்பில் விழுந்து தன்னைத் தானே பலியிட்டுக் கொள்கிறது. தனக்காக உயிர்த்தியாகம் செய்த முயலின் உடலை வானை நோக்கி உயர்த்திக் காட்டுகிறார் துறவி. முயலின் ஆன்மா வான-ில் ஒரு ஜோதியாக கரைகிறது. இப்படித் தான் தொடங்குகிறது ஒசாமுவின் புத்தர் படக்கதை.

முழுநீள வடிவில் புத்தரின் வாழ்வை சினிமாவாக பார்ப்பது போன்ற உயர்ந்த அனுபவத்தை தருகிறது இப்படக்கதை.

வழக்கமான காமிக்ஸ் படச்சட்டகத்தை முற்றிலும் உருமாற்றி மாறுபட்ட சித்திரத் துண்டுகளைக் கொண்டு கதை சொல்பவர் டெசூகா, சண்டையை அவர் வரையும் விதத்தில் நாம் காட்சிகளின் தாவல்களை, விசையோடு மோதிக்கொள்ளும் ஆவேசத்தை, சித்திரங்களாக காண முடிகிறது.

அதிசாகசங்களும், மிகை கற்பனையில் உருவான மிருகங்களும், மாற்றுலோகங்களும் ஒன்று கலந்த இந்தக் கதையாடல் புத்தரை பற்றி நமக்குள் இருந்த வழக்கமான படிமத்தை முற்றிலும் உருமாற்றி விடுகிறது.

**அவசியம் வாசிக்க வேண்டிய படக்கதையிது.**

அவைகளை அவர்கள் வெளியில் கொள்வனவு செய்து நாட்டுக்குள் கடத்தியிருந்தார்கள் - நாங்கள் அந்தப் பாதையை தடைசெய்திருந்தோமானால், நாங்கள் இந்தமாதிரியான ஒரு யுத்தத்தை சந்தித்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. எனவே கடல்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மிகவும் முக்கியம். இலங்கையை சுற்றியுள்ள கடற்கரைகளை கண்காணிப்பதற்காக நாங்கள் கரையோர காவற்படைகளை உருவாக்கியுள்ளோம். கடற்படையினருக்கு மேலதிக உபகரணங்களை நாங்கள் பெறுவதற்கு விரும்புகிறோம். அப்போதுதான் கடற்படை ஆழ்கடலுக்கு அப்பால் சென்று ஆதிக்கம் செலுத்தமுடியும். எங்கள் புதிய பாதுகாப்பு கொள்கையில் அது பிரதான அம்சங்களில் ஒன்றாக உள்ளது. அந்த முனையை நோக்கி நாங்கள் கடலைக் கண்காணிப்பதற்காக ராடர் கருவிகள் போன்ற மேலதிக உபகரணங்கள் பலவற்றை வாங்குவதன் மூலம், பல நடவடிக்கைகளை செயல்படுத்தியுள்ளோம்.

ஏராளமான வர்த்தக கப்பல்கள் இலங்கையை கடந்து செல்வதால் அது இலங்கைக்கு மட்டுமன்றி பிராந்திய ரீதியாகவும் உலகளாவிய வகையிலும் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. சோமாலியாவில் உள்ள கடற்கொள்ளைக்காரர்களால் நடத்தப்படுவது போன்று இங்கும் நடைபெறுவதை நாங்கள் விரும்பவில்லை, அது மட்டுமன்றி இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு மிகவும் முக்கியமான விடயம். எனவே நாங்கள் இந்தியா மற்றும் மாலைதீவு என்பனவற்றின் உதவியுடன் பணியாற்றி வருகிறோம்.

அதேசமயம் எங்கள் படையினரை மிகவும் தொழில்திறன் மிக்கவர்களாக வளர்த்தெடுப்பதற்காக நாங்கள் பயிற்சிகளையும் வழங்கி வருகிறோம் - ஒரு தொழிற்திறன் மிக்க இராணுவத்தை வைத்திருப்பது மிகவும் முக்கியமானது, நீண்ட காலமாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாடாக நாங்கள் இருப்பதால், அது மீண்டும் உருவாவதை அனுமதிக்க முடியாது.

எனது எண்ணமெல்லாம் 2009இற்குப் பிறகு நாங்கள் முன்னோக்கி நகரவேண்டும் என்பதே - நான் சிந்திப்பது முற்றிலும் நாட்டின் பாதுகாப்பு பகுதியை பற்றி மட்டுமே. 80 களின் மற்றும் 90 களின் ஆரம்பத்தில் நடந்தவைகளை அனுமதித்தால் அதனால் பயனில்லை. கீழ்மட்ட அமைப்புகள் வளர்வதை நீங்கள் அனுமதிக்க கூடாது.

# நாய்களைப் பற்றி என்ன தெரியும்?



☛ நாய்களுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை. அது தன் உடல் வெப்பத்தை வெளியேற்ற நாக்கை முழுவதுமாக வெளியே தொங்கவிட்டு வேகமாய்ச் சுவாசிக்கும்.

☛ நாயின் மூக்கை வைத்து அதன் உடல்நிலையைக் கண்டுபிடித்துவிடலாம். அதில் ஈரத்தன்மை எப்போதும் இருந்துகொண்டேயிருந்தால் நல்ல உடல்நலத்தோடு இருக்கிறது என்று அர்த்தம். நாயின் மூக்கு உலர்ந்திருந்தால் ஏதோ உடல்நலக் கோளாறு என்று பொருள்.

☛ நாய் தன் நாக்கைக் கொண்டே தன்னை சுத்தம் செய்து கொள்கிறது.

☛ மனிதர்களுக்கு 32 பற்கள் என்றால் நாய்களுக்கு 42 பற்கள் இருக்கும்.

☛ மனிதனைவிட வாசனை உணர்ச்சி சம்பந்தமான கலங்கள் நாயிடமே அதிகமாக உள்ளன.

☛ நியூசிலாந்தில் நாய்களை வளர்ப்போர் அவற்றை 24 மணிநேரத்திற்கு ஒரு முறையாவது வெளியே காலாற அழைத்துச் செல்ல வேண்டும் என்று சட்டமே இருக்கிறது.

☛ ஒரு நாயை 5 நாட்களுக்கு தூங்க விடாமல் தடுத்துக்கொண்டே இருந்தால் அது இறந்துவிடும். அதை 5 நாட்கள் பட்டினி போட்டால் கூட சாகாது. உணவைவிட தூக்கமே நாய்க்கு அதிக முக்கியம்.

☛ சுவிஸ், ஸ்கொட்லாந்து போன்ற நாடுகளில் நாய் ஓட்டப்பந்தயம் நடைபெறுவது வழக்கம். அது அந்த நாடுகளில் பிரபலமான நிகழ்ச்சி.

☛ ஸ்கொட்லாந்தில் ஆண்டுதோறும் நடைபெறும் நாய் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெறும் நாய்க்கு 'கிரேஹறாண்ட் டெர்பி' எனும் பட்டம் அளித்து கௌரவிக்கப்படுகிறது. அதன் உரிமையாளருக்கு 3500 பவுண்கள் வெகுமதியும் அளிக்கப்படுகிறது.

☛ ஐரோப்பியர்களில் பெரும்பாலானவர்கள் நாய்களை அழைத்துச் செல்ல தனி கார்கள் வைத்திருக்கிறார்கள்.

☛ டிங்கோ எனும் அவுஸ்திரேலிய வகை நாய்தான் மிகவும் மெலிதாகவும், குறைவாகவும் குரைக்கும்.

☛ காற்றின் எதிர்த்திசை நோக்கியே நாய் எப்போதும் தலை வைத்துத் தூங்கும். அதனால்தான் எதிரியின் நடமாட்டத்தைப் புரிந்து கொள்ளவும் எதிரியிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் நாயால் முடியும்.

☛ ஒரே சமயத்தில் நம் இரு கண்களாலும் ஒரு பொருளைத்தான் பார்க்க முடியும். ஆனால் நாய்களால் ஒரே சமயத்தில் இரண்டு கண்களால் வெவ்வேறான பொருள்களைப் பார்க்க முடியும்.

☛ உலகம் முழுவதும் எல்லா காலநிலைகளிலும் வாழும் ஒரே விலங்கு நாய்தான்.

☛ சென். பேணார்ட் என்ற வகை நாய்கள் தான் உருவத்தில் பெரியவை. அவை பொதுவாக 120 கிலோ எடை வரை இருக்கும்.

☛ உருவத்தில் சிறிய நாயினம் சிஹுவாஹுவா என்பதுதான். நன்றாக வளர்ந்த இந்த நாயின் நீளம் 12 முதல் 15 அங்குலம், எடை 2.5 கிலோ தான் இருக்கும்.


☛ குட்டை குட்டையாகப் பஞ்சுப் பந்து போலக் காட்சியளிக்கும் பெகிங்கிஸ் நாய் இனம் பார்வையற்றவர்களை வழி காட்டி நடத்திச் செல்வதில் சிறந்தவை.

☛ ரொக்கெட்டில் பயணம் செய்து விண்வெளிக்குச் சென்ற முதல் நாயின் பெயர் லைக்கா.

☛ டாபர்மேன், பின்ஷன், பொமரேனியன், லாசா ஆப்சோ, ரிட்ரீவர், ஸ்பானியல், ஜெர்மன் ஷெப்பர்ட் போன்றவை எல்லாம் சில மேல்நாட்டு நாய் ரகங்கள்.

# தமிழ் மக்களுக்கான மாற்றுத் தலைமை?


- யதீந்திரா கட்டுரையிலிருந்து.



சமீபத்தில் இரா.சம்பந்தனின் தலைமையில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் தலைவர்களும் சந்தித்திருந்தனர். இதன் போது கூட்டமைப்பை ஒரு கட்டுறுதியான அரசியல் அமைப்பாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கூட்டம் இடம்பெற்று சில நாட்களிலேயே தற்போது கூட்டமைப்பில் அங்கம் வகித்துவரும் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் மற்றும் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளை கூட்டமைப்பில் அனுமதிக்க முடியாது என்று மட்டக்களப்பு தமிழரசுக் கட்சியினர் கையெழுத்திட்டு சம்பந்தனுக்கு அனுப்பியுள்ளதாக அரியநேத்திரன் தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் புளொட் கண்டன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றது. என்று தீரும் கூட்டமைப்பினரின் இவ்வகை ஊடல்?

இன்று கூட்டமைப்புக்குள் இடம்பெற்றுவரும் முரண்பாடுகளை இப்பத்தி இரண்டு வகையில் பார்க்க முயல்கிறது. ஒன்று கூட்டமைப்பிற்கு சட்டரீதியாக தலைமை தாங்கி வரும் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் முரண்பாடுகள். அடுத்தது, ஐந்து கட்சிகளின் கூட்டு முன்னணி என்னும் வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் நிலவும் முரண்பாடுகள்.



இதுவரை தமிழரசுக் கட்சிக்குள் எந்தவொரு முரண்பாடும் இல்லை என்னும் தோற்றமே தெரிந்தது. ஆனால் சம்பந்தன் சிங்கக் கொடி ஏற்றிய விவகாரம் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் செயலாளர், மாவை சேனாதிராஜா பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டதும், பின்னர் அதனை மறுத்து அதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என இரா.சம்பந்தன் கூறியதும் முதல் முதலாக தமிழரசுக் கட்சிக்குள் நிலவிவந்த முரண்பாட்டை வெள்ளிடைமலையாக்கியது.

உண்மையில் தமிழரசுக் கட்சிக்குள் ஏலவே ஒரு முரண்பாடு நீறு பூத்த நெருப்பாகவே இருந்தது. அது தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அதிகம் முதன்மைப்படுத்தப்பட்டு முன்னுக்கு கொண்டுவரப்பட்டதால் ஏற்பட்ட முரண்பாடு ஆகும்.

சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியல் பின்னணி கொண்ட ஒருவரல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்கு விவகாரத்தில் ஆனந்தசங்கரிக்கு எதிராக, சம்பந்தன் சார்பில் நீதிமன்றத்திற்குச் சென்றவர். இதன்போது ஏற்பட்ட தொடர்பின் காரணமாகவும் சம்பந்தனின் தனிப்பட்ட விருப்பின் பேரிலும் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டவர். முன்னர் சம்பந்தனுக்கு நீலன் திருச்செல்வம் உதவியது போன்று இப்போது சுமந்திரன் உதவியாக இருக்கின்றார். ஆனால் சம்பந்தனுக்கான உதவி என்பது இறுதியில் சுமந்திரனை மற்றவர்கள் அனைவரைக் காட்டிலும் முதன்மையானவராக தரமுயர்த்தியிருக்கிறது. இன்று பலரும் சம்பந்தனுக்கு அடுத்த தலைவராக சுமந்திரனையே பார்க்க முயல்கின்றனர், குறிப்பாக ராஜதந்திர வட்டாரங்களில் தமிழரசுக் கட்சி என்றால் சம்பந்தன் இல்லாவிட்டால் சுமந்திரன் என்னும் நிலைமையே உருவாகியிருக்கிறது.

இதுவே தமிழரசுக் கட்சி வட்டாரங்களுக்குள் புகைந்து கொண்டிருக்கும் முரண்பாட்டின் பின்னணியாகும். இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமாயின் தமிழரசுக் கட்சி சம்பந்தனுக்கு அடுத்த தலைவர் யார் என்பதை அறிவிக்க வேண்டும்.

அடுத்த முரண்பாடு, த.தே.கூட்டமைப்பை ஓர் அரசியல் அமைப்பாக பதிவு செய்வது தொடர்பான முரண்பாடுகள். விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழர் அரசியலில் இருந்து அகற்றப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், மேற்படி முரண்பாட்டுக்கு ஒரு இணக்கமான தீர்வைக் காண முடியவில்லை. இவ்வகை முரண்பாடுகள் ஒரு கட்டத்தில் த.தே.கூட்டமைப்பு பிளவுறுவதிலேயே முடிவுறலாம்.

மாகாணசபை தேர்தலின்போது வேட்பாளர் தெரிவில் மேற்படி முரண்பாடுகள் மிகவும் தீவிரமடையலாம். அது இறுதியில் கூட்டமைப்பு இரு அணிகளாக உடைவுறும் நிலைமையை தோற்றுவிக்கலாம். இது பற்றி முன்னரும் இந்த பத்தியாளர் எச்சரித்திருக்கின்றார்.

இன்றைய சூழலில் வடக்கு கிழக்கில் வலுவான தமிழ் அரசியல் அமைப்புக்கள் இரண்டுதான் உண்டு. ஒன்று த.தே.கூட்டமைப்பு. இரண்டு, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி. ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கும் த.தே.கூட்டமைப்புக்கும் இடையில் காணப்படும் அடிப்படையான வேறுபாடு - அரசுடன் இணைந்திருப்பதும் - அரசுக்கு வெளியில் இருப்பதும்தான்.

சம்பந்தன் அரசுக்கு வெளியில் இருந்து சிங்கக் கொடியை பிடித்திருக்கின்றார். டக்ளஸ் தேவானந்தா சிங்கக் கொடியின் கீழ் இருக்கும் அரசாங்கத்துடன் இருக்கின்றார். ஆனால் அரசுக்கு வெளியில் இருப்பதே கூட்டமைப்பின் பலமாகவும் அரசுடன் இருப்பது டக்ளஸ் தேவானந்தாவின் பலவீனமாகவும் இருக்கின்றது.

ஒருவேளை டக்ளஸ் தேவானந்தா (வீணையில்) தனித்து நின்று அரசியல் செய்யும் முடிவை எடுப்பாராயின் வடகிழக்கில் த.தே.கூட்டமைப்பிற்கான ஒரு வலுவான மாற்றுத் தலைமையாக ஈ.பி.டி.பி ஆல் கொடுக்க முடியும். சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி தனித்து நடாத்திய மேதின நிகழ்வில் சுமார் 8000 - 10000 வரையான மக்கள் பங்குகொண்டிருந்தனர் என்பது ஊடகங்கள் பலவும் சுட்டிக்காட்டியிராத விடயம் ஆகும். இவ்வாறான நிலைமைகள் எத்தகைய செய்தியை செல்லுகின்றன? மக்கள் மாற்றுத் தலைமை ஒன்றை விரும்புகின்றனர் என்பதையா?



கஜேந்திரகுமார் பொன்னம்பலம் த.தே.கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று அத்தகையதொரு மாற்றுத் தலைமை ஒன்றை வழங்க முற்பட்டிருந்தார். எனினும் அவரின் யதார்த்தமற்ற அரசியல் கோசங்கள் அவருக்கான இடத்தைக் கொடுத்திருக்கவில்லை. எனவே யதார்த்தபூர்வமான அரசியல் அணுகுமுறை, அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதொரு

சிறந்த வேலைத்திட்டம், இவற்றுடன் ஒரு தரப்பு முயற்சிக் குமாயின் மக்கள் அத்தகையதொரு அணியின் பக்கமாக திரும்ப மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அத்தகையதொரு மாற்றுத் தலைமை த.தே.கூட்டமைப்பின் உடைவிலும் வரலாம் அல்லது த.தே.கூட்டமைப்பிற்கு வெளியில் இருந்தும் வரலாம்.

# தெரிவுக்குழு மூலம் தீர்வைப்பெற கூட்டமைப்பு தயங்குவது ஏன்?

## கேட்கிறார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் தயக்கம் காட்டி வருகின்றது எனப் புரியவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக 60 வருட காலம் பொறுத்திருந்த இவர்களால், 6 மாதங்கள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து செயற்பட முடியாதா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் எதிர்கால நிலைமைகள் குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் சேனாரட்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பிரேரிக்கப்பட்டுளள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அரசாங்கத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இன்னும் அதில் இணைந்து கொள்ளாமல் உள்ளன.

இதனால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாத நிலைமைகளே உள்ளன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து செயற்படுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏன் இன்னும் தயக்கம் காட்டிவருகின்றது என எமக்குப் புரியவில்லை.

அதாவது நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக ஆறு மாதங்களில் தீர்வு தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேணடும் என பிரேரணையில் குறிப்பிடப்பட்டுளளது.



அவ்வாறு ஆறு மாதங்களில் அறிக்கை சமர்ப் பிக்கப்படவேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ள நிலையில், தமிழத் தேசியக் கூட்டமைப்பு எவ் விதமான தயக்கமுமனறி தெரிவுக்குழுவில் இணைநது கொள்ள முடியும்.

ஒருவேளை ஆறு மாத காலத்தில் தீர்வு வராவிடின் அரசாங்கத்துக்கே சாதகமற்ற நிலைமை ஏற்படும். அத்துடன் அந்த நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நியாயத்தை விளக்கலாம். இதனை புரிந்துகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக குழுவில் இணைந்துகொள்ள முன்வர வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக 60 வருடகாலம் பொறுத்திருந்த இவர்களால், 6 மாதங்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து செயற்பட முடியாதா? என்பதே எமது முன்னுள்ள கேள்வியாகும் எனவும் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

# அனர்த்த நிலைக் கட்டுப்பாடு மன்னாரில் முதற்கட்டப் பணி

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அனர்த்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான முதற்கட்ட வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியவை இணைந்து நடைமுறைப்படுத்தும் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறித்த செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள பொறியியலாளர் குழுவினரினால் கிராம மக்களின் உதவியுடன் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. மன்னார் உப்புக்குளம் தெற்கு, எமில் நகர், பள்ளிமுனை, துள்ளுக்குடியிருப்பு, வங்காலைகிழக்கு, மேறகு, தோமஸ்புரி, சிலாபத்துறை, மருதமடு, மழுவராஜன் கட்டையடம்பன் போன்ற கிராமங்களில் முதற்கட்ட ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# நூதன சாலைத் திருட்டு 18 பேரிடம் விசாரணை

(கொழும்பு)

கொழும்பு தேசிய நூதனசாலையில் புராதன பெறுமதி மிக்க பொருட்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் குறித்த நூதன சாலையில் பணிப்பாளர் உள்ளிட்ட மேலும் 18 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். குறித்த வழக்குத் தொடர்பான விசாரணை கொழும்பு பிரதான நீதிபதி ரஸ்மி சிங்கபுலி முன்னிலையில் இடம்பெற்றது.

கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொள்ளை சம்பவம் தொடர்பில் குருந்துவத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில், மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு இரகசிய பொலிஸார் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை அறிக்கையினை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தனர். நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட சாட்சிகள் தொடர்பில் ஆராய்ந்த நீதிபதி, அருங்காட்சியகத்தில் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வறிக்கையினை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.



வவுனியா தெற்கு கல்வி வலயத்திலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் செயலமர்வு, வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் மண்டபத்தில் இடம்பெற்றபோது, வட மாகாண உள சமூக வள நிலையத்தின் உதவி முகாமையாளரான சி.உதயகலா செயலமர்வை நடத்துவதையும், கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (160)

சம்பள உயர்வு வழங்கப்படாமை

# ஆளும் கட்சி தொழிற் சங்கங்கள் போராட்டம் நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உறுதியளிக்கப்பட்டதைப் போல, சம்பள உயர்வு எதுவும் இதுவரை வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளுங் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது 10,000 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வாக்குறுதி அளித்திருந்தார்.

2500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக ஆளும் கட்சி வேட்பாளர் ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷ வாக்குறுதி அளித்திருந்தார்.

எனினும், ஜனாதிபதி மீது நம்பிக்கை கொண்டு ஆளும் கட்சி தொழிற்சங்கங்கள் ஜனாதிபதக்கு ஆதரவாக வாக்களிதததாக இலங்கை சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் தலைவர் ஏ.விமலரட்ன தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்பார்த்தளவு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சம்பள உயர்வோ அல்லது வாழ்க்கைச் செலவுப்படி அதிகரப்போ இதுவரையில் வழங்கப் படாமை அதிருப்தி அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குச் சார்பான 32 தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைந்து போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

அண்மைக்காலமாக பொருட்கள் சேவைகளின் விலைகள் பாரியளவில் உயர்வடைந்துள்ளதாகவும், இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

# புதிய ரின்மீன் தொழிற்சாலைகளில் இரண்டு மாதங்களில் உற்பத்திகள்

(கொழும்பு)

தற்போது பூந்தல மற்றும் பேலியகொட ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுவரும் புதிய ரின்மீன் உற்பத்தி தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பமாகுமென மீனபிடி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு பத்தாயிரம் ரின்மீன்கள் இவற்றின் மூலம் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு தொழிற்சாலைகளிலும் நூற்றுக்கும் அதிகமான தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுமென மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் தலைவர் மஹில் சேனாரட்ன தெரிவித்தார்.

காலியில் உள்ள ரின்மீன் தொழிற்சாலையில் தற்போது நாளொன்றுக்கு எட்டாயிரம் ரின்மீன்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இதை நாளொன்றுக்கு பத்தாயிரம் ரின்களாக உயர்த்துவது குறிக்கோள் எனவும் அவர் கூறினார்.

தேசிய ரின்மீன்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளதாகவும் ஆனால், தேசிய தேவைகளை நிறைவு செய்யும் வரை ரின்மீன்கள் ஏற்றுமதி செய்யப்படமாட்டாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் ரின்மீன்கள் தேசிய தேவையாக உள்ளன. தற்போது நாட்டில் நிலவும் காலநிலை காரணமாக சந்தையில் கிடைக்கும் மீன்களின் அளவிலும் பாரிய வீழ்ச்சி காணப்படுகிறது. அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்குள் அது மீண்டும் வழமைக்குத் திரும்பிவிடும் எனவும் தலைவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# வட மாகாண மட்ட கணிதப் போட்டி முடிவுகள்

(தொடர்ச்சி...)

தமிழ் மொழி மூலம்

தரம் - 06

எஸ். சுபவர்ஷனா - (முல் / வித்தியானந்தா கல்லூரி) ,எஸ். சர்மிளா (இறைம்பைக்குளம் மகா வித்தியாலயம்), ஆர். துஷாரங்கன் (ஷாட்லிக் கல்லூரி).

தரம் - 07

எ்ஸ். யதுர்ஷன் (ஷாட்லிக் கல்லூரி), ஆர். ஆதிரயன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். ரிசோபிகா (இறைம்பைக் குளம் மகா வித்தியாலயம்).

தரம் - 08

எஸ்.. சிவதர்சன், என். குமணன், ஆர். எஸ். டினோஷன்

தரம் - 09

ரி. அபிஷேகா(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), என். டிலக் ஈஸ்வரன் ( கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். மேரி நதுூஷா (சென் சேவியர் பெணகள் கல்லூரி).

தரம் - 10

ஜி. கஜானன், ஐ. சுபாகரன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். கார்த்திகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

தரம் - 11

வி. கோபிகா (மெதடிஸ்த பெணகள் உயர்தரப் பாடசாலை), எம். எச். எம். நஜீவ் - சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி,

கே. மதனாகரன் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

Geomatry Activity

ரி.ஷம்சா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜி. விசாளினி (இந்து மகளிர் கல்லூரி), கே. தற்சுதன் ரி. தனுஷன் (வவு - கோவில் புளியங்குளம் மகாவித்தியாலயம்.

**கணித நாடகம் (கீழ்ப் பிரிவு)**

வவு / புதுக்குளம் மகா வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ரன் கல்லூரி.

**கணித நாடகம் (மேற் பிரிவு)**

மன்னார் - சின்னபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, இறைம்பைக்குளம் ஜி.எம்.வி.

கணிதப் போட்டியில் தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப் பட்ட மாணவர்கள் (கீழ்ப்பிரிவு)

தரம் - 06

எஸ். சர்மிகா (இறைம்பைக் குளம் மகா வித்தியாலயம்), ஆர. துஷாரங்கன் (ஷாட்லிக் கல்லூரி).

தரம் - 07

கே. மலண்பன் (ஷாட்லிக் கல்லூரி), ஆர்.யதுஷன் (யாழ். இநதுக் கல்லூரி),

தரம் - 8

ஆர்.எஸ்.டினோசன் (யாழ். இந்துக் கல்லூரி), எல்.ஸ்ரீகர்ஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

(தொடரும்...)

39. நான் முதலாந்தவணை விடுமுறையைக் கழித்த விதம் பற்றி நண்பனுக்கு ஓர் கடிதம் எழுதுக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

*** பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.**

40. நாங்கள் ............................................................ சென்றோம்.
(சரணலயம், சரணாளயம், சரணாலயம், சரணாழயம்)

41. மக்கள் அக்கிராமத்தை ............................................................ கிராமம் என்று அழைத்தனர்.
(பூச்சோலைக், பூஞ்சோலைக், பூஞ்சேலைக், பூஞ்சோளைக்)

*** பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

42. கைகொடுத்தல் ............................................................

43. கிணற்றுள் தவளை போல ............................................................

*** பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

44. புத்தகம் .................................. 46. பேனை ..................................

45. ஐந்து .................................. 47. பச்சை ..................................

*** பின்வரும் தொடர்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

48. Silence Please .................................. 50. Come in ..................................

49. Thank you .................................. 51. What is this ..................................

*** பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினை சிங்களத்தில் எழுதுக.**

52. அம்மா .................................. 54. கதிரை ..................................

53. மாம்பழம் .................................. 55. அதிபர் ..................................

*** பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

56. பாசல .................................. 58. சுதுபா(ட்)ட ..................................

57. கிரி .................................. 59. குருத்துமி ..................................

*** பின்வரும் இணைமொழிகளால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

60. அங்கும் இங்கும் ............................................................

61. அருமை பெருமை ............................................................




# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II
1மணி 15 நிமிடம்


# கல்வி முரசு

வெளியீடு 79



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


01. உருவில் காட்டப்பட்டுள்ளது A, B, C, D, E என்னும் 5 விமான நிலையங்களின் வரைபடம். 1 cm =75km ஐக் குறிக்கும். ஒரு விமானம் A யிலிருந்து B, C, D இனூடாக E என்னும் நிலையத்தை அடைகின்றது. விமானம் சென்ற முழுத் தூரத்தை km இல் தருக.




............................................................

02. ஒரு சதுரமொன்றின் சுற்றளவு 16 cm இன் 1/2 பங்கு கொண்டது எனின் ஒரு பக்க நீளம் என்ன?

............................................................

03. ஒரு விடுதிச்சாலை மாணவன் மாதம் ஒன்றுக்கு விடுதிப்பணமாக ரூபா 300 கட்டுகிறான். தவணை விடுமுறை கால 3 மாதங்களிற்கும் 1/2 பங்கு பணம் கட்டுகிறான் எனின், அவன் 1 வருடம் முழுவதும் விடுதிச்சாலைக்குக் கட்டும் பணம் எவ்வளவு?

............................................................

04. ஒரு வைத்தியசாலையில் 46 கட்டில்கள் இருந்தன. திங்கள் 46 நோயாளிகள் இருந்தனர். புதன் 4 பேர் விலக இருவர் சேர்ந்தனர். வெள்ளி 6 பேர் விலக மூவர் சேர்ந்தனர். வியாழக்கிழமை வைத்தியசாலையில் இருந்த நோயாளிகள் எத்தனை பேர்?

............................................................

05. எந்தெந்த இரு நாட்களில் வைத்தியசாலையில் 46 நோயாளிகள் இருந்தனர்?

............................................................

06. ஒரு நகரத்திலிருந்து காலை 8.30இற்குப் புறப்படும் பஸ்வண்டி ஒன்று 4 இடங்களில் தரித்து நின்று அடுத்த நகரத்தை முற்பகல் 11.15 இற்கு சென்றடைகின்றது. வழியில் தரிக்காமல் சென்றிருந்தால் முற்பகல் 10.15 இற்கு அடுத்த நகரத்தை அடைந்திருக்கும். ஒவ்வொரு தரிப்பிடத்திலும் அது தரித்து நின்ற நேரம்.

1. 12 நிமிடம் 2. 6 நிமிடம் 3. 4 நிமிடம் 4. 3 நிமிடம்

*** பூமி சூரியனைச் சுற்றுவதை உணர்த்தும் படத்தை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

07. பூமி சூரியனைச் சுற்றுவதால்............................................................ உண்டாகின்றது.
(இரவு / பகல் / பருவ காலங்கள்)

08. பூமி தன்னைத் தானே சுற்றுவதால்............................................................ உண்டாகின்றது.
(இரவு / பகல் / பருவ காலங்கள்)

09. பூமி தன்னைத் தானே சுற்ற எடுக்கும் காலம்............................................................ ஆகும்.
(24 மணித்தியாலங்கள் / 365 1/4 நாட்கள்)

10. பூமி சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம்............................................................ ஆகும்.
(24 மணித்தியாலங்கள் / 365 1/4 நாட்கள்)

11. பூமி சூரியனைச் சுற்றுவது............................................................ ஆகும்.
(வட்டப் பாதையில் / நீள்வட்டப் பாதையில்)

* பின்வரும் பழமொழிகளைப் பூரணமாக்குவதற்கு வெற்றிடங்களை நிரப்புக.

12. ஆறிய கஞ்சி..............................

13. ஆழம் .............................. காலை விடாதே.

14. .............................. மாடு பொதி சுமக்கும்

15. தமிழில் உள்ள உயிர் எழுத்துக்களின் பயன்கள் பற்றி 5 வசனங்கள் எழுதுக. (56 -60)

..............................


..............................

..............................

..............................

..............................

* கீழ்வரும் அமைப்பை அவதானித்தபின் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.




16. குணாளன் வங்கியில் சேமிப்பது 600 ரூபா எனின், அவரது மாத வருமானம் என்ன?

..............................


17. குணாளன் தனது வருமானத்தில் கூடிய பங்கை என்ன செய்வார்?

..............................

18. குணாளன் வங்கியில் சேர்ப்பது மாத வருமானத்தின் என்ன பங்கு?

..............................

19. கீழுள்ள கடிகார முகங்களின் சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தைக் காட்டுவதன் கீழ்க் கீறிடுக.



1. 2. 3.

* பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

20. ஒரு வண்டியில் 365 பேர் பிரயாணம் செய்தார்கள். முதலாவது நிலையத்தில் 98 பேர் இறங்க 48 பேர் ஏறினார்கள். இப்போது புகைவண்டியினுள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

..............................

21. ஒரு தோடம்பழத்தின் விலை ரூபா 8.50 சதம் எனின் நான்கு தோடம்பழங்களின் விலை யாது?

..............................

22. பொலித்தீன் பையொன்றில் 25 கிராம் வீதம் ஒன்றரைக் கிலோகிராம் தேயிலையை எத்தனை பொலித்தீன் பைகளில் அடைக்கலாம்?

..............................



23. ஒரு குளிர்பானப் போத்தல் ஒன்றின் விலை ரூபா 18.50 எனின் 12 குளிர்பானப் போத்தல்களின் விலை யாது?

..............................

24. ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராம் எனின் 5 1/2 இறாத்தல் பாணின் நிறை எவ்வளவு?

..............................

25. ஒரு பேனாவின் விலை 12.50 படி, ரவி ரூபா 200 ஐக் கொடுத்து 12 பேனாக்கள் வாங்கினான் எனின், கடைக்காரர் ரவிக்குக் கொடுத்த மிகுதிப் பணம் எவ்வளவு?

..............................

26. குமாரிடம் இருந்த பணத்தின் இருமடங்கு வசந்தியிடமும் வசந்தியிடமிருந்த பணத்தின் மும்மடங்கு ராஜாவிடமும் இருந்தது. ராஜாவிடமிருந்த பணம் ரூபா 150 எனின் முறையே குமாரிடமும், வசந்தியிடமும் இருந்த பணம் எவ்வளவு?

குமாரிடம்:.............................. வசந்தியிடம்:..............................

27. ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3000 ஆகும். அதில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 2/3 பங்காகும். மிகுதி சிங்கள மாணவர்களாகும். பாடசாலையில் கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையையும் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையையும் தருக

..............................

28. நான் பாடசாலை விட்டு வரும்போது வழியில் ஒரு பூனைக்குட்டியைக் கண்டேன். அது பசியில் "மியாவ், மியாவ்" என்று கத்தியது. அதனை நான் வீட்டுக்குக் கொண்டு சென்றேன். அதன் பின்னர் நடந்தவற்றைப் பற்றி ஆறு வாக்கியங்கள் எழுதுக.வாக்கியங்கள் ஒவ்வொன்றும் 4 சொற்களுக்கு மேற்பட்டதாகவும், எழுவாய், பயனிலைகளைக் கொண்ட கருத்துள்ள வாக்கியங்களாக இருத்தல் வேண்டும்.

..............................

..............................

..............................

..............................

..............................

* பொருத்தமான சொற்களை வைத்து கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்க.

29. .............................. மயில் கூத்தை வாழ்த்திப்பாடும் பாட்டு.

30. உலகில் தலைசிறந்த ..............................சோக்கிரட்டீஸ் ஆவார்.

31. சிலை செய்பவரை ..............................என்று அழைக்கின்றோம்.

32. ரைட்சகோதரரின் தந்தை ஒரு.............................. ஆவார்.

33. இளமையில் கல்வி ..............................எழுத்து.

* சரியாயின் சரியெனவும் பிழையாயின் பிழையெனவும் எழுதுக.

34. உணவுவகைகளை நீண்டநேரம் சமைப்பது நல்லது. ( )

35. தூக்கணாங்குருவி தொங்கும்கூடு அமைக்கும். ( )

36. நீரினால் பரவும் நோய்களுள் வாந்திபேதியும் ஒன்று. ( )

37. கப்பி ஒரு இலகுபொறி ஆகும். ( )

38. விதைகள் காற்றினால் எங்கும் பரவுவதில்லை. ( )

விசேட வினாத்தாள் II ∨ தரம் 05 - 2012 ∨ கல்விமுரசு

# சங்கானைப் பிரதேச வீதிகளை புனரமைப்பதற்கு தீர்மானம்

(கஜா - சிகரம்)

சங்கானை பொது ஆதார வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் வசிக்கின்ற மக்கள், குண்டும் குழியுமாகக் காணப்படும் தாம் வசிக்கின்ற வீதிகளைத் தமது நிதியினைக் கொண்டு புனரமைக்கவுள்ளனர்.

சங்கானைப் பிரதேசத்தில் பல வீதிகள் நீண்ட காலமாகவே புனரமைக்கப்படாத நிலையில், போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பில் பல தடவைகள் சங்கானைப் பிரதேசசபையினரிடம் வேண்டுகோள் விடுத்த போதிலும், அவர்கள் வீதியைப் புனரமைப்பதற்கான எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையிலேயே தாம் அனைவரும் ஒன்றிணைந்து தம்மால் இயன்ற நிதிப் பங்களிப்பினை வழங்கி வீதியைப் புனரமைக்கவுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

# கறுத்தக்கொழும்பான் மாம்பழத்திற்கு குடாநாட்டில் அதிக கிராக்கி



(பகீ - சிகரம்)

யாழ் - கொழும்பு பிரதான பாதையான ஏ-9 வீதியின் சாள்ஸ் மகாவித்தியாலயத்திற்கு அருகே கொடிகாமத்தைச் சேர்ந்த சறோசா என்ற பெண் ஒருவர் மாம்பழ விற்பனையில் ஈடுபட்டு வருகின்றார்.

முன்னர் திருநெல்வேலிச் சந்தையில் மாம்பழ விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகக் குறிப்பிடும் இவர், திருநெல்வேலியில் விற்பனை செய்யும் இடத்திற்கு குத்தகைப் பணம் வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அங்கு செல்வதில்லை எனவும் கொடிகாமத்திலிருந்து ஒவ்வொரு நாளும் காலையில் இங்கு வருவதாகவும், தன்னுடைய மகனே தனக்கு ஒவ்வொரு நாளும் மாம்பழத்தினைக் கொண்டு வந்து தருவதாகவும் கூறினார்.

முற்றிய மாங்காய்களை மரத்துடன் விலை பேசி வாங்குவதாகக் குறிப்பிடும் அவர், கறுத்தக் கொழும்பான், விளாட்டு, சேலன், அம்பலவி போன்ற பழங்களை விற்பனை செய்வதாகவும், எனினும் கறுத்தக் கொழும்பான் மாம்பழங்களையே மக்கள் அதிகமாக விரும்பி வாங்குவதாகத் தெரிவித்தார்.

இதனால் கறுத்தக் கொழும்பான் மாழ்பழங்களை பளையிலிருந்து தனது மகன் கொண்டு வந்து கொடுப்பதாகக் குறிப்பிடும் இவர், 40 ரூபாவிற்கு கொள்வனவு செய்யும் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்றினை 50 ரூபாவிற்கு விற்பனை செய்வதாகவும், 30 ரூபாவிற்கு கொள்வனவு செய்யும் அம்பலவி, விளாட்டு மற்றும் சேலன் போன்ற மாம் பழங்களை 40 ரூபாவிற்கு விற்பனை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தன்னுடைய வியாபாரத்தினைப் பெருக்குவதற்காக மாம்பழங்களை கொள்வனவு செய்ய வருபவர்களிற்கு பழங்களை வெட்டி இலவசமாகக் கொடுக்கின்றார். இதனால் இந்தப் பெண்ணிடம் அதிகளவிலான மக்கள் மாம்பழங்களைக் கொள்வனவு செய்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

# நல்லூர் முடமாவடி வீதி புனரமைக்கப்படுமா?



(பகீ - சிகரம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் ஆலயத்தின் பின் பக்க வீதியான முடமாவடி பூங்கனிச் சோலைக்கு முன்பக்கமாக உள்ள வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது.

ஒளிப்படப்பிடிப்பாளர்களின் முக்கிய இடமாகவும் உள்ள பூங்கனிச் சோலைக்கு அதிகளவிலான மக்கள் போக்குவரத்துச் செய்யும் இந்தவீதி, நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதுடன், புனரமைக்கப்படாத காரணத்தினால் ஏராளமான விபத்துக்கள் இடம் பெறுவதாகவும் வீதியால் பயணம் செய்யும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூங்கனிச் சோலைக்கு ஏராளமான மக்கள் வந்து போகின்றனர். இதனால் அவர்கள் வந்து செல்லும் வாகனங்களை நிறுத்துவதற்கு இடப்பற்றாக்குறை காணப்படுவதுடன், நிறுத்தப்படும் வாகனங்களை எடுத்துச் செல்லும் போதும் வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட, இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# உழைப்பதற்கு ஊனம் தடையல்ல

(கிரு,பகீ - சிகரம்)

நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் தன்னுடைய இரண்டு கால்களையும் இழந்த நடராஜா சோதிலிங்கம் என்ற யாழ்.மாவட்டத் தபாலகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற தபாலதிபர் தன்னுடைய வாழ்வாதாரத்திற்காக முத்திரைகளை விற்பனை செய்து வருகின்றார்

அவர் தன்னுடைய முயற்சியைப் பற்றித்தெரிவிக்கையில்,

இந்த முத்திரை விற்பனை செய்யும் பணியினை 2002ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை 10 வருடங்களாகச் செய்து வருகிறேன். இந்த முத்திரை விற்கும் பணியினை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்க மதகுரு ஒருவரே எனக்கு உதவி வருகிறார். கத்தோலிக்க மதகுரு என்னுடைய வாழ்வாதாரத்திற்கு உதவியாகவும், இந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் மாதாந்தம் சிறு தொகைப்பணத்தினை எனக்கு வழங்கி வருகிறார்.

1996 ஆம் ஆண்டு ஆனைப்பந்திச் சந்தியிலுள்ள எனது வீட்டிற்கு முன்னால் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடித்துச் சிதறியதில், இரண்டு கால்களையும் முழங்காலுக்குக் கீழே இழந்துள்ளதுடன், யாழ்.வைத்தியசாலையில் நான்கு மாதங்களாக சுய நினைவின்றி இருந்து, அதன பின்னர் சுயநினைவு பெற்று போதனா வைத்தியசாலையில் தொடர்நதும் சிகிச்சை பெற்று வந்தேன்.



போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைகளின் பின்னர், யாழ்ப்பாணம் வலுவிழந்தோர்புனர்வாழ்வு நிறுவனத்தினர் (ஜெய்ப்பூர்) நடக்கப் பயிற்சி வழங்கியதுடன், இரண்டு செயற்கைக் கால்களையும் பணம் எதனையும் பெறாமலே பொருத்தினர்.

அரச பணியினை மேற்கொண்டுவந்த ஒருவர் என்பதால் தபால்திணைக்கள சுற்று நிருபத்தின் அடிப்படையில் எனது பணிக்காலம் கணக்கிலிடப்பட்டு மாதாந்தம் 10000 ரூபா பணம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுவருகிறது.

இரண்டு கால்களையும் இழந்த நிலையில், என்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வ தற்காக விசேட தேவையுடையோருக்கான 1 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றினை கொழும்பிலிருந்து என்னுடைய சொந்தப் பணத்திலேயே பெற்றுக் கொண்டுள்ளேன் என்றார்.

இரண்டு கால்களையும் இழந்த போதும் தன்னம்பிக்கையும், துணிவும் இருந்தால் உழைப்பதற்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதற்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

எதிரே நீ வந்தாய்
மிகத் தற்செயலாகத்தான்
வியப்புற்று நீதானா அது
என்பது போல வந்தாய்
நான்தானா அது என்று
திகைப்புற்று நான் நின்றேன்
எண்ணிப் பார்த்தேன் நொடியில்
நீ எதுவென்று குறிப்பேதுமில்லை
என் நினைவில்
அருகில் கண்ட நீயும்
நீயில்லை அது என்று
அப்பால் சென்றாய்
நானில்லை போலும் அது
என்று நான் இப்பால் சென்றான்.
**– ரா.ஸ்ரீனிவாசன்**

எவ்விதமாய் நான்
அறியப்பட்டிருக்கிறேன்
என்பதில் இல்லை – நான்.
**– வித்யாஷங்கர்**

ராமச்சந்திரனா என்று கேட்டேன்
ராமச்சந்திரன் என்றார்
எந்த ராமச்சந்திரன்
என்று நான் கேட்கவுமில்லை
அவர் சொல்லவுமில்லை
**– நகுலன்**

எதுவும்
எழுத வேண்டாம்
நான் என்ன
சாதித்து விட்டேன்?
சமாதிக்கல் என்ன
விளம்பரப் பலகையா?
ஏதேனும்
எழுத விரும்பினால்
என் குறையை எழுதுங்கள்
அது பிறருக்கு
சிவப்பு விளக்காகும்!
இதை எழுதுகிறீர்களா?
"உன்னை
அறிய முயன்றவன்
தன்னை
அறிய தவறியவன்"
**– என்.ஆர்.தாசன்**

என்னை நோக்கி
ஒருவர் வந்தார்
எதையோ கேட்கப்
போவது போல.
கடையா? வீடா?
கூடமா? கோயிலா?
என்ன கேட்கப்
போகிறாரென்று
எண்ணிக்கொண்டு
நான் நிற்கையில்
அநேகமாய்
வாயைத் திறந்தவர்
என்னிடம்
ஒன்றும் கேளாமல்
சென்றார்
என்ன மாதிரி
உலகம் பார் இது!
**– ஞானக்கூத்தன்**

இப்போது அங்கே இல்லை நான்
நிறையப்பேர் நினைத்துக்
கொண்டிருக்கிறார்கள்
அப்படித்தான்.
இங்கே இருப்பதும் நிச்சயமில்லை
இதுவும் உண்மை.
எங்கேயும் இருக்க முடியவில்லை
மரம் போல ஒரே இடத்தில்
இருக்கவும்
கொடுத்துவைத்திருக்க வேண்டும்
வருத்தப்பட்டு பிரயோசனமில்லை
முத்திரை குத்தி
ஓய்ந்து விட்டார்கள் எல்லோரும்.
எனக்குத்தான் தெரியும்
இருக்கிற மாதிரி
இருக்கிறதன் வேதனை!
**– விக்ரமாதித்யன்**

எனக்கும் அவருக்கும்
பேச்சுவார்த்தை
இல்லாமல் போக
ஒரு காரணமும்
இல்லாவிட்டாலும்
பேச ஒன்றுமில்லாமல்
இருக்கிறது
நெடுங்காலமாக...
எவ்வளவோ
பொருட்படுத்தாமைகளுக்குப்
பிறகும்
இருவருக்கும் பொதுவாய்
இவ்வுலகில்
ஏதேனுமொரு வேடிக்கை
நிகழ்கையில் நான்
புன்னகைக்கிறேனாவென
அவரும் அவர்
புன்னகைக்கிறாராவென
நானும்
பார்க்காமலிருக்க
முடிவதில்லை...
**– மனுஷ்யபுத்திரன்**

உரசிப் போகும்
மனித முகங்களில்
எவன் சட்டைப் பையிலாவது
என் முகத்தின் பாகங்கள்
இருக்கிறதாவென
தேடித் தேடிக்
களைத்திருக்கையில் இவன்
அறிமுகமாகியிருக்கிறான்
சொந்த முகத்துடன்.
நாகரிகம் கற்றுத் தருகிறேன்
நடைமுறையில்
நளினமூட்டுகிறேன்.
யார் யாரோ வந்து
என் முகத்தைப்
பறித்துக் கொள்கையில்
இவன் முகத்தைக்
கொஞ்சம் பறிக்க
எனக்கிருக்காதா கர்வம்?
**– நிஜா**

நீ ஒரு கனவு காண்பவனெனில்
நானே உனது கனவு
ஆனால்
நீ விழித்தெழ விரும்புவாயானால்
உனது விருப்பமே நான்.
**– ரில்கே**

செதுக்குகிறோம்
நான் அவளை
அவள் என்னை
இரத்தம் சொட்டுகிறது
இதயம்
விட்டபாடில்லை
இன்னும்
செதுக்கிக் கொண்டிருக்கிறோம்
அவளுக்குப் பிடித்தவாறு என்னை
எனக்குப் பிடித்தவாறு அவளை.
**– கள்ளழகர்**

நீங்கள் யாரானால் என்ன
நான் யாரானால் என்ன
அனாவசியக் கேள்விகள்
அனாவசியப் பதில்கள்
எதையும் நிரூபிக்காமல்
சற்றே சும்மா இருங்கள்.
**– ஆத்மாநாம்**

# ஜனாதிபதி வேட்பாளர் யார்? குழப்பத்திலுள்ள காங்கிரஸ்



(புதுடில்லி)

ஜனாதிபதித் தேர்தலில் யாரை நிறுத்துவது என்ற குழப்பத்தில் காங்கிரஸ் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பெயரும், இந்நாள் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே அந்தோனி பெயரும் தீவிர பரிசீலனையில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

சில தினங்களுக்கு முன் நடந்த காங்கிரஸ் காரிய கமிட்டி குழுக் கூட்டத்தில் வேட்பாளர் குறித்து முடிவெடுக்க சோனியா காந்திக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, அரசியல் ஆலோசகர் அகமது படேல் ஆகியோருடன் தொடர்ந்து ஆலோசனையில் இருந்து வருகிறார். சில தினங்களாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி பெயரும் அடிபட்டு வருகிறது.

அடுத்த ஜனாதிபதியாக வருபவர் காங்கிரஸ்காரராக இருக்க வேண்டுமென சோனியா விரும்புவதாகத் தெரிகிறது. இதற்கு எதிர்க் கட்சிகளான பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட்களும் பெரிதாக எதிர்க்கப் போவதில்லை.

பொது வாழ்வில் தூய்மையையும், எளிமையும் கடைப் பிடித்து வரும் ஏ.கே. அந்தோனி, அனைத்து கட்சிகளாலும் விரும்பப்படக் கூடியவர். ஆகவே அவர் சிறந்த தேர்வாக இருப்பார் என சிலர் கூறிவருகின்றனர்.

தற்போதைய துணை ஜனாதிபதி ஹாமித் அன்சாரியை பாஜக எதிர்த்து வருவதால், அவருடைய பெயர் பின் தள்ளப்பட்டுள்ளது. பொருளாதாரா சிக்கலில் இந்தியா தற்போது இருந்து வருவதால் அதனை சரி செய்யாமல் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் ஜனாதிபதி பதவிக்கு வருவதை காங்கிரஸ் விரும்பவில்லை.

## நிதியமைச்சு அலுவலகத்தில் தீ; முக்கிய ஆவணங்கள் சாம்பலாகின



நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள நிதி அமைச்சக அலுவலகத்தில் நேற்று ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசமாயின.

நேற்று அதிகாலை 3.45 மணி அளவில்(இந்திய நேரம்) அலுவலகத்தின் இரண்டு அறைகளில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் 6 வான்களில் விரைந்து சென்று தீயை அணைத்தனர். ஆனால் இந்தத் தகவல் பொலிஸாருக்கு தாமதமாக கிடைக்க அதிகாலை 5.45 மணிக்கே அவர்கள் சம்பவ இடத்திற்கு சென்றனர்.

நாட்டின் முக்கியமான வரவு-செலவு திட்டத்திற்குரிய ஆவணங்கள் நிதி ஒதுக்கீடு தொடர்பான கோப்புகள் அனைத்தும் நிதி அமைச்சகத்தில்தான் இருக்கும்.

இந்நிலையில் இந்த தீ விபத்து ஏற்பட்டது மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தீயில் நாசமான கோப்புகள் விபரம், தீ எப்படி ஏற்பட்டது என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகின்றது.

# தேர்தல் ஆணையாளராக தமிழ்நாட்டவர் நியமனம்

(புதுடில்லி)

தலைமைத் தேர்தல் ஆணையர் குரேஷி பணி ஓய்வு பெறுவதால் தமிழ்நாட்டைச் சேர்ந்த வி.எஸ்.சம்பத் புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையமானது 3 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும். தற்போது தலைமை தேர்தல் ஆணையராக இருக்கும் எஸ்.ஒய்.குரேஷியும், இரு தேர்தல் ஆணையர்களாக வி.எஸ்.சம்பத்தும். எச்.எஸ்.பிரம்மாவும் இருந்து வருகின்றனர். எஸ்.ஒய்.குரேஷியின் பதவிக்காலம் வருகிற 10ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதைத் தொடர்ந்து மூத்த தேர்தல் ஆணையரான வி.எஸ்.சம்பத்தை புதிய தலைமை தேர்தல் ஆணையராக மத்திய அரசு நியமித்து உள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை ஆகும். இதில் எது முதலில் நிறைவடைகிறதோ அதுவரை அவர்கள் அந்தப் பதவியில் இருக்கலாம். வி.எஸ். சம்பத்துக்கு 2015-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் 65வயது பூர்த்தியாகும் என்பதால், அதுவரை அவர் தலைமை தேர்தல் ஆணையர் பதவியில் இருப்பார். வருகிற 2014ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தல் இவரது தலைமையில்தான் நடைபெறும்.



இந்தியச் செய்திகள்

# உயிருடன் இருந்தால் தலைவர் பதவிக்கு போட்டி

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

இன்னும் ஓராண்டு காலத்திற்கு உயிரோடிருந்தால் தலைவர் பதவிக்கு போட்டியிடுவேனென தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.க உள்கட்சி தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். அதன்படி அடுத்தவருடம் 2013ஆம் ஆண்டில் திமுகவிற்கு உள்கட்சி தேர்தல் நடைபெறும்.




இந் நிலையில் தி.மு.க தலைவர் கருணாநிதி பத்திரிகையாளர்கள் சந்திப்பில், இன்னும் ஓராண்டு காலத்திற்கு உயிரோடு இருந்தால் தலைவர் பதவிக்கு போட்டியிடுவேன் என்று கூறியிருப்பது அக்கட்சி வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே திமுக இளைஞர் அணி நிர்வாகிகள் மு.க.ஸ்டாலினே அடுத்த தலைவராக வரவேண்டும் என ஆசைப் படுவதாகவும் ஒரு தகவல் உள்ளது.

கடந்த 3ஆம் திகதி தலைவர் கருணாநிதி தனது 89ஆவது பிறந்த நாளை கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு செல்ல ராசாவிற்கு அனுமதி

ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு சென்ற மாதம் நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரும் தி.மு. க நாடாளுமன்ற




உறுப்பினருமான ராசாவிற்கு தமிழ்நாடு செல்ல சி.பி.ஐ நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. இதைத் தொடர்ந்து இன்றைய தினம் சென்னை செல்ல உள்ளார்

சென்னையில் கட்சித் தலைவர் கருணாநிதி மற்றும் நிர்வாகிகளை சந்தித்தபின் தனது சொந்த ஊரான பெரம்பலூர் மற்றும் தனது தொகுதியான நீலகிரிக்கும் செல்ல இருப்பதாக தெரிகிறது. சுமார் ஒரு வருடத்திற்கு மேல் சிறையிலிருந்து விட்டு சென்னை திரும்ப இருக்கும் ராசாவிற்கு பெரும் வரவேற்பு கொடுக்க தி.மு.க தயாராகி வருகிறது

இதனிடையே பிணையில் விடுதலையாகி டில்லியில் தங்கியிருக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் ராசாவை தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். அப்போது கனிமொழி, டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன் உள்ளிட்டோர் இணைந்து கொண்டனர்.

# கூடங்குள தடைஉத்தரவு மேலும் ஒருமாதம் நீடிப்பு

(நெல்லை)

கூடங்குளம் பகுதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள 144 தடை உத்தரவு மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகா கூடங்குளம் கடலோரத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையத்துக்கு எதிராக, அணு உலை எதிர்ப்பாளர்கள் முற்றுகை, உண்ணாவிரதம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தினர். மத்திய, மாநில அரசுகள் உத்தரவின் பேரில் கூடங்குளம் போராட்டக்காரர்கள் மீது பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்து 7 கிலோ மீற்றர் சுற்றளவில், அணுஉலை எதிர்ப்பாளர்கள் நுழைய 144 தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. இந்த தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டு உள்ளதாக நெல்லை மாவட்ட கலெக்டர் இரா. செல்வராஜ் அறிவித்துள்ளார்



**முதல்அமைச்சர் ஜெயலலிதா நேற்று தலைமைச் செயலகத்தில் 5ஆவது முறையாக உலக 'சதுரங்க' சம்பியன் வென்ற விஸ்வநாதன் ஆனந்தனுக்கு தமிழக அரசின் சார்பில் ரூபா 2 கோடி ஊக்கத் தொகைக்கான காசோலையை வழங்கி கௌரவித்தார்.**

(8ஆம் பக்க தொடர்ச்சி)

## உலகப்...

1544 ஆம் ஆண்டு, அவர் மதரீதியான நம்பிக்கை, கோட்பாடுகள் ஆகியவற்றிற்கு எதிராகச் செயல் பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார். கிறிஸ்தவ விவிலியத்தைக் காட்டிலும் புவியியலையே மேலாக அவர் கருதியதே இந்த நடவடிக்கைக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.. மெர்க்கேட்டர்,நண்பர்களுடைய உதவியால் விடுவிக்கப்பட்டபின், மதில்களுக்குள் இருந்த டுய்ஸ்பொர்க் என்ற ஜெர்மானிய நகரத்திற்குச் சென்றுவிட்டார். அங்கிருந்து ஃபிரான்ஸ், நெதர்லாந்து, பால்கன் பகுதிகள், ஏன் கிரேக்கமும் சேர்த்து பல நிலப்பகுதிகளுக்கு அவ்வவற்றின் நிலப்படங்களை எழுதினார்.

ரைன் நதிக் கரையிலமைந்த அந்தச் சிறு நகரத்தில், ஒரு மேசையிலிருந்து, "மிகுந்த நிதானமான குணமும், அசாதாரணமான அளவு வெளிப்படையான பேச்சும், உள்ளார்ந்த நேர்மையும் கொண்டவர்" என்று வருணிக்கப்பட்ட ஒரு மனிதரால், பிரெஸீல், லாப்ரெடொர், சைபீரியா, ஜப்பான் போன்ற நாடுகளின் மாறிக் கொண்டிருந்த எல்லைகளை வரையறுக்க முடிந்தது. அவர் இருந்த இடத்தை விட்டு எங்கும் செல்லவேயில்லை.

# அமெரிக்காவின் தாக்குதல்கள்; விளக்கக்கோரும் பாகிஸ்தான்.



(இஸ்லாமாபாத்)

அல்கொய்தா மீதான தொடர் தாக்குதல்கள் குறித்து விளக்கம் அளிக்க வேண்டுமென அமெரிக்க துணை தூதருக்கு பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆணை அனுப்பியுள்ளது. ஆப்கானிஸ்தானை மையமாகக் கொண்டு அமெரிக்கப் படைகள் தலிபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகளை வேட்டையாடி வருகின்றன. ஆளில்லாத விமானம் மூலம் குண்டுகளை வீச அமெரிக்காவிடம் பாகிஸ்தான் தொடர்ந்து எதிர்ப்புதெரிவித்து வருகிறது. இருப்பினும், அமெரிக்கப் படைகளின் தாக்குதல் நீடித்துக்கொண்டே செல்கின்றன.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் சி.ஐ.ஏ. இயக்கும் ஆளில்லா உளவு விமானம் மிரான்ஷா என்ற பாகிஸ்தான் பகுதியை நோக்கி 2 ஏவுகணைகளை வீசித்தாக்கியது. அதில் 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அல்கொய்தா தலைவர் பின்லேடன் மரணத்துக்குப் பிறகு அமெரிக்கா தொடர்ச்சியான குண்டுமழை தாக்குதல் மூலம் அல்கொய்தா தீவிரவாதிகளை அழித்து வருகிறது.

இந்தத் தொடர்ச்சியான தாக்குதல், பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள நட்புறவில் விரிசல் விழத் தொடங்கியுள்ளது. இந்தத் தொடர்ச்சியான தாக்குதல் குறித்து விளக்கம் அளிக்க வருமாறு பாகிஸ்தானுக்கான அமெரிக்க துணை தூதர் ரிச்சர்ட் ஹாக்லாந்துக்கு பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் ஆணை அனுப்பியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகச் செய்திகள்

# ஆயுள் தண்டனை கைதி முபாரக் மருத்துவமனையில் அனுமதி



(கெய்ரோ)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் உடல்நிலை மோசம் அடைந்ததால், சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எகிப்தில் கடந்த 30 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்தவர் ஹோஸ்னி முபாரக்(வயது 84). ஏராளமான ஊழல் புரிந்த இவர் உடனடியாக பதவி விலகக் கோரி, மக்கள் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தை ஒடுக்க இராணுவத்தினர் குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தியதில் அப்பாவி மக்கள் 800 பேர் கொல்லப்பட்டனர். கடைசியில் பதவி விலகிய முபாரக் குடும்பத்துடன் தப்பி, அருகில் உள்ள தீவில் தஞ்சம் அடைந்தார்.

இதன் பிறகு கெய்ரோ திரும்பினார். இவர் மீதும், இவரது மகன்கள் மீதும் ஊழல் மற்றும் கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கொலை வழக்கில் முபாரக்குக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மகன்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் கெய்ரோவில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முபாரக் அதை ஜீரணிக்க முடியாமல் அதிர்ச்சியில் அடிக்கடி மயங்கி விழுந்தார். அவரைச் சிறை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்துள்ளனர்.

அவருக்கு சுவாசத்துக்காக வென்டிலேட்டர் பொருத்தப்பட்டது. அவரை பரிசோதித்த மருத்துவர்கள் கூறுகையில், பெரிய பதவியில் இருந்து விட்டு ஆயுள் சிறை என்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால் மன ரீதியாக பாதிக்கப்பட்டு அவர் உடல்நிலை மோசமடைந்துள்ளது என்றனர்.

# மத்திய கிழக்கில் ஸ்திரநிலை ஏற்பட பலஸ்தீனத்திற்கு நிரந்தரத் தீர்வு

## – சர்வதேசத்திடம் துருக்கிய பிரதமர் வேண்டுகோள்



(இஸ்தான்புல்)

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழ் பலஸ்தீன மக்கள் அனுபவித்துவரும் தொடர்ச்சியான இன்னல்களே மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் ஸ்திரப்பாட்டுக்குப் பிரதான தடையாய் அமைந்துள்ளது என துருக்கியப் பிரதமர் ரஜப் தையிப் அர்தூகான் தெரிவித்துள்ளார்.

இஸ்தான்புலில் இடம்பெற்ற சர்வதேசப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அர்தூகான், மத்தியகிழக்குப் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டு இருக்கும் நிலைமையை மாற்ற வேண்டுமானால், பலஸ்தீனப் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் சர்வதேச உலகம் அதிக கரிசனை காட்டவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீன சிறுவர்கள், பெண்கள், முதியோர்கள் மீது இஸ்ரேல் இடையறாது குண்டுமழை பொழிந்துவருகிறது. பலஸ்தீன பொதுமக்களில் அனேகமானோர், உலகிலேயே மிகப் பெரிய சிறைச்சாலையான இஸ்ரேலிய ஆக்கிரமிப்புச் சிறைச்சாலையில் பல்வேறு இன்னல்களை அனுபவித்துவருகின்றனர். இந்த நிலைமை மத்திய கிழக்குப் பிராந்தியமெங்கிலும் பெரும் கோப அலையை எழுப்பியுள்ளது என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

துருக்கி அரசாங்கம் ஜனநாயக அடிப்படையில் நடுநிலையாய்ச் செயற்பட்டுவருவதன் மூலம், இப்பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்தி, உறுதியான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றிவருகின்றது என்பதையும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்

# மத்திய கிழக்கு நாடுகள் அணுவாயுதம் பெற எதிர்ப்பு

## — சீனா அறிவிப்பு

மத்திய கிழக்கு நாடுகள் அணு ஆயுதங்களைப் பெறுவதை தமது நாடு எதிர்க்கும் என சீன பிரதமர் வென் ஜியாபோ தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு விஜயம் செய்துள்ள ஈரான் ஜனாதிபதி மொஹ்மூத் அஹமதி நிஜாத்திடம், வென் ஜியாபோ இதனைத் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஈரானின் அணுத்திட்டம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதுடன், அணு ஆயுதங்களை அந்த நாடு விருத்தி செய்வதாக மேற்குலக நாடுகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

எனினும் ஈரான் விவகாரத்தை பாரபட்சமற்ற முறையில் இராஜதந்திர ரீதியில் அணுக வேண்டும் எனவும் செய்தியாளர்கள் மத்தியில் சீன பிரதமர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - சீனா தலைமையிலான ஹங்ஹாய் ஒத்துழைப்பு ஸ்தாபனத்தின் பாதுகாப்பு மாநாட்டில் ஈரான் ஜனாதிபதியும் கலந்து கொண்டுள்ளார்.

# பெண்கள் சிறுவர்கள் உட்பட 86பேர் சிரியாவில் படுகொலை

சிரியாவின் மத்திய பகுதியான ஹமா மாகாணத்தில் மீண்டும் படுகொலைகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக 86 பேர் அரச ஆதரவு படையினரால் கொல்லபட்டுள்ளதாக எதிர்தரப்பு செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

20 இற்கும் மேற்பட்ட சிறுவர்களும், 20 பெண்களும் இதில் அடங்கியுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.



எனினும் பயங்கரவாதத் தாக்குதலொன்றின் பின்னர் சிலரின் சடலங்களை படையினர் மீட்டுள்ளதாக சிரிய அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

ஹுலா நகரில் 108 பேர் படுகொலை செய்யப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துள்ள நிலையில், இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு இராணுவ தலையீடுகளை பெறுவதற்கு கிளர்ச்சியாளர்கள் முயற்சி செய்வதாக சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் அனைத்து அதிகாரங்களையும் கைமாற்ற வேண்டுமென அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற சிரிய நண்பர்கள் என்ற அமைப்பின் சந்திப்பின் பின்னர் ஹிலாரி கிளிண்டன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இடைக்கால அரசாங்கம் தலைமையில் சுயாதீனமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே சிரியாவின் நண்பர்கள் அமைப்பின் அடுத்த சந்திப்பை எதிர்வரும் ஜுலை ஆறாம் திகதி பாரிஸில் நடத்தவுள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது

# சிறுவர் மீதான வன்முறை உகண்டாவில் அதிகரிப்பு

உகண்டாவில் சிறுவர்களுக்கு எதிராகப் பாரிய குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஜோசப் கொனி மற்றும் அவரது இராணுவத்தினரால் இந்த குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் குறித்த இராணுவத்தினரால் சுமார் 600 சிறுவர்கள் கடத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடத்தப்பட்ட சிறுமிகள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஐ.நா செயலாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# அடுத்த ஐந்து வருட காலத்தில் "பேஸ்புக்" மறைந்து விடும்




பிரபல சமூக இணையத்தளமான பேஸ்புக் அடுத்த 5 அல்லது 8 ஆண்டுகளில் காணாமற் போய்விடும் என நிறுவனர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அயன் பயர் கேப்பிடல் நிறுவனர் எரிக் ஜாக்சன் கூறுகையில், யாகூ இணையத்தளத்தைப் போன்று பேஸ்புக்கும் அடுத்த 5 அல்லது 8 ஆண்டுகளில் மறைந்து விடும்.கடந்த 2000ஆம் ஆண்டில் கிடைத்து வந்த வருமானத்தில் 10 சதவீதம் மட்டுமே யாகூ நிறுவனத்திற்கு தறபோது கிடைத்து வருகிறது. எல்லா விதத்திலும் யாகூ மறைந்து விட்டது. தகவல் பரிமாற்றத்தின் முதல் தலைமுறையாக யாகூ விளங்கியது.

இரண்டாவது தலைமுறையாக பேஸ்புக் தற்போது விளங்கி வருகிறது. ஆனால் அடுத்ததாக வரும் மூன்றாவது தலைமுறையில் அனைத்திற்கும் மாற்றாக செல்போன் மட்டுமே இருக்கும்.

கடந்த பெப்ரவரி மாத அறிக்கையின் படி, 50 சதவீத உபயோகிப்பாளர்கள், பேஸ்புக் சேவையை செல்போன் மூலமாகவே பெற்று வருகிறார்கள்.எனவே 850 மில்லியன் மக்கள் பேஸ்புக்கை உபயோகித்து வந்தாலும், அந்நிறுவனம் பெரிய அளவில் இலாபம் ஈட்ட முடியாது என எச்சரித்துள்ளார்.

மேலும் உலகிலிருந்து பேஸ்புக் மறையப் போவதைத் தடுப்பதற்காக, அதன் நிறுவனர்கள் நிறைய செல்போன் நிறுவனங்கள் நடத்தி அதன் மூலம் பேஸ்புக் சேவையைத்தொடர நினைக்கலாம். ஆனால் செல்போன் நிறுவனத்தை நடத்துவதற்கும், இணையத்தள நிறுவனத்தை நடத்துவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன.

எவ்வாறு கூகுள் நிறுவனம், சமூக இணையதளமாக மாற மிகவும் போராடியதோ, அதே போல சமூக இணையத்தளமான பேஸ்புக் தன்னை செல்போன் நிறுவனமாக மாற்றிக் கொள்ள மிகவும் போராட வேண்டி இருக்கும் என ஜாக்சன் கூறியுள்ளார்.

# தற்கொலைப் போராளி

## சிறுகதை

நானும் எனது பாலஸ்தீனிய நண்பனும் உணவகம் ஒன்றில் சாப்பிட்டுக்கொண்டு இருந்த போது, நான் சாப்பிடும் வேகத்தைப் பார்த்துவிட்டு, "ஏன் தற்கொலைப்போராளி போன்று சாப்பிடுகிறாய். ஆறுதலாக சாப்பிடு" என்றான். சிறு வயதில் விடுதியில் இருந்து படித்த காலத்தில் மதிய உணவை சீக்கிரம் உண்டு விட்டு கிரிக்கெட் விளையாடச் செல்வது எனது வழக்கம். நான் மட்டுமல்ல விடுதியில் இருந்தவர்கள் எல்லோரும் இதைத்தான் செய்வோம்.

வீடுகளில் இருந்து வரும் என் வகுப்பு மாணவர்கள் தாம் கொண்டு வந்த சாப்பாட்டுடன் நேரே கிரிக்கெட மைதானத்துக்குப் போய் விடுவார்கள். நாங்கள் விடுதி மாணவர்களாக இருந்ததால் சாப்பாட்டுக்கு விடுதிக்கே போய்விட வேண்டும். எங்களது கிரிக்கெட் மட்சுகள் ஐந்து நாட்களுக்கு மேலாகத் தொடரும். சீக்கிரம் போகாவிட்டால் எமக்கு இந்துக்கல்லூரியின் மைதான சுவரில் உள்ள தூண்கள் கிடையாமல் போய்விடும். அவைதான் எங்களது விக்கெட்டாகும். சுவரானதால் விக்கெட் கீப்பர் தேவையிராது. இப்படி அவசரமாக சாப்பிடும் பழக்கம் பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்திலும் தொடர்ந்தது.

எங்கள் எல்லோருக்கும் சிறு வயதுப் பழக்கங்கள் நிழல் போன்ற விரும்பாத நேரத்திலும் விட்டுவிட முடிவதில்லை. அந்த நண்பன் என்னை தற்கொலைப் போராளியோடு ஒப்பிட்டபோது அவனது பேச்சு, எனது ஆவலைத் தூண்டியது. அவனது நாட்டில் அவர்களைப் பற்றி அவன் அறிந்திருக்கக்கூடும். அவர்களோடு அவன் பழகி இருந்திருக்கவும் கூடும்.

ரஷ்யா சென்று படித்ததால் இவனால் அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் தேடிவர முடிந்திருந்தது. எனது நாட்டிலும் தற்கொலைப் போராளிகள் இருந்திருக்கிறார்கள். அவர்களோடு நான் பேசியதோ பழகியதோ இல்லை. ஆனால் கேள்வி ஞானம் மட்டும் உள்ளது. தற்கொலைப் போராளிகள் கடைசியாக உயிரைத் தியாகம் செய்யப் போகும் முன்பு அவர்களுடைய தலைவர்களுடன் விருந்துண்ணுவார்கள். கடைசியான உணவு ஈன்ற போது இரசித்து சாப்பிடுவது தானே நியாயம்? எதற்காக அவசரப்பட வேண்டும்?

எனது சிந்தனைக்கு இந்த விடயம் முரண்பாடாகத் தெரிந்து இதைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆவல் தூண்டியது. தற்கொலைப் போராளியின் மனநிலை எப்படி இருக்கும்? தனது உயிரை விடும் போது ஏதோ ஒரு பெரிய கொள்கைக்கு அல்லது இலட்சியத்திற்கான குறைந்த பட்சமான ஒரு சிறுபடியாகவாவது பிரயோசனப்படுமென்று நினைத்திருப்பானா? இல்லை தங்கள் தலைவர் மேல் உள்ள அபிமானமா?

> அவளை மாடியில் காணும்போதெல்லாம் எனக்கு வயிற்றைக் கலக்கும். நாலுமாடிகள் கொண்ட உயரமான கட்டிடத்தில் மிகவும் ஒடுக்கமான மாடிப்படி. நான் மேலேயோ கீழேயோ செல்லும் போது சிசிலியா வராமல் இருக்க வேண்டிக் கொள்வேன்.

உயிரைப் பாதுகாக்க மனிதர்கள் எவ்வளவு காரியங்கள் செய்கிறார்கள். மரணதண்டனை விதிக்கப்பட்ட கொலைகாரர்கள் கூட, ஏதாவது விதமாக மன்னிப்புக் கிடைக்கும் என்றுதான் கடைசிவரையும் உயிர் வாழுகிறார்கள். உயிர்களைப் பாதுகாக்க நீதித் துறையும் சட்டத்துறையும் மனித நாகரீகத்தில் முக்கிய அங்கமாகின்றன. இதற்கு மேல் சுகாதாரம், மருத்துவம் என்பன காலம் காலமாக இந்த உயிரைக் காப்பாற்றுவதற்கு போராடுகின்றன.

மனித நாகரீகத்தின் வளர்ச்சி, மனித உயிரையும் அந்த உயிர் உள்ள உடலை ஆரோக்கியமாக வைப்பதையுமே இலட்சியமாக கொண்டுள்ளது. இவ்வளவு பெறுமதியான உயிரை, மயிரைப் போல் தூக்கி எறிவதற்கு மனம் துணிந்தவன் ஏன் அவசரப்பட்டு சாப்பிடவேண்டும்? இது முரண்பாடான விடயமில்லையா.

அல்லது ஒரு இலட்சியத்திற்கு தயாரானவர்கள் இலகுவாக உயிரை கொடுக்கிறார்கள் என அவன் சார்ந்த இயக்கம் வெளி உலகத்திற்கு காட்டுவதற்காக செய்யும் பிரச்சார ஏற்பாடாக இருக்குமா? இறந்தவன் துதி பாடுவதும் சமாதிகளை வழிபடுவதும் இறந்தழிந்தவன் வித்தாகி விளைவான் என பொய் பேசுவதும் கவிதை எழுதுவதும் இந்த உயிர்களை எடுப்பதற்கான பிரச்சார தயாரிப்பு தானே? போர்க்கால கவிதைகள், கதைகள் என எழுதுவது ஆய்வு செய்வதெல்லாம் யாரோ ஒரு அப்பாவியின் உயிரை எடுப்பதற்கான செயல்கள் தானே?

இதைவிட அடிப்படையான கேள்வி ஒன்றுள்ளது. தனது உடைமைகளை மதிப்பவன்தான் மற்றவரது உடைமைகளை பாதுகாப்பான். அது போல் தனது உயிரை மதிக்காத மனிதன் எப்படி மற்றவர்களது உரிமையை பாதுகாப்பதற்கு தயாராக இருப்பான்?

தற்கொலை செய்ய விரும்புபவனது முகத்தைப் பார்த்து அவனது உள் மனக்கிடக்கையை அறிந்து கொள்ள விரும்பினாலும் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.


ஆனால், ஒரு தற்கொலைப் போராளியை இயக்குபவரின் வாக்கு மூலத்தை எழுத்தில் படிக்கும் சந்தர்ப்பம் எனக்கு சமீபத்தில் எதிர்பாராதவிதமாகக் கிடைத்தது.

*** ****

84 ஆம் ஆண்டு பிறந்த நான் வவுனியாவில் படித்து விட்டு 2004 இல் கொழும்பில் கணக்கியல் படிக்கச் சென்றேன். ஆறுமாத காலத்தின் பின் கிளிநொச்சிக்கு எனது நோயுற்ற மாமாவைப்பார்க்கச் சென்ற போது அங்கே விடுதலைப்புலிகளால் பிடிக்கப்பட்டேன். ஆரம்பத்தில் ஆயுதப் பயிற்சி பெற்றேன்.

அதன் பின் எனக்கு சிங்களம் தெரிந்தது என அவர்களுக்கு தெரிய வந்ததால் விசேட படையணியில் சேர்க்கப்பட்டேன். அந்தப் படையணியில் சேர்ந்ததும் எனக்கு அரசியலவாதிகள் அதிகாரிகள் எப்படிக் கொலலப்பட வேண்டும். கொலை செய்யும் போது எப்படி அந்தக் குண்டுகளை வெடிக்கப் பண்ணவேண்டும் என்பதில் பயிற்சியளிக்கப்பட்டது.

இதை விட உளவியல் பாடங்கள், சித்திரவதையை தாங்குதல். உண்மைகளை எப்படி மறைக்கலாம். தொடர்ச்சியாக ஒருவரை அவரையறியாது தொடர்வது. மற்றவரின் நம்பிக்கையை எப்படி பெறுவது எப்படி தொடர்ச்சியாக மாற்றங்களோ தவறுகளோ ஏற்படாது பொய் சொல்லுவது என்பன சொல்லித் தரப்பட்டது. உறவினர்கள் தொடர்புகள் கடவுள் நம்பிக்கை என்பன மனத்தை கோழையாக்கும் எனக் கூறப்பட்டது. கடவுளின் படங்கள் உறவினரது போட்டோக்கள் அகற்றப்பட்டது. எனது பேர்சில் இருந்த அம்மாவின் படம் என்னைக் கோழையாக்கும் எனக் கூறி எனது பயிற்சியாளரால் அதுவும் அகற்றப்பட்டது.



இந்தப் பயிற்சிகளின் பின்பு எனது மனதில் பெரிய மாற்றம் நடந்தது போல் உணர்ந்தேன். சுற்றி இருப்பவர்களுடன் பேசவோ சிரிக்கவோ முடியவில்லை. நட்பு பாசம் என்ற உணர்வுகளை முற்றாக மறந்தேன். கனவில் கூட அம்மா அப்பா மற்றும் உறவினர்கள் வருவது குறைந்து விட்டது. இடைக்கிடை பக்கத்து வீட்டு மாமி மட்டும் கனவுகளில் வந்து போனார். அதுவும் குறைந்து விட்டது. முற்றாக உணர்வுகளை அடக்கி விட்டேனோ என வியப்பாக இருந்தது. இதைத்தான் ஞானிகள் பெற்றார்களோ? பயிற்சி முகாமில் பயிற்சியைத் தவிர்ந்த நேரங்களில் தனியாகத்தான் நேரத்தைக்கழித்தேன். நண்பர்கள் என்னுடன் பேசினாலும் மனம் விட்டு பேசுவதில்லை.

எப்பொழுதும் யாராவது ஒட்டுக் கேட்பது போன்ற நினைவு. தனியாக நான் விடப்பட்ட காலத்திலும் என்னை தொடர்ந்து யாரோ கண்காணிப்பதாக உணர்ந்தேன். வீரதீர செயல்கள் நடைபெறும் வீடியோக்களைப் பார்க்கும் போது அந்த நேரத்தில் மனதில் பெருமையடைந்தேன். மனதில் உற்சாகம் உடலெங்கும் கரைபுரண்டு ஓடுவது போல் தோன்றும். முக்கியமாக அந்தச் சண்டையில் கலந்து கொள்ளும் வீரனாக என்னை அவனது உடலில் புகுத்திக் கொண்டது போன்று எண்ணி அந்த எண்ணத்தில், கனவுகளில் உயரப் பறந்தேன். ஏதோ ஒரு உயர்ந்த இலட்சியத்துக்காக இப்படியான ஒரு சண்டையில் பங்கு பற்றி ஒரு சரித்திர நாயகனாக நான் வளர்ந்திருப்பதாக நினைபபேன்.

இந்த நேரத்தில் கொழும்புக்குச் செல்ல வேண்டும் என கட்டளை வந்தது.



நேரடியாக செல்லாமல் நுவரெலியாவில் ஒரு ஹோட்டலில் ஆறு மாதம் வேலை செய்து விட்டு கொழும்புக்குச் செல்ல வேண்டும். மட்டக்களப்புக்குச் சென்று அங்கிருந்து நுவரெலியாவுக்குச்சென்றேன். ஏற்கனவே ஒழுங்கு படுத்தியபடி எனக்கு ஹோட்டலில் வேலை கிடைத்தது. அது ஆறு அறைகளைக் கொண்ட உல்லாசப் பிரயாணிகள் தங்கும் ஹோட்டல். அங்கு உணவு பரிமாறுவது எனது வேலையாக இருந்தது.

அங்கு வேலை செய்த போது தான் எனக்கு முதலாவது காதல் அனுபவம் கிட்டியது. அந்த சில நாடகள்தான் வாழ்க்கையின் வசந்தகாலம். கற்பனைகளும் கனவுகளும் பூத்துக் குலுங்கியதால் கொலை குண்டு இரத்தம் என்பதை மறந்து இருந்தேன்.

அங்கு சமைப்பதற்கு வரும் சிசிலியாவுக்கு என் மேல் காதல் வந்தது. அவளது கண்களும் பேச்சும், மரத்துப் போய் இருந்த உணர்வுகளுக்கு நீர்ப்பாசனம் செய்தன. எனக்கு சிங்களம் தெரிந்ததால் அவள் என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்று தனது குடும்பத்தினரை அறிமுகப்படுத்தினாள். தகப்பன் உடப்புசல்லாவ பகுதியில் ஒரு விவசாயி. நல்ல சனங்கள். அவர்களோடு நான் பேசுவதும் பழகுவதும் போலித்தனமானது என்பது புரிந்தது. இயக்கத்தில் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதற்காக எனக்கு வழங்கப்பட்ட பயிற்சியால் எனது உறவும் பேச்சும் அவர்களுக்கு என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை.

என் மேல் சிசிலியா கொண்ட காதலை இயக்கத்தில் மட்டக்களப்பில் இருந்து என்னைக் கொன்றோல் பண்ணுபவருக்கு அறிவித்த போது, இன்னும் இரண்டு மாதம் வரை தொடர்ச்சியாக காதல் பண்ணச்சொல்லி தகவல் வந்தது. சிசிலியாவுடன் எனக்கு உண்மையான அன்பு ஏற்பட்டதற்கு காரணம் அவளது அப்பாவித்தனம்தான். எனது காதலை முத்தத்துக்கு மேலாக நான் கொண்டு செல்லப் பயந்தேன்.

ஒரு நாள் உல்லாசப்பிரயாணியாக வந்த வெள்ளைக்காரருக்கு அவர் தங்கியிருந்த அறையில் பியரைக்கொண்டு போய் கொடுத்துவிட்டு வரும் போது மாடிப்படியில் எனது கையைப் பிடித்துக் கொண்டு என் உதட்டில் அவள்தான் முதல் முத்தம் கொடுத்தாள். அவளது முத்தத்தால் சிலிர்த்துப் போய் நான் அந்த இடத்தில் உறைந்து போய் விட்டேன்.

இதன் பின்பு அவளை மாடியில் காணும்போதெல்லாம் எனக்கு வயிற்றைக்கலக்கும். நாலுமாடிகள் கொண்ட உயரமான கட்டிடத்தில் மிகவும் ஒடுக்கமான மாடிப்படி. நான மேலேயோ கீழேயோ செல்லும் போது சிசிலியா வராமல் இருக்க வேண்டிக் கொள்வேன்.

கொழும்புக்கு போகும்படி வந்த உத்தரவு அவளிடம் இருந்து என்னைக காப்பாற்றினாலும் பெரிய இழப்பாக இருந்தது. அவளிடம் வெளிநாடு ஒன்றுக்குப் போக சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும், அங்கிருந்து உனக்கு கடிதம் எழுதுவேன் என்றும் கூறி விடைபெற்ற போது கண்ணீருடன் விடை தந்தாள். எப்பொழுதும் பொய சொல்லுவது இலகுவாக இருந்த எனக்கு அன்று மட்டும் மிகவும் கடினமாக இருந்தது. கொழும்பு வந்து சேரும் வரையும் பஸ்சில் அழுதபடி வந்தேன். (தொடரும்....)

– நடேசன்

# வன்னிப் பிரதேச ஆசிரியர்களுக்காக யாழ்.நகரில் இருந்து பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வன்னியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்காக யாழ்.நகரில் இருந்து விசேட பஸ் சேவைகள் எதிர்வரும் திங்கள் முதல் நடைபெறவுள்ளது.

இச்சேவை இரண்டு பிரிவுகளாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தினமும் போக்குவரத்து செய்யும் ஆசிரியர்களின் நன்மை கருதி காலை 6.00 மணிக்கு யாழ்.நகரிலிருந்து புறப்படும் பேருந்துகள் குறித்த பாடசாலைகள் வரை பயணித்து மீளவும் அதே தினம் பி.ப. 3.00 மணிக்கு குறித்த பாதை வழியாக யாழ். நகரப் பகுதியினை பி.ப.5.00 மணிக்கு வந்தடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வார இறுதி நாட்களில் பயணம் செய்யும் ஆசிரியர்களின் நன்மை கருதி திங்கட்கிழமை காலை 5.00 மணிக்கு யாழ்.நகரப் பகுதியிலிருந்து புறப்படும் பேருந்துகள் குறித்த பிரதேசங்களை சென்றடைவதோடு வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அப்பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அதே பாதை வழியாக வந்தடையப் போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாம் இலக்க பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு பூநகரி, பரமன்கிராய், பூநகரி ம.வி. செம்பன்குன்று, ஜெயபுரம் ம.வி., கிராஞ்சி, வேரவில் ஊடாக காலை 8.00 மணிக்கு வலைப்பாடு சென்றடைவதோடு மீண்டும் அதே பாதை வழியாக பி.ப.3.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்.நகரப் பகுதியினை பி.ப. 5.00 மணிக்கு வந்தடையும்.

இரண்டாம் இலக்கப் பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு பரந்தன் சந்தி வரை பயணித்து முல்லைத்தீவு வீதி, சென். அன்ரனீஸ் ம.வி., முரசுமோட்டை, கண்டாவளை ம.வி., நாகேந்திரா வித்தியாலயம். கட்டைக்காடு, நாகேஸ்வரி வித்தியாலயம், தர்மபுரம், சுண்டிக்குளிச்சந்தி, கல்லாறு, பிரான்பற்று, அம்பிகை வித்தியாலயம் ஊடாக காலை 8.00 மணிக்கு குமாரசாமிபுரம் சென்றடைவதோடு மீண்டும் அதே பாதை வழியாக பி.ப. 3.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்.நகரப் பகுதியினை பி.ப. 5.00 மணிக்கு வந்தடையும்.

மூன்றாம் இலக்கப் பேருந்து பருத்தித்துறையிலிருந்து காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு பரந்தன் சந்தி வரை பயணித்து முல்லைத்தீவு சென்றடைவதோடு மீண்டும் அதே பாதை வழியாக பி.ப.3.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்.நகரப் பகுதி ஊடாக பருத்தித்துறையினை வந்தடையும்.

நான்காம் இலக்க பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து திங்கட்கிழமை மு.ப.5.00 மணிக்குப் புறப்பட்டு பூநகரி ஊடாக மு.ப.8.00 மணிக்கு மன்னார் சென்றடையும். மீண்டும் அதே பாதை வழியாக வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்.நகரப் பகுதியினை பி.ப.5.00 மணிக்கு வந்தடையும்.

ஆறாம் இலக்க பேருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து திங்கட்கிழமை காலை 5.00 மணிக்குப் புறப்பட்டு மாங்குளம் ஊடாக காலை8.00 மணிக்கு துணுக்காய் சென்றடையும். மீண்டும் அதே பாதை வழியாக வெள்ளிகிழமை பி.ப.2.00 மணிக்குப் புறப்பட்டு யாழ்.நகரப் பகுதியினை பி.ப. 5.00 மணிக்கு வந்தடையும்.

வடமராட்சி பிரதேசத்தினைச் சேர்ந்த ஆசிரியர்கள் மூன்றாம் இலக்கப் பேருந்தில் பயணம் செய்துகொடிகாமம் சந்தியில் தமது பயணப் பாதைக்கு ஏற்றவாறு உரிய பேருந்துகளில் பயணிக்க முடியும். இவ்விசேட பேருந்து சேவைகள் மூலம் ஆசிரியர்களின் பயணம் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கு கூடுதலான நேரம் பாடவேளைகளை கற்பிப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பேருந்து சேவைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இச்சேவையினை குறித்த வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

# சான்றோர் கௌரவிப்பு வேலணையில் கோலாகலம்

(வேலணை)

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் ஆதரவில் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை சான்றோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு நிலையத் தலைவர் க.இராசலிங்கம் தலைமையில் நிலைய மண்டபத்தில் சான்றோர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. அமரர்களான பண்டிதர் கா.பொ.இரத்தினம்-பா.உ, ஆ.தில்லைநாதப் புலவர், ஐ. பொன்னையா, பிரபல நொத்தாரிசுகளான வி.சேதுகாவலர், க.சுப்பிரமணியம், வித்துவான் சைவப்புலவரான க.வேந்தனார், பண்டிதரும் அதிபருமான க.இராசையா, கவிஞர் தில்லைச்சிவன் என்றழைக்கப்படும் தி.சிவசாமி, நா.இராமச்சந்திரன் ஆகியோர்கள் சான்றோர்களின் நிலைகளில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

முருகமூர்த்தி ஆலயத்தில் அவர்களின் நிழல்படங்கள் வைக்கப்பட்டு அங்கிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு சனசமூக நிலைய மண்டபத்தில் சுவரில் பதியவைத்து பெரியோர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்ட பின் ஒவ்வொருவர்களினதும் சேவைகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. வேலணை மத்திய கல்லூரி அதிபர் சி.கிருபாகரன், தீவகக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ப.ஆருரன், யாழ். தேசிய கல்லூரி விரிவுரையாளர் எஸ்.பிரபாகரன், இளைப்பாறிய அதிபர்களான பொ.நடராசா, பொ.சிவலிங்கம், ப.தேவநாதன், திருமதி இந்திராணி சிவதாஸ் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர். (05)

# கரிசனைமிக்க விடயங்கள் குறித்து திருப்திகரமான பேச்சு

(லண்டன்)

கரிசனைமிக்க பல விடயங்கள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் தாம் திருப்திகரமான பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய மகாராணியின் வைரவிழா நிகழ்வில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதியுடன் இலண்டனுக்கு வந்திருந்த பீரிஸை பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்புத் தொடர்பில் வில்லியம் ஹேக் தனது உத்தியோகபூர்வ "டுவிற்றர்" பக்கத்தில் வெளியிட்டுள்ள தகவலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் கரிசனைக்குரிய சகல விவகாரங்கள் தொடர்பிலும் உறுதியாகவும் வெளிப்படையாகவும் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் தனது டுவிற்றர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## முதியவர்களுக்கு...

ஒன்றை நிர்மாணிப்பதற்கான நிதியுதவிக்குரிய காசோலை வழங்கும் நிகழ்வு இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி சமூக நலத்திட்டம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## கர்ப்பிணித் தாய்மார்...

மேற்கொண்ட வைத்தியரிடம் இறந்தவர் தொடர்பாக உறவினர்கள் காரணம் கேட்டபோது அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொண்ட போது வலி நோய் ஏற்பட்டு இறந்து விட்டதாகத் தெரிவித்தார்.

குறித்த கர்ப்பவதிப் பெண்ணுக்கு உயர் இரத்த அழுத்தம் காணப்பட்டுள்ளது. அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட வேளை அவசர சிகிச்சைப் பிரிவில் குறித்த கர்ப்பவதியை ஏற்கனவே பரிசோதனை மேற்கொண்ட வைத்தியர் குறித்த நோயாளிக்கு இரத்த அழுத்த நோய் இருப்பது தொடர்பாக உரிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவில்லை.

இவ்வாறு அசமந்தப் போக்குடன் கவனயீனமாக வைத்தியர்கள் சிகிச்சை மேற்கொள்வது பலரையும் அச்சம் கொள்ள வைத்துள்ளது. சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் முன்பு தாய் மற்றும் சேய் தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொண்டு மருத்துவ அறிக்கைகளை பரிசீலித்த பின்னரே சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்பது பொதுவான மருத்துவக் கோட்பாடாகும். ஆனால் இது பின்பற்றப்படவில்லை.

தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெறாதிருக்க வேண்டுமானால் ஏற்பட்ட மரணம் தொடர்பான விரிவான விசாரணை மேற்கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெறும் மரணங்கள் தொடர்பாக திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி நீதிமன்றில் அறிக்கை சமர்ப் பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு வைத்தியர்களின் அசமந்தப் போக்கினால் ஏற்படும் மரணங்கள் தொடர்பாக நீதிமன்றம் மற்றும் வைத்தியசாலை நிர்வாகம் தீர்க்கமான விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் இறந்த தாய்மாரின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எஸ்,பா)

## மனித உரிமை...

நல்லிணக்கத்தை அடைய முடியாது எனவும் நியமன அங்கீகாரத்திற்கான செனட்குழு விசாரணையின் போது அவர் கூறினார்.

வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவப் பிரசன்னம் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடி யேற்றத்திற்கு தடையாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக முன்னாள் யுத்த வலயங்களில் இராணுவக் குறைப்பு மற்றும் வடபகுதியின் மாகாண சபைத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பது உள்ளிட்டவை தொடர்பில் இலங்கையின் தற்போதைய அறிக்கையை அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் மிசேல் சிஸன் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை விவகாரங்கள், சிவில் சமூகப் பாதுகாப்பு, ஊடக சுதந்திரம் ஆகியன எனது நிகழ்ச்சி நிரலில் முன்னிலையில் இருக்கும் எனவும் அவர் கூறினார். இலங்கையில் அமெரிக்காவின் வர்த்தகத்திற்கு தான் தீவிர ஆதரவாளராக இருப்பார் எனவும் மிசேல் சிஸன் கூறினார்.

## வடக்கில்...

அரசாங்கம், அரச அதிகாரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் உட்பட அனைவ ரும் நடடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக மாகாண அமைச்சர் சுபைர் தெரிவித்தார். கிழக்கு மாகாண சபையில் ஏகமானதாக நிறைவேற்றப்பட்ட இந்த பிரேரணை, அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சனல்-4...

சிராணி சபாரட்ணமும், அவரது கணவரும், பல முறை இலங்கைக்கு சென்று, சுற்றுலா தொடர்பான திரைப்படம் ஒன்றை தயாரிக்க போவதாக கூறினாலும் அப்படியான திரைப்படங்கள் எதுவுமில்லை என அந்த தகவல்கள் கூறின. இவர்கள் பல முறை, பல்வேறு கடவூச்சீட்டுகளை பயன்படுத்தி இலங்கை சென்றிருந்ததை, பிரித்தானியாவின் எம்.ஐ.6 புலனாய்வு பிரிவும் அறிந்தி ருந்ததாக தெரிய வருகிறது எனவும் திவயின கூறியுள்ளது.

## தெரிவுக்குழுவில்...

உறுப்பினர் இரா.யோகராஜன் தெரிவித்தார். அந்தத் தெரிவுக் குழுவில் தமது கட்சி பங்குபெற வேண்டுமானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளக் கூடிய ஒரு சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.தே.க.வின் தலைவர் கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு இதுவரை அரச தரப்பிலிருந்து எந்த பதிலும் இல்லை என்பதாலேயே இந்த முடிவு எட்டப்பட்டதாகவும் யோகராஜன் கூறுகிறார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும், அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்துக்களுக்கு அரசு இணங்கினால் தமது கட்சி இந்தக் குழுவில் இடம்பெறலாம் என்று தெரிவித்திருந்தார் எனவும் யோகராஜன் சுட்டிக்காட்டினார்.

ஆனால், அரச தரப்பு இதுவரை இது தொடர்பில் நேரடியான ஒரு பதிலை வழங்கவில்லை என்றும், அப்படியான ஒரு பதிலை அரசாங்கம் வழங்கும் வரை, தெரிவிக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி பங்குபெறுவது குறித்த முடிவை எடுக்க முடியாது என்று கட்சி தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தெரிவுக் குழுவில் பங்கு பெறுவது தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் இதுவரை எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதையும் யோகராஜன் தெரிவித்தார். இனப் பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பில், ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்யாமல், அரசியல் செய்கிறது என்று கூறப்படும் விமர்சனங்களும் நியாயமற்றவை என்றும் யோகராஜன் கூறுகிறார்.

பல ஆண்டுகளாக நீடித் திருக்கும் இனப்பிரச்சினைக்கு முடிவு காண அரசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் முன்வைக்கும் எந்த ஒரு தீர்வுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி தடையாக இருக்காது என்பதை தமது கட்சி பகிரங்கமாகவே தெரிவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## பொன்சேகா

கட்சிக்காரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி உபுல் ஜயசூரிய குறிப்பிட்டார். இராணுவத்தை விட்டுச்சென்றவர்களுக்கு அடைக்கலம் வழங்கியமை, அரசாங்கத்தின் மீதான அவர்களின் விசுவாசத்தை சீர் குலைப்பதற்குச் சதிசெய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சரத் பொன்சேகா மற்றும் சேனக ஹரப்பிரிய டி சில்வா ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நீதிமன்றத்தில் ஆஜராகி, வாக்குமூலம் அளிக்குமாறு இந்த வழக்கின் முதலாவதும், மூன்றாவதும் சாட்சியாளர்களுக்கு அறிவித்தல் விடுக்குமாறு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

# கோவையில் ஆர்ப்பாட்டம் நாடு திரும்பினார் அமைச்சர் கூரே



(சென்னை)

தமிழ்நாடு கோவையில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிறுவன நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற விவசாயத் துறை அமைச்சர் ரெஜினோல்ட் கூரே, ம.தி.மு.க உட்பட சில கட்சிகள் மற்றும் தமிழ் அமைப்புக்களின் எதிர்ப்பின் விளைவாய் அந்த நிகழ்ச்சியில் பங்கு பெறாமல் நாடு திரும்பிவிட்டார்.

நேற்று நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் பங்குபெற்றவென புதனன்று கோவை சென்றிருக்கிறார் அமைச்சர். கரும்பு ஆராய்ச்சி நிறுவன நிகழ்ச்சி குறித்து அறிந்த அமைப்புக்கள், அவருக்கெதிராக ஆர்ப்பாட்டம் நீடத்தப் போவதாக ஊடகங்களுக்குத் தெரிவிக்க பொலிஸாரின் ஆலோசனையின்பேரில் நேற்றுக் காலையே சென்னை ஊடாக கொழும்பு திரும்பினார்.

அமைச்சர் நாடு திரும்பிய செய்தி தெரியாத ஆர்வலர்கள் அவர் தங்கியிருந்த ஹொட்டலின் முன்பும், மத்திய ஆராய்ச்சி நிறுவனம் முன்பும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியபோது 50 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஜனவரியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினர் திருக்குமரன் நடேசன் ஆலய வழிபாட்டிற்காக இராமேஸ்வரம் சென்றபோது கடும் எதிர்ப்பு கிளம்பியதையும், தொடர்ந்து தமிழக முதல்வர் ஜெயலலிதா எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல், தனது அரசிற்குத் தெரிவிக்காமல் இலங்கை பிரமுகர்கள் தமிழகம் வருவதைத் தவிர்க்கவேண்டும் என வலியுறுத்தி பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடையாள அட்டையை கணவரின் பெயருக்கு மாற்ற கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருமணம் முடித்த பெண்கள் தமது அடையாள அட்டைகளை கணவரின் பெயரில் மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவுகளை மேற்கொள்ளும் போது திருமணம் முடித்த பெண்கள் பி.சி படிவத்தில் பெயர் திருமதி எனப் பதிவு மேற்கொள்ளும் போது அடையாள அட்டையில் செல்வி என்று பதியப்படுமிடத்து இரட்டைப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் வாக்காளர் இடாப்பில் பெயர் மாற்றங்கள் மற்றும் இரட்டைப்பதிவுகள் இடம்பெறுவதை தவிர்க்க முடியும்.

எனவே திருமணமான பெண்கள் தமது கணவரின் பெயரில் தேசிய அடையாள அட்டையை விண்ணப்பித்து பெற்றுக்கொண்டால் பல்வேறு இடங்களில் இடம்பெறும் சந்தேகங்களை தவிர்ப்பதற்கு இலகுவாக இருக்குமெனவும் உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# ஆசிரியையின் சங்கிலி அறுப்பு

வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியை ஒருவரின் தங்கச்சங்கிலி நேற்றைய தினம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுக்கப்பட்டது. நாவலர் வீதி, கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் மாலை 3.00 மணியளவில் குறித்த ஆசிரியை தனிமையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் சங்கிலியை அறுத்துள்ளனர்.

அவ்வேளையில் ஆசிரியை கூச்சலிட்டதைத் தொடர்ந்து அயலிலுள்ளவர்கள் ஓடிவந்துள்ளனர். மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு இல்லாமல் கறுப்பு தகட்டில் வெண்கட்டியினால் எழுதப்பட்டிருந்ததாக பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

முக்கால் பவுண் நிறையுடைய சங்கிலியே கொள்ளையர்களால் அறுக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் ஆசிரியை யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவத்தினால் சிறிது நேரம் அவ்விடத்தில் பதற்றம் நிலவியது. இதேவேளை கைலாசப்பிள்ளையார் கோயிலின் சுற்றாடலில் இரவு வேளையில் சிலர் கூடியிருந்து மது அருந்துவதாகவும், இச்சம்பவமானது ஆலயச்சூழலின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# நீதிமன்றக் கட்டளையை மீறியவர் மீண்டும் விளக்கமறியலில்

(திருநெல்வேலி)

பண மோசடி தொடர்பாக கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒருவர் நீதவான் மா.கணேசராஜாவினால் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நல்லூர், முடமாவடி, இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த மாணிக்கம் தனபாலசிங்கம் என்பவர் கடந்த 2010 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24 ஆம் திகதி 4 இலட்சம் ரூபா பணத்தை ஒருவரிடம் பெற்றுக்கொண்டு அவரை ஏமாற்றி மோசடி செய்ததாக கோப்பாய் பொலிஸாரினால் குற்றம் சாட்டப்பட்டு யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட சந்தேகநபர் பெற்றுக்கொண்ட பணத்தை தான் சிறிது சிறிதாக திரும்பக் கொடுத்து விடுவதாக உறுதியளித்து சில மாதங்கள் பணத்தை செலுத்தி வந்தார். பின்னர் பணத்தை கொடுக்காமல் 2011 ஆம் ஆண்டில் திடீரென்று தலைமறைவானார். இவர் மீது யாழ். நீதிமன்றம் பகிரங்க பிடியாணை பிறப்பித்திருந்தது.

கடந்த வருடம் மே மாதம் 17 ஆம் திகதி இவர் மீது மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 40 ஆயிரம் ரூபா பணத்தை ஒருவரிடம் பெற்றுக் கொண்டு அவரை ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இன்னொரு வழக்கில் 2 இலட்சத்து 66 ஆயிரத்து 238 ரூபாவை மற்றொருவரிடம் பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இவரது இளைய மகனும் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டிருந்தார்.

மற்றொரு மூத்த மகனுக்கு எதிராகவும் வேறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த மாணிக்கம் தனபாலசிங்கம் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (137)

# வெள்ளவத்தையில் மினி சூறாவளி

(கொழும்பு)

வெள்ளவத்தை பகுதியில் நேற்றுக் காலை வீசிய மினி சூறாவளி காரணமாக வெள்ளவத்தையிலுள்ள மோசடி பணியக கட்டடத்தின் கூரை உடைவடைந்து பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த மினி சூறாவளி காரணமாக ப்ல வீடுகள் மற்றும் கோயில் ஒன்றும் சேதமடைந்தன.

காயமடைந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் தற்போது சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடும் மழை பெய்து பின்னர் காலநிலை சீரடைந்தது.

# மணல் திருட்டு குற்றச்சாட்டு பிணை மனு நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை பகுதியில் சட்ட விரோத மணல் அள்ளிய மூவரின் பிணையினை நிராகரித்து தொடர் விளக்கமறியலில் வைக்க யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி அரியாலை புகையிரதப் பாதையில் குவிக்கப்பட்டிருந்த மணலை உழவு இயந்திரத்தில் அள்ள முற்பட்ட வேளை மூவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கட்டளையிட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பிணை மனு தொடர்பான விண்ணப்பத்தினை யாழ். மேல் நீதிமன்றில் தொடருமாறு உத்தர விட்டார். (எஸ்,137)

# பல்கலைக்கழக ஊழியர்களின் தொடரும் பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பு நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பளக் குளறுபடிகளுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட கோரிக்கைகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியத்தின் இணைத்தலைவர் ஆர்.எம்.சந்தர பால குறிப்பிட்டார்.

தங்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார். கல்விசாரா ஊழியர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகள் செயலிழந்துள்ளதுடன், எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் விரிவுரைகள் இடம்பெறவில்லை என, பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியத்தின் இணைத்தலைவர் தெரிவித்தார்.

இதுபோன்ற நடவடிக்கைகளை தாம் விரும்பாத போதிலும் தமது கோரிக்கைகளுக்கு நிர்வாகத்தினர் உரிய தீர்வினைப் பெற்றுத் தர எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை மிகவும் கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பணமோசடி குற்றச்சாட்டு மேலும் இருவர் வழக்குத் தாக்கல்

ஏற்கனவே பண மோசடி குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அக்கரைப்பற்றைச் சேர்ந்த மொகமட் அஷ்மி கபூர் என்பவர் மீது மேலும் 2 இளைஞ்கள் யாழ். நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கைதடியைச் சேர்ந்த இவ்விளைஞர்களில் ஒருவர் 5 இலட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபாவையும் மற்றையவர் 5 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவையும் குறித்த நபர் தம்மிடமிருந்து பெற்றுக்கொண்டார் எனவும் பின்னர் தம்மை வெளிநாட்டுப் பட்டப் படிப்புக்கு அனுப்பாமல் ஏமாற்றியதாகவும் அந்நபர் மீது குற்றம்சாட்டியுள்ளனர்.

ஏற்கனவே 8 பேர் இவர் மீது தாக்கல் செய்த எட்டு பணமோசடி வழக்குகளில் இவர் யாழ். நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (137)

# விடுதலை செய்ய வேண்டிய சூழ்நிலை அதனால் விடுவிக்கப்பட்டேன்



(கொழும்பு)

பலரதும் தேவையின் நிமித்தம் சில காலங்களாக சிறைவாசம் அனுபவித்த போதிலும் என்னை விடுதலை செய்ய வேண்டிய சூழ்நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் என்னை விடுதலை செய்துவிட்டார்கள் என்று முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை விரும்பும் இலங்கையர்களதும் உலகவாசிகளினதும் அழுத்தங்களின் நிமித்தமே எனக்கு இந்த விடுதலை கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற வீரர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அரசுக்கு எதிராக சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இருப்பினும் சேனக டி சில்வா சுகவீனம் காரணமாக மன்றில் சமுகமளிக்கவில்லை. இதனால் இந்த வழக்கு விசாரணையினை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதிபதி உத்தரவு வழங்கினார்.

நீதிமன்றுக்கு சமுகமளித்திருந்த சரத் பொன்சேகா, அங்கிருந்து வெளியேறும் போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

# மயிரிழையில் தப்பிய குழந்தை



யாழ்ப்பாணம் பலாலி வீதி பேபி ஸ்ரூடியோ சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று மாலை 6.00 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில், யாழ்ப்பாணத்தில் இருந்து கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் உள்ள தனது வீட்டிற்கு ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் வந்தவர் வீடு நோக்கித் திருப்பமுற்பட்டபோது, அதே வீதியால் பின்னால் வந்துகொண்டிருந்த ஹீரோ ஹொண்டா வகை மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது

விபத்தின்போது ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த குழந்தைக்கு சிறிய காயம் ஏற்பட்டதுடன், தகப்பனாரும் சிறு காயங்களுக்குள்ளானார். (கிரு-சிகரம்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.